

கல்கி
KALKI
24.5.1964
30 காசு





மகிழ்ந்து விளையாடும் நேரம்— உட்வர்ட்ஸுக்கு நன்றி

மந்தம், புளிப்பு, உப்புசம் மற்றும் பல்முளைக்கும்போதுள்ள உபாதைகளிலிருந்து உடனடி நிவாரணம்பெற உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர் உபயோகியுங்கள்.

இது 100 வருடங்களாக புத்திசாலிகளான தாய்மார்களால் உபயோகிக்கப் பட்டு வருகிறது

Aiyars ATC-456-TAM

கல்கி

பொருளடக்கம்

குரோதி, வைகாசி 11 ★ மே 24


''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே



மூஷிகர் : ஹரிகதைகள் மூலம் மகாராஷ்டிர சர்க்கார் பிரசாரம் செய்யத் தீர்மானித்துள்ளனர். சோஷலிஸமே நாட்டுக்கு நல்லது என்று இப்போதே காங்கிரஸ் தலைவர்கள் கதை அளந்து கொண்டுதானே இருக்கிறார்கள்? ஹரிகதா காலட்சேபம் வேறு எதற்கு?






PK
லஞ்ச ஊழல்
சதாசார சமிதி
புலியைப்பிடிக்க எலிப்பொறி
காங்கிரஸ்
19-வது திருத்தம்



மலர் 23

தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

இதழ் 43

தெய்வங்களில் ஒரு மனிதர்

சாமானிய மானுடர்களிடம் காண முடியாத அளப்பரும் அன்பையும், அறிவையும், ஆற்றலையும் பெற்றிருந்து அதனால் அரிய சாதனைகள் புரிபவர்கள் அவ்வப்போது உலகில் தோன்றியிருக்கிறார்கள். மானுட இயல்புக்கு மேம்பட்ட அவர்களது பெருமையை எண்ணி நாம் வியக்கிறோம். 'இவர்களை மக்களோடு வைத்து மதிக்கக்கூடாது; இவர்கள் எல்லையற்ற சக்தி பொருந்திய தேவருடனே வைத்துப் போற்றப்பட வேண்டியவர்கள்' என்று கருதுகிறோம். அவர்களை மானுடர்களுக்குள் ஒரு தெய்வம் என்று ஏத்துகிறோம்.

அப்படியானால் மனிதத்தன்மை வேறு, தெய்வத்தன்மை வேறா? சொல்வதற்கில்லைதான். ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளாகிய ஸ்ரீமத் சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசாரிய ஸ்வாமிகளைத் தரிசித்த யாரும் மனிதத் தன்மையைத் தெய்விகத்திலிருந்து பிரித்துச் சொல்வதற்கில்லைதான். ஏனெனில், மானுடருக்குள் தெய்வமாக வாழ்ந்த பல மகான்களிடையே தெய்வங்களில் ஒரு மானுடராக வாழ்கிறார் ஸ்ரீ காமகோடி ஜகத்குரு.

அறிவாலும், தவம் யோகம் முதலிய அப்பியாசங்களாலும், அவற்றின் வழியே பெற்ற அநுபூதியாலும் அவர் சாமானிய மானுடர்களுக்கு எவ்வளவோ மேம்பட்டு தேவரானவர். இதில் ஐயமில்லை.

என்றாலும் ஸ்ரீ ஜகத்குருவைத் தரிசிக்கும்போது அறிவுக்கும், தவத்துக்கும், யோகத்துக்கும் மேலாக ஏதோ ஒன்றையே தெள்ளத் தெளியக் காண்கிறோம். அவரைக் கண்டதும், 'பீடாதிபதிகளைக் கண்டோம்; ஞானநிபதியைக் கண்டோம்; தபோ நிதியைக் கண்டோம்' என்ற எண்ணங்களுக்கு மேலாக, 'ஓர் உண்மை மனிதரைக் கண்டோம்' என்ற எண்ணமே எழுகிறது.

மனிதத்தன்மை என்ன என்று யாரும் இலக்கணம் கூறிவிட முடியாது. ஆண்டவனின் இயல்புக்கு இலக்கணம் கூறுவதுபோல்தான் அது. அநுபவத்தால்தான் ஆண்டவனைப் புரிந்துகொள்ள முடியும். அதே போல் ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளின் தரிசன அநுபவத்தால் 'மனிதத்தன்மை இதோ வாழ்கிறது' என்று புரிந்துகொள்ள முடிகிறது. அதே சமயத்தில் இன்னோர் அற்புதத்தையும் உணருகிறோம். அமாநுஷிக மானவற்றிலேயே தெய்விகத்தைத் தேடிய நாம், எளிமையிலும் எளிமையான இந்த மனித மலரின் மணத்திலும், மென்மையிலும், அதில் ஊறும் மதுரத்திலுமே தெய்விகத்தை நுகர்கிறோம். மனிதனுக்குள் தெய்வம் வாழ்கிறது என்பதே போல், மனிதத் தன்மைக்குள் தெய்விகம் வாழ்கிறது என உணருகிறோம்.

வட்டத்தை எந்தப்புறம் திருப்பி வைத்தாலும் மேல் கீழாகவும், கீழ் மேலாகவும் மாறும்; வட்டம் வட்டமாகவே இருக்கும். இப்படியே எது மனிதத் தன்மை எது தெய்விகம் என்று சொல்ல முடியாமல் இரண்டும் ஒன்றையொன்று வளைந்துக் கவ்விக் கொண்டிருக்கும் வகையில் வாழ்க்கையைப் பூரண வட்டமாக நிறைவு செய்து வாழ்பவர் ஸ்ரீ காமகோடி ஜகத்குரு.

ஸ்வரங்களை வரிசைக்கிரமமாக உயர்த்தும் ஆரோகணத்துடன் சங்கீதம் முடிவதில்லை. உச்ச ஸ்வரத்திலிருந்து படிப்படியாகக் கீழே கொண்டுவரும் அவரோகணமும் சேர்ந்தே சங்கீதம் பிறக்கிறது. மனிதத்தன்மை என்று நாம் எண்ணியிருக்கும் நிலையிலிருந்து, தமது வித்யை, சாதனை, ஆராதனை இவற்றின்மூலம் தெய்விகத்துக்கு ஆரோகணித்தவர் ஆசாரியர். ஆனால் தெய்விகம் கூடியபின் உச்ச ஸ்தாயியிலேயே

நில்லாமல் தெய்விக சாரத்தை மானுட நிலைகளுக்கு ஊட்டி மீண்டும் இறங்கி வந்து மனிதராக வாழ்கிறார். உச்சநிலை எய்தியவர் நம் எல்லோருடையநானாவித நிலைகளுக்கும் இறங்கி வந்து நம்மைக் கைப்பிடியாகப் பிடித்துப் படிப்படியாக மேலே இட்டுச் செல்கிறார். இமயத்தின் உச்சியில் மானஸ சரோவரத்தில் பிறக்கும் கங்கா மாதா கீழ் மட்டங்களையே தேடித் தேடிப் பாய்ந்து உலகுக்குப் பயனாவது போல் ஆத்மாநுபவத்தின் சிகரத்தை எய்தியவர் உலக மக்களிடையே அவர்களில் ஒருவராகச் சஞ்சரித்து அவர்களைப் பண்படுத்தி வருகிறார். தாழ் மட்டத்தை நோக்கி ஓடினாலும் கங்கை கங்கைதானே! இவ்வாறேதான் ஸ்ரீ ஜகத்குரு ஆத்மிகம் சிறிதும் குன்றாமலே உலகத்தோடு இணைந்திருக்கிறார். தவத்துக்கும், பூஜைக்கும், அறிவு ஆராய்ச்சிக்கும் எவ்வளவு பொழுது செலவிடுகிறாரோ அதைவிட அதிகமாகவே பொது மக்களுக்குத் தரிசனம் தருவதிலும், அவர்களிடம் உரையாடுவதிலும் அவர் செலவிடுகிறார். உரையாடல் என்றால் தான் என்ன? எல்லாம் பிரம்ம தத்துவத்தைப் பற்றியா? அல்ல. நம்முடைய அற்ப குடும்ப விவகாரங்கள் உள்பட எல்லா விஷயங்களையும் சிரத்தையோடு விசாரித்து அளவளாவுகிறார். அதுதான் மனிதத் தன்மை என்பது. இந்த மனிதத் தன்மையைப் பிரம்மாநுபவம் பெற்ற ஆசாரியர் தாங்கியிருப்பதுதான் கருணை என்பது; அதுதான் தியாகம் என்பது. ஆம், பிரம்மாநுபவத்தைத் துறந்து, மக்களின் குறைகளைத் தீர்க்கத் தமது பொழுதைச் செலவிடும் ஆசாரியரின் தியாகத்துக்கு இணையாக எதைச் சொல்ல முடியும்? ஈடு இணையற்ற அனந்தமான ஆற்றல்கள் பெற்றிருந்தும், அவற்றையெல்லாம் வெளிக்காட்டாது தாஸனாக, தாஸாநுதாஸனாகவே அடங்கியிருந்த ஆஞ்சநேயனைப் போல் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் தவச் செல்வராகவும், பீடாதிபதிகளாகவும் இருந்த போதிலும் அப்பெருமைகளை மறைத்துக் கொண்டு தொண்டின் திருச் சின்னமாக விளங்குகிறார்.

தூயோனைப் போலத் தீயோனையும் பரம்பொருளாகக் காணும் அத்வைத பக்குவம் பெற்ற ஒருவர் யாரையும் திருத்த வேண்டுமென முயல முடியாது. ஏனெனில் அவரைப் பொறுத்தமட்டில் நன்மை, தீமை இரண்டுமே தோற்றம்தான். ஆனால் குரு பீடத்திலுள்ள ஆசாரியர்களுக்கோ உலகைத் திருத்தும் பொறுப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, ஆத்ம பூர்வமான அநுபவத்தினால் யாரையும் ஒன்றாகவே பாவித்து ஒரேபோல் அன்பு செலுத்தும் அவர், அறிவின் அடிப்படையில் மக்களின் நன்மை, தீமைகளையும் நினைந்து, தீமைகளை நன்மையாகச் செம்மை செய்ய வேண்டியிருக்கிறது. அதாவது ஒரே சமயத்தில் மக்களைப் பரம்பொருளாகக் கண்டு தொழவும், அவர்களை மக்களாகவே கண்டு உயர்த்தவும் வேண்டியிருக்கிறது. இது எப்படி முடியும் என்ற கேள்வி எழுகிறது. 'எப்படி' என்ற புதிரை நாம் அவிழ்க்க முடியாது. ஆனால் இந்த அற்புதம் நிகழ்கிறதென்னவோ நிச்சயம் என்பதற்குச் சான்றே ஸ்ரீ ஜகத்குரு அவர்கள். சீர்திருத்தும் போதும் அவர் தமது குரு பீடத்தை நினையாமல் தம்மை எளியவராகவே கருதுவதால்தான் ஆண்டவன் சேவையாக உலகத் தொண்டு புரிய முடிகிறது என்று கூறலாம்.

அவரைவிட எளியவர் யாருண்டு? ஜகன்மாதாவைப் போன்ற அவரது தோற்றத்திலேயே ஓர் எளிமை; அவரது பேச்சில் எளிமை; சிந்தனையில் எளிமை; கடினமான வேதாந்தச் சிக்கல்கள் கூட இவருடைய திருமுன்னர் எளிமையாகி விடுகின்றன. மிகவும் சிக்கலானதாகக் கருதப்படும் வேதாகம ஆராய்ச்சி மகாநாட்டிலேயே ஏழை மக்களின் நாட்டுக் கலைகளையும் ஆசாரியரால் பொருத்தித் தர முடிகிறது என்பதே இதற்கு நிரூபணம். அரசியல் தத்துவத்தின் மூலம் சமத்துவம் பேசும் இந்நாளில் எளிமையின் மூலம் வேத விற்பன்னரையும் பொதுமக்களையும் இணைத்தவரல்லவா அவர்?

எளிமை காரணமாகவே ஆசாரியர்கள் இந்நாட்டின் ஏழையரில் ஒருவராக இருக்கிறார். பீடாதிபதிகளுக்குரிய எந்தப் பகட்டையும் அவரிடம் நாம் காணவில்லை; ஏற்றத்தாழ்வு ஒழிப்புப் பற்றிப் பேசுபவரிடமெல்லாம் காணாத உண்மையான ஏழ்மையை அவரிடம் தான் காண்கிறோம். அவர் உடுத்தும் வஸ்திரம், உண்ணும் உணவு, தங்கும் குடில்—இவை இந்நாட்டின் பரம ஏழையின் வாழ்நிலையை விடச் சிறிதும் உயர்ந்தவையல்ல. இதுதான் ஆசாரம். ஆசாரம் என்றால் என்ன? ஒழுக்கம். நம் மக்கள் பூர்விகத்தில் எப்படி ஒழுகி வந்திருக்கிறார்களோ அதுவே ஒழுக்கம். பூர்விகத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன் அவர்கள் எப்படி வாழ்ந்தார்களோ, அதற்கு இம்மியும் மாறுதலின்றி இருபதாம் நூற்றாண்டில் வாழ்பவர் ஆசாரி

யர். இதுவே ஏழ்மை வாழ்வாகவும் இருக்கிறது என்றால் நம் ஆசாரமே — நம் மரபே — ஏழ்மைதான் என்று சொல்வதில் தவறென்ன?

ஏழ்மை என்று சொல்வதை விட இதனையும் எளிமை என்று சொல்வதே பொருத்தம். உள்ளத்தில் ஆத்மச் செல்வம் மண்டிக் கிடக்கும்போது வெளிச் செல்வங்கள் திகட்டிப் போய் விடுவதால், மனமார விரும்பி ஏற்கும் ஏழ்மையே எளிமை. அந்த எளிமையின் தெளிவே ஸ்ரீ ஆசாரியர்.

இந்த எளிமையில் சத்தியமும் அடக்கம் எனலாம். சத்திய விரோதமின்றி நாம் நடக்கத் தொடங்கி விட்டால் எதனையும் குழப்பிச் சிக்கலாக்கிக் கொள்ள வேண்டிய அவசியமே இராது அல்லவா? தெள்ளத் தெளிந்து தூய்மையாய் இனிமையாய் எளிமையாய் இருப்போமல்லவா? இந்த எளிமையை நாம் ஆசாரியரிடம் கற்போமா?

சிந்திக்க வேண்டிய கேள்விதான் இது. இன்று நாடெங்கிலும் ஆசாரியர்களைப் பற்றிப் பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள். நாமும் எழுதுகிறோம். திரும்பும் இடமெல்லாம் அவரது திருவுருவப் படத்தைக் காண்கிறோம். ஆசாரிய பக்தியிருப்பதாகக் காட்டிக் கொள்வதே இன்று சமூகத்தில் ஒரு கௌரவத்தையும் பெற்றுத் தருகிறது. ஆனால் நாம் ஆசாரிய பக்தர்கள் என்று சொல்லிக் கொள்ள இவை போதுமா? நம் உள்ளத்தில் அவர் ஊறியிருக்கிறார் என்று நாம் சொல்ல முடியுமா? நாம் எப்படி நடந்து கொண்டாலும் தமது கருணை காரணமாக அவர் நம்மை மன்னிப்பார் என்பதும் உண்மைதான். ஆனால் அந்தக் கருணையைக் கோர நமக்குத் தகுதி உண்டா?

இந்த வைகாசி பதின்மூன்றும் தேதியன்று இந்தக் கேள்விகளை நாமெல்லோரும் கேட்டுக் கொள்ள வேண்டும். கள்ளம் கபடமில்லாமல் கேட்டுக்கொண்டு விடை காண வேண்டும். அந்த நன்னாள் தான் ஸ்ரீ ஆசாரியரின் எழுபத்தொன்றாவது ஜன்ம தினம். ஆத்ம சோதனையே நாம் அவருக்கு அளிக்கும் பிறந்த நாள் காணிக்கை.

ஆசாரியரை உண்மையாகவே வழிபடுவது, அவர் கூறும் உபதேசங்களை அநுசரிப்பதும், அவர் வாழும் எளிய மானுடப் பண்பைப் பின்பற்றுவதுமே யாகும். அதற்கு எவ்வளவுபேர் தயாராய் இருக்கிறோம்? எளிமை நிறைந்த புராதன வாழ்வை நாம் எய்த வேண்டுமானால் வைதிக அநுஷ்டானமும், பகவத் தியானமும் அத்தியாவசியம் என்று அவர் அனவரதமும் கூறி வருகிறார். உள்ளத்திலும் ஆசாரம் வேண்டும், வெளியிலும் வேண்டும் என்கிறார். இவற்றைச் செய்வதால் நமக்குத்தான் உயர்வே அன்றி, உயர் நலன்களைக் குறைவறப்பெற்ற ஸ்ரீ ஆசாரியருக்கு எந்தப் பலனும் இல்லை. இவ்வாறு ஆண்டவனைத் தினமும் ஓர் ஐந்து நிமிடமேனும் நினைக்கவும், அநுஷ்டானங்களை இயன்ற மட்டும் செய்யவும், அவரைப் போலவே யாவருடனும் இனிமையாகப் பழகவும், ஆசாரத்தால் உள்ளேயும் வெளியையும் இணைக்கவும் நம்மில் எவ்வளவு பேர் சித்தமாயிருக்கிறோம்?

நன் முயற்சியைத் தொடங்க ஸ்ரீ ஆசாரிய ஜயந்தி ஒரு சுப தினம். உலகுக்காகவே வாழ்ந்து வரும் ஆசாரியர் புனித சீலம் செறிந்த எழுபதாண்டுகளைப் பூர்த்தி செய்வது ஒரு மகோற்சவமாகும். தெய்வங்களில் ஒரு மானுடரான அவரை, இச்சமயத்தில் மட்டும் மானுடரில் ஒரு தெய்வமாக எண்ணிப் பார்க்க ஆசைப்படுகிறோம். ஏனெனில் மானுட வாழ்வில் எழுபதாண்டு மூப்பினைக் குறிக்கும். விவிலிய நூலின்படி அதுவே மானுடரின் பூரண ஆயுள். ஆனால் ஆசாரியரோ யுக யுகங்களாக வாழ வேண்டியவர். எனவே ஆயுள் அம்சத்தில் மட்டும் அவர் தெய்வமாகவே என்றும் இருந்து நமக்கு அருள் புரிய ஸ்ரீ மகா திரிபுரசுந்தரி சமேத சந்திரமௌளீசுவரனைப் பிரார்த்திக்கிறோம்.

சட்டப்படி சரிதானா?

கொறடாப் பிரயோகத்தின் மூலம் ஒரு கட்சியின் எல்லா அங்கத்தினர்களும் ஒரே கருத்தை ஆதரிக்குமாறு செய்வது ஜனநாயக முறையல்ல என்று சென்ற இதழில் ராஜாஜி எழுதினார். சாமானிய மசோதாக்களைப் போலன்றி, விசேஷ முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் சாஸனத் திருத்த மசோதாக்கள் விஷயமாகக் கட்சிக் கட்டுப்பாடு செல்லுமா என்பது இப்போது ஆராய்ச்சிக்குரிய விஷயம்.

அரசியல் சாஸனத் திருத்தத்துக்குச் சபையின் மொத்த அங்கத்தினர்

களில் பாதிக்கு மேற்பட்டவர்களின் ஆதரவு வேண்டும் என்பது ஷரத்து. அங்கத்தினர்கள் சுயேச்சையாக வோட் அளிப்பார்கள் என்ற நம்பிக்கையின் மீது தான் இந்த ஷரத்து இயற்றப்பட்டது. ஆள்கிற கட்சி பெரும்பான்மை பலம் பெற்றுத்தான் இருக்கும்; அந்நிலையில் அதன் எல்லா அங்கத்தினர்களும் அதன் சொற்படிதான் வோட் செய்ய வேண்டுமென்றால், சர்க்கார் கொண்டுவரும் எந்தத் திருத்தமும் நிறைவேறத்தான் செய்யும். இந்நிலையை மாற்றி அங்கத்தினரின் சுயேச்சையைக் காக்கவே சாஸன ஷரத்து ஏற்பட்டது. எனவே, கட்சிக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்துப் பெரும்பான்மை பலமுள்ள ஒரு கட்சி சாஸனத் திருத்தத்துக்கு மெஜாரிட்டி ஆதரவு பெறுவது ஷரத்தின் உண்மைக் கருத்துக்கு விரோதமாகாதா? அங்கத்தினர்கள் சுயேச்சையாகவே கட்சி காட்டும் வழியைப் பின்பற்றுவதாகச் சொன்னாலும் கூட, 'இப்படித்தான் நீங்கள் யாவரும் வோட் செய்ய வேண்டுமென எதிர் பார்க்கிறோம்' என்று கட்சித் தலைமையில் பகிரங்கமாகச் சொல்வதும் முறையின்மை ஆகிறது. சாதாரண மசோதாக்கள் கட்சி அரசியலின் மீது அமைந்தவை. ஆனால் சாஸனம் கட்சிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது. எனவே சாஸன மாற்றத்தில் எப்படிக் கட்சிக் கட்டுப்பாடு விதிக்க முடியும்!

சாஸனத் திருத்தம் யாவுமே தனி முக்கியத்துவம் பெற்றவை யென்றால், அதன் மூன்றாம் பாகத்தைச் சேர்ந்த ஜீவாதார உரிமைகள் அவற்றிலும் விசேஷமான இடம் பெறுகின்றன. இந்த உரிமைகளில் ஒன்றாகிய சொத்துரிமையைப் பாதிக்கும் பத்தொன்பதாவது திருத்தத்துக்குப் பகிரங்கமாகக் கட்சிக் கட்டுப்பாட்டு விதியைக் காங்கிரஸார் கடைப்பிடித்துத் துப்பாக்கி முனையில் மெஜாரிட்டி பெறப் பார்ப்பது சட்டப்படி சரிதானா?

என்ன சேதி?

மதுவிலக்குக் கமிட்டி

பலத்த சத்தம் போட்டால் நெஞ்சில் உறுதி உள்ளவர்களுக்குக் கூடத் தளர்ச்சி ஏற்பட்டு விடும். மதுவிலக்குத் திட்டம் படுதோல்வியடைந்து விட்டது என்று ஒரு சிறுபான்மையார் போட்ட சத்தம் மதுவிலக்குத் திட்டத்தில் அக்கறையுள்ளவர்களுக்குக்கூடச் சிறிது மனச் சோர்வை ஏற்படுத்தி யிருந்தது. இந்த மனச் சோர்வை டேக் கமிட்டி தீர்த்து விட்டது. மதுவிலக்குத் திட்டம் அப்படி யொன்றும் தோல்வி யடைந்து விடவில்லை என்று அது கண்டிருக்கிறது.

மதுவிலக்குக் குற்றத்துக்குக் தண்டனையை இன்னும் சற்றுக் கடுமையாக்கினால் 1976ம் ஆண்டுக்குள் தேசமெங்கும் படிப்படியாக மதுவிலக்கை அமுல் நடத்தலாம் என்று கமிட்டியினர் கூறியிருக்கிறார்கள். இதனால் சர்க்காருக்கு ஏற்படக் கூடிய வருமான நஷ்டத்தை ஈடு செய்யவும் வழி இருக்கிறது என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

மதுவிலக்குத் திட்டத்தைக் குறை கூறுபவர்கள், மதுவிலக்கு அமுலினால் தான் கள்ளச் சாராயம் காய்ச்சுவது அதிகமாகி இருக்கிறது என்று சொல்வார்கள். ஆனால் உண்மையில் மதுவிலக்குத் திட்டம் அமுலில் இல்லாத ஹைதராபாத்தில்தான் கள்ளச் சாராயம் அதிகமாகக் காய்ச்சப்படுகிறது என்று ஸ்ரீ காமராஜ் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

நல்ல காரியத்தை அந்தரங்க சுத்தியோடும் மன உறுதியோடும் செய்தால் நிச்சயம் வெற்றி பெறுவோம்.

ஆசிரியர்கள் ஊதியம்

சமீபத்தில் மத்திய சர்க்கார் தங்கள் ஊழியர்களுக்குக் கிராக்கிப் படியை உயர்த்தியதைத் தொடர்ந்து சென்னை சர்க்காரும் தங்கள் ஊழியர்களின் கிராக்கிப்படியை உயர்த்துவதாக அறிவித்துள்ளது. ஆனால் மற்றொரு புறம் ஏழைப் பள்ளி ஆசிரியர்கள் ஏற்கனவே பெற்று வந்த ஊதியத்தில் கணிசமான தொகை குறையும்படியான ஒரு காரியத்தைச் செய்துள்ளது.

சென்னை சர்க்கார் இந்தப் பள்ளிக்கூட ஆண்டிலிருந்து உயர்தரக் கல்வியின் முடிவு வரை மாணவர்களுக்கு இலவசமாக்கப் போவதாக அறிவித்தது. சர்க்கார் மானியம் பெற்று நடத்தும் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களின் சம்பளங்களைச் சென்னை சர்க்காரே கொடுக்கப் போவதாகக் கூறியிருந்தது. ஆனால் இப்போது சென்னை சர்க்கார் ஆசிரியர்களுக்குக் கொடுக்க விருக்கும் சம்பளத் திட்டத்தைக் கண்டு தமிழ்





1. சென்னை ரஸிக ரஞ்சனிசபை ஹாலில் சம்ஸ்கிருத கல்வி சங்கத்தின் ஆதரவில் லிப்கோவின் வால்மீகி ராமாயணத்தை டாக்டர் சி. பி. வெளியிட்டார். 2. வாணி மகாலில் எம்பார் விஜயராகவாச்சாரியார் அவர்களின் 'பாகவதம்' உபன்யாசம் தொடங்கியுள்ளது. 3. புதுவை எழுத்தாளரின் 'இலக்கியம்' என்ற சிறப்பு மலரைப் புதுவை கவர்னர் திரு சைலம் வெளியிட்டார்.

நாட்டு ஆசிரியர் உலகம் கதிகலங்கிப் போயிருக்கிறது. சர்க்கார் உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களில் பெரும்பாலோரின் வருமானத்தில் பெரும் பகுதி குறைந்து போகிறது. சென்னையில் தலைமை ஆசிரியர் ஒருவரின் மாத வருமானத்தில் ரூபாய் 300 குறைந்து போகிறது. இப்படி ரூபாய் முந்நூறு முதல் ஆறு வரை பல படிகளில் பல வகையாக வருமானக் குறைவு ஏற்பட்டால் ஏழைப் பள்ளி ஆசிரியர்கள் விலைவாசி ஏகத்தாறுக உயர்ந்துள்ள இந்தக் காலத்தில் என்ன செய்வார்கள்?

கல்வியில் அக்கறை உள்ளவர்களும் நமது மாணவ சமுதாயத்தினிடம் சிரத்தை உள்ளவர்களும் இலவசக் கல்வி திட்டத்தினுல், ஏற்கனவே குறைந்து வரும் கல்வித் தரம் இன்னும் குறைந்து விடாதா என்று கவலைப்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் ஆசிரியர் வருமானமும் கணிசமாக வெட்டப்பட்டால்எந்த அளவுக்குக் கல்விபோதனையில் சிரத்தையிருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

உடனடியாக, எந்தப் பள்ளிக்கூட ஆசிரியரின் வருமானத்திலும் குறைவு ஏற்படாது; 1964 மார்ச் மாதத்தில் எந்தச் சம்பளம் வாங்கினுர்களோ அதே தொகையைத் தொடர்ந்து பெற்று வருவார்கள் என்று சென்னை சர்க்கார் அறிவித்தால்தான் ஆசிரியர் உலகில் மன அமைதி ஏற்படும். கல்வியும் ஓரளவு பாதிக்கப்படாமல் இருக்கும்.

எந்த அகதிகள்?

சமீபத்தில் மந்திரி ஸ்ரீ நந்தா தென்னகம் அதிகமான அகதிகளை ஏற்றுக் கொண்டு பராமரிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறுர். அவர் அகதிகள் என்று குறிப்பிட்டது கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வரும் லட்சக்கணக்கான அகதிகளைத்தான். அதற்கு மேல் அவர் சிந்தனை போகவில்லை. ஆனுல் தமிழகத்தில் உள்ளவர்களின் சிந்தனையெல்லாம் பர்மாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் வரும் அகதிகளைப் பற்றியே உள்ளது. அந்த நாடுகளில் பல தலைமுறைகளுக்கு முன் குடியேறி அந்நாடுகளையே தங்கள் தாயகமாக ஏற்றுக் கொண்டு தொழிலும் வியாபாரமும் நடத்தி வந்து, அந்நாட்டு மக்களின் சுக துக்கங்களில் ஒன்றிவிட்ட தமிழர்கள் நடத்தி வந்த வியாபாரத்தைப் பறித்து, பாங்கில் போட்ட பணத்தையும் பறித்துக் கொண்டு அவர்களை அந்நாட்டு அரசுகள் வெளியேற்றத் துணிந்து விட்டன. அதை ஏன் என்று கேட்க நமது சர்க்காருக்குத் துணிச்சல் இல்லை. இச்சமயத்தில் பாகிஸ்தானிலிருந்து வரும் அகதிகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று உள்துறை மந்திரி கூறுவது வெந்த புண்ணில் வேலிடுவதற்கு ஒப்பாகும்.


உயரிய பண்போடு
உபயோகிப்பதற்கும்
உதவுவதற்கும்
உகந்தது
பனாமா
Panama
20
CIGARETTES
Specially blended for a cool and pleasant smoke from selected Virginia Tobacco leaves.
பனாமா
இழுக்க
இழுக்க
இன்பம்
இறுதிவரை
பிரத்தியேகத் தயாரிப்பாளர்கள் :
கோல்டன் டுபாக்கோ கம்பெனி பிரைவேட் லிட்.
பம்பாய்.56
பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப்பெரியது

"இதுதான் பூஜை"

சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர்

பொது ஜனங்களுக்குச் சேவை செய்வது என்ற கருத்து சமீப காலத்தில் மேல்நாடுகளில் தோன்றி நம் நாட்டு அரசியலுக்கு வந்துள்ள ஒரு சித்தாந்தம் என்று பலர் நினைக்கிறார்கள். இது தவறு. மக்களுக்குத்தொண்டு புரிவதென்ற கருத்து அநாதி காலமாக ஹிந்து மதத்தில் நிலவிவரும் ஒரு தத்துவம். த்வைத நிலையில் மக்கள் யாவரையும் பரமேசுவரனின் குழந்தைகளாகப் பார்த்து அதனால் யாவரும் பரஸ்பரம் சகோதர பாவம் கொண்டு ஜன சேவை புரிவதும், அத்வைத நிலையில் யாவரையும் ஈசுவரனாக—அதாவது தானாகவே — கண்டு தொண்டு புரிவதும் நம் சம்பிரதாயம்.

ஸ்ரீமத் பாகவதத்தில் ஒன்பது விதமான பகவத் ஆராதனை முறைகளைக் கூறும் பிரஹ்லாத ஸ்வாமி அவற்றில் ஒன்றாக 'பாத ஸேவனம்' என்பதைக் குறிப்பிடுகிறார். இதற்கு வியாக்கியானம் செய்துள்ள ஸ்ரீதர ஸ்வாமி, 'உலகமெல்லாம் பகவானின் பாதம் என்று வேதம் விதிக்கிறது. எனவே பகவானின் பாதத்தைப் பூஜிப்பதென்பது உலக மக்களுக்குச் செய்யும் தொண்டேயாகும்' என்று வெகு அழகாகக் கூறியுள்ளார்.

இவ்வாறு மக்களை ஆண்டவனாகப் பாவித்துத் தொண்டு புரிந்துள்ள மகான்கள் பலர். மகான் என்று கூறியவுடன் நம் மனக் கண்ணின் முன்னும் அருள் உருவாக நிற்பவர் ஜகத்குரு ஸ்ரீ காமகோடி பீடத்து சங்கராசாரிய ஸ்வாமிகள். அவர் இவ்விதமே சேவை புரிபவர். மக்கள் சேவை பற்றி அவர் பிரசங்கிகளைப் போலப் பேசுவதில்லை. ஆனால் எப்போதேனும் இதய அந்தரங்கத்திலிருந்து அவர் பொதுஜன சேவையைக் குறித்து ஒரு வார்த்தை கூறினாலும் அதில் சத்தியத்தின் சக்தி ஜ்வலிக்கும்; கேட்போரின் நெஞ்சை நெகிழச் செய்துவிடும்.

இதற்கு திருஷ்டாந்தமாக ஒரு நிகழ்ச்சி:

சுமார் முப்பதாண்டுகளுக்கு முன் ஸ்ரீ ஆசாரிய ஸ்வாமிகள் தஞ்சை ஜில்லாவில் யாத்திரை செய்து வரும்போது குடவாசலிலிருந்து கொரடாச்சேரிக்குச் சென்று கொண்டிருந்தார்கள். வழியில் திருக்களம்பூர் என்ற பாடல் பெற்ற சிவ ஸ்தலத்துக்குக் கிழக்கே சாலை ஓரத்தில், அந்தச் சுற்றுப் புறத்தைச் சேர்ந்த ஹரிஜன மக்கள் யாவரும் ஸ்ரீ ஆசாரியர்களைத் தரிசிப்பதற்காகக் குழுமியிருந்தனர். தீனரிலும் தீனரான அம்மக்கள் தங்கள் சேரியிலேயே வசூல் செய்த சிறு தொகையுடன், பழம் புஷ்பம் முதலியவற்றையும் ஆசாரியர்களுக்குச் சமர்ப்பிப்பதற்காகக் காத்துக் கொண்டிருந்தனர்.

ஸ்ரீ ஆசாரியர் அவர்களுக்கெல்லாம் திவ்விய தரிசனம் தந்தார். அந்த எளிய மக்கள் சமர்ப்பித்த காணிக்கையை மனமுவந்து ஏற்றுக் கொண்டார். அவர்கள் அளித்த திரவியத்தை எண்ணிப் பார்க்கச் செய்தார். உடனே, அவ்விடத்திலேயே அதனைப் போல் பல மடங்கு தொகையை மடத்திலிருந்து எடுத்துச் சேர்த்து, அந்த ஹரிஜனங்கள் யாவருக்கும் வேஷ்டி புடவைகள் வாங்கி வர உத்தரவிட்டார். உள்ளூரில் கடைகள் கிடையாது. மடத்துச் சிப்பந்திகள் குடவாசலுக்கே சென்றனர். 'அவர்கள் திரும்பிவர மிகவும் பொழுதாகுமே! அதன்பின் விநியோகம் செய்துவிட்டு, ஆசாரியர்கள் அடுத்த முகாமுக்குச் சென்று பூஜை முடிப்பதென்றால் சாயங்காலமாகி விடுமே! பெரியவர்கள் அதன்பின் தானே ஆகாரம் கொள்வார்கள்?' என அடியார்கள் கலங்கினர். ஆனாலும் ஆசாரியர் இதைச் சற்றும் பொருட்படுத்தாமல் ஹரிஜனங்களின் க்ஷேமங்களைப் பற்றி அன்போடு விசாரித்துக்கொண்டே யிருந்தார்.

மாலை நேரமான போதுதான் புடவை, வேஷ்டிகள் வந்து சேர்ந்தன. அவை ஹரிஜனங்களுக்கு விநியோகிக்கப்பட்டன. அந்த ஏழை மக்கள் அடைந்த ஆனந்தத்துக்கும், அதைக் கண்டு ஸ்ரீ ஆசாரியர் அடைந்த ஆனந்தத்துக்கும் எல்லையே இல்லை.

''பூஜைக்குத்தான் மிகவும் நேரமாகி விட்டது'' என்று அருகிலிருந்த காரியஸ்தர் ஒருவர் கூறினார்.

ஸ்ரீ ஆசாரிய ஸ்வாமிகள் சுற்றி யிருந்த ஏழை மக்களை யெல்லாம் அன்பொழுகப் பார்த்தார். பிறகு அந்தச் சிப்பந்தியைத் தமது ஒளிவாய்ந்த கண்களால் நோக்கினார்.

அன்பு வழியும் மதுரக் குரலில், ''பூஜைக்கா, நேரமா? இதுதான் பூஜை'' என்றார்.

இதற்கு மேலாக ஒரு தத்துவத்தை என் வாழ்நாளில் நான் எந்த சாஸ்திரத்திலும் படித்ததில்லை. ஸ்ரீ ஆசாரியர்களை என்னும் போதெல்லாம் இந்த அருள் வாக்கே மகா மந்திரம் போல் மனதின் முன் நிற்கிறது.






கைப்பட சலவை செய்து பார்த்தீர்களானால் தெரியும் கைகண்ட ஸர்ப் மேன்மை: நிகரில்லாத வெண்மை, சிகரமான தூய்மை; வேலையோ வெகு இலகு! எல்லாம் ஸர்ப் செயல், எல்லைமீறிய வல்லமை. சிறுவர் உடை முதல் சட்டை, சேலை வரை எல்லாத் துணிகளுக்கும் ஏற்றது ஸர்ப்!

ஸர்ப் சலவை: வெள்ளைவெளேர் சலவை

SU. 44-140 TM

இந்துஸ்தான் லீவர் தய



கருணைமூர்த்தி!

அக்னிஹோத்ரம் ஸ்ரீ ராமாநுஜ தாத்தாச்சாரியார்

கடவுளின் உருவத்தை விளக்கும் சாஸ்திரங்கள் அவன் அன்பே வடிவானவன் என்று கூறுகின்றன. திருமூலநாயனார் 'அன்பே சிவம்' என்கிறார். கோப தாபங்களால் சாதிக்க முடியாதவற்றை அன்பால் எளிதில் சாதிக்க முடியும். அன்பு மூலம் மனித வர்க்கத்தைத் திருத்தித் தெய்வீக உணர்ச்சியை ஊட்டுவதற்காக அன்பு வடிவான ஓர் உருவத்தை ஆண்டவன் இன்றும் எடுத்துக் கொண்டிருக்கிறான். அந்தக் கருணை மூர்த்தியே ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தை அலங்கரிக்கும் நம் ஆசாரியர்கள்.

கடந்த இருபத்தைந்து வருடங்களாக அவர்களுடைய ஆக்ஞைப்படி தர்மசேவை செய்து அவர்களோடு பழகும் பாக்கியத்தைத் துய்த்து வருவதில், இவர் ஆண்டவனின் அன்புருவமே—நடமாடும் பிரத்யக்ஷ தெய்வமே — என்ற உண்மையை நான் நிச்சயமாக உணருகிறேன். அன்பின் ஒளி அவருடைய திருமுக மண்டலத்தில் எப்பொழுதும் தாண்டவமாடுகிறது. பேச்சிலும் காரியங்களிலும் அன்பு ததும்புகிறது. குழந்தைகளைக் கண்டாலும் பெரியோர்களைக் கண்டாலும், ஆணைக் கண்டாலும் பெண்ணைக் கண்டாலும், செல்வந்தரைக் கண்டாலும் ஏழையைக் கண்டாலும், பாமரனைக் கண்டாலும் பண்டிதனைக் கண்டாலும் ஒரேவிதமாக அன்பு செலுத்துபவர் அவர்.

கருணை காரணமாகவே உலக மக்களைப் பற்றி எப்பொழுது பார்த்தாலும் கவலைப்படுபவர் காமகோடி பீடாதிபதிகள். நம்மைப் பெற்ற தாய் தந்தையர் நம்மைப் பற்றிக் கவலைப்படுகிறார்களோ இல்லையோ! நமது குழந்தைகளுக்காக நாம் கவலைப்படுகிறோமோ இல்லையோ! ஆசாரியர்களுக்கு எல்லா மக்களையும் பற்றியே கவலை. மக்களின் இம்மை மறுமை இரண்டையும் பற்றி ஆசாரியருக்கே கவலை. இராப்பகலாக நாம் வாழ்வதற்காகச் சிந்தனை செய்கிறார்கள்; திட்டமிடுகிறார்கள்; காரியம் செய்கிறார்கள். அவர்கள் பீடாதிபதி என்ற முறையில் அதிகாரத்தால் ஆட்சி புரியவில்லை; தான், தனது என்பனவற்றை மறந்த அன்பினாலேயே ஆட்சி புரிகிறார்கள்.

அவருக்கு அலுப்பும் கிடையாது. சலிப்பும் கிடையாது. எத்தனை மக்கள், எப்போது வந்து கஷ்டங்களைச் சொல்லிக் கொண்டாலும் பொறுமையுடன் கேட்டு, கஷ்டத்தை உணர்ந்து அதை நிவர்த்தி செய்யும் புன்சிரிப்புடன் சாவதானமாக அனுக்கிரஹித்துப் பேசுவார். கடந்த இருபத்தைந்து வருஷங்களில் பலபடியாக அந்தத் தெய்வீக அன்பை அநுபவித்துள்ள நான் ஓரிரு உதாரணங்களைக் கூற விரும்புகிறேன்.

ஆசாரியாருடைய சமீபகாலச் சென்னை விஜயம் தென் இந்தியாவின் சரித்திரத்திலேயே ஒரு புதிய சகாப்தத்தை உண்டாக்கிய நிகழ்ச்சி. சென்னை விஜயத்தின்போது ஆசாரியாருடைய அன்பை லட்சக்கணக்கான மக்கள் அநுபவித்தார்கள்.

இவ்விஜயத்தின்போது மாம்பலத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவம்:

இரவு பன்னிரண்டு மணிக்குமேல் ஆசாரியார்கள் என்னைக் கூப்பிட்டனுப்பிப் பல விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள். லோகத்தில் நடக்க வேண்டிய சாமானிய காரியங்களைச் சொல்லுவதைப்போல் பேசியே நமது மத கிரந்தங்களின் சூட்சுமமான தத்துவங்களை விளக்கினார்கள். இந்த ரஸ அநுபவத்தின் போக்கே தனியானது. காலம் போவது தெரியாமல் ஆனந்த ஸாகரத்தில் மூழ்கிவிட்டேன். அவர்கள் காலம் கடந்த தத்துவம் ஆனதால் காலத்தைப் பற்றிய ஞாபகமே அவர்களுடன் பேசும் பொழுது யாருக்கும் வராது.


இரவெல்லாம் கழிந்து, காலை ஐந்து மணிக்குத்தான் சம்பாஷணை முடிந்தது. ஆசாரியர்கள் எழுந்தார்கள். தண்டம் கமண்டலம் இரண்டையும் தாமே ஏந்தி அவர் செல்லும்போது தர்ம தேவதையே நடந்து செல்வது போல் தோன்றியது. பின்தொடர்ந்தேன்.

சிறிதுதூரம் சென்ற பிறகு ஓர் அம்மாள் இளம் பெண் ஒருத்தியுடனும் ஒரு கைக் குழந்தையுடனும் ஆசாரியரின் முன் வந்தாள். இரவெல்லாம் கண் விழித்து, நாவுலரப் பேசிய அவர் ஓய்வெடுக்கச் செல்லும் இந்த அகால வேளையில் அவரைத் தரிசித்துப் பேச வந்த அம்மாளைப் பார்த்துப் பரபரப்படைந்தேன். அதற்குள் அந்த அம்மாள் கையில் உள்ள குழந்தையை ஆசாரியரின் பாதாரவிந்தத்தில் அர்ப்பணம் செய்து நமஸ்காரம் செய்யத் தொடங்கினாள். எனக்குச் சிறிது கோபம் வந்தது.

''பெரியவாளுக்கு ஓய்வே வேண்டாமா?'' என்று கேட்டேன். அவளோ என் வார்த்தையை இலட்சியம் பண்ணவில்லை. தன் பெண்ணையும் நமஸ்காரம் செய்யச் சொன்னாள். பிறகு பேச ஆரம்பித்துவிட்டாள். ஆட்சேபித்தேன். நிதானமாகப் பதில் சொன்னாள்: ''காலையில் பம்பாய் எக்ஸ்பிரஸில் என் பெண்ணைப் பிரசவித்த குழந்தையுடன்

அனுப்ப வேண்டும். குழந்தைக்கும் தாய்க்கும் பெரியவாளின் அனுக்கிரஹம் வேணும். அதனால்தான் ரொம்ப கொடுக்கிறேன்'' என்று. நான் கோபத்தோடு பேசியதையும் அம்மாள் பிடிவாதமாகத் தரிசனம் செய்ததையும் ஆசாரியர்கள் புன்சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கீழே உட்கார்ந்து விட்டார்கள். உள்ளிருந்து என்னையே பிரசாதம் கொண்டுவரச் சொன்னார்கள். என் இடையூறு இல்லாமல் அடியாருக்கு அருளத் தமக்குப் பொழுது ஏற்படுத்திக் கொண்டார்!

நான் பிரசாதத்துடன் திரும்பி வருவதற்குள் அந்த அம்மாள் தன் குறைகளை யெல்லாம் சொல்லிக் கொண்டாள். பொறுமையுடன் ஆசாரியர் கேட்டுக் கொண்டார்.



மன நிறைவுடன் அந்த ஸ்திரீ பிரசாதம் பெற்றுக் கொண்டு சென்றாள்.

அவள் போன பிறகு ஸ்ரீ குரு என்னிடம் சொன்ன வார்த்தைகளை நான் ஒருபோதும் மறக்க முடியாது. ரோமாஞ்சனமுண்டாக்கும் வகையில் அவர்கள் அன்புத் தத்துவமாக உருகிக் கொண்டு கூறினார்: ''தங்கள் கஷ்டங்களைத் தெய்வத்திடம் சொல்லி விட்டால் அது நிவர்த்தி ஆகி விடும் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருந்து வருகிறது. தெய்வம் பிறகு கஷ்ட நிவாரணம் செய்வது ஒருபுறம் இருக்கட்டும்; வாயை விட்டுத் தமது குறைகளைச் சொல்லிக் கொள்வதே அவர்களுக்குச் சமாதானம். எங்கு தெய்வம் இருந்தாலும் அங்கு சொல்லிக் கொள்ளப் பிரியப்படுகிறார்கள். தெய்வம் எல்லா இடத்திலும் தானிருக்கிறது; ஆனால் தெரியவில்லை. சில இடங்களில் தெய்வம் தெரிவதாக மக்கள் நினைக்கிறார்கள். எனக்குத் தனியாக மதிப்பு கொடுத்து அவர்கள் என்னிடம் வரவில்லை. என்னிடத்தில் தெய்வம் இருப்பதாக நம்பி, என்னிடம் சொன்னால் தெய்வத்திடத்தில் சொல்வது போல் என நம்பி ஆறுதல் பெறுகிறார்கள். அந்த நம்பிக்கையையும், கஷ்டப்படுகிறவர்கள் அதனால் பெறும் ஆறுதலையும் ஏன் கெடுக்க வேண்டும்? நான் எதற்காக இருக்கிறேன்? ஜனங்களுடைய குறைகளைக் கேட்டுச் சமாதானம் சொல்லுவதற்காகவேதான் என் வாழ்நாள் இருந்து வருகிறது. இரவானாலும் என்ன, பகலானாலும் என்ன, மக்கள் குறைகளைக் கேட்டுச் சமாதானம் சொல்லவே இந்தச் சரீரம் ஏற்பட்டிருக்கிறது. ஜனங்களுக்குத் தரிசனம் தருவதாலும், அவர்களுக்கு இதமாகப் பேசுவதாலும் என் சரீர பலம் குறைந்து போனாலும் பாதகம் இல்லை. சரீரம் எப்படியானாலும் என் உள்ளத்துக்கு இதுவே பலம்.

''என்னை வணங்குகிறார்கள் என்பதில் எனக்குப் பெருமையில்லை. என்னிடம் தெய்வத்தை நினைக்கும் மக்கள் இவ்வளவு நம்பிக்கையுடன் ஆண்டவனிடம் முறையிடுகிறார்களே என்பதில்தான் சந்தோஷப்படுகிறேன். நான் தெய்வமானாலும் இல்லாவிடினும் என் காரணமாக மற்றவர் பெறும் தெய்விக உணர்ச்சி என்னைப் பரவசப் படுத்துகிறது. அந்த உணர்ச்சியுடன் அவர்கள் செய்யும் எந்தக் காரியமும் எனக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. அதுதான் எனக்குப் பலம். யாரும் இதற்கு இடையூறு செய்யாதீர்கள்'' என்றார்.

எனக்கு ஏற்பட்ட உணர்ச்சியை வார்த்தைகளால் வர்ணித்து எழுத முடியாது. அன்புக் கடலான பிரம்மானந்தத்தில் சிறிது நேரம் மூழ்கி யிருந்தேன்.

மற்றொரு சமயம் ஸ்ரீ பெரியவர்கள் விழுப்புரத்துக்குச் சமீபத்தில் உள்ள பாணாம்பேட்டையிலிருந்து வடவேம்பலத்தில் உள்ள அதிஷ்டானத்துக்கு நடந்தே சென்று கொண்டிருந்தார். சில இடங்களில் ஹரிஜனங்கள் ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாக ஆங்காங்கு கூடிக் கைகூப்பித் தூரத்திலிருந்தே தண்டனிட்டது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. ஆசாரியர்கள் அவர்களுக்குத் தலைவர்களாக உள்ள வள்ளுவர்களைக் கூப்பிட்டு அவர்களெல்லோருடைய யோக க்ஷேமங்களையும் விசாரித்து அநுக்கிரகம் செய்தார். ஹரிஜனங்களுக்கு அப்போது ஏற்பட்ட பரவச உணர்ச்சியைப் பிரத்யட்சமாகப் பார்த்தவன் நான். பகவானே தங்களை அநுக்கிரகிக்க நேரில் வந்திருப்பதாக நினைத்து ஆனந்தக் கண்ணீர் விட்டு நின்றார்கள். அந்தக் கள்ளமற்ற எளிய மக்களைக் கண்டு ஆசாரியர் என்னிடம் மிருதுவாகக் கூறினார்கள்: ''நான் பல்லக்கிலோ, வேறு எந்த வாகனத்திலோ போயிருந்தால் சாதுவான இந்த ஜனங்களின் தெய்விக உணர்ச்சியை நான் எப்படி அறிந்திருக்க முடியும்? நீதான்

எப்படிப் பார்த்திருக்க முடியும்? தங்களுடைய பழக்க வழக்கங்களைக் கைவிடாமல் இருக்கும் இந்த மக்களுக்கு ஆறுதல் சொல்வதற்கும் அவர்களுடைய உணர்ச்சியைப் பாதுகாப்பதற்கும் பகவான் எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்து விட்டார்'' என்று உள்ளுருகிக் கூறினார்.

ஏதுமறியாத ஹரிஜனங்களின் எளிமை யிடம் ஆசாரியாருக்கு உள்ள அன்பை இந்த நிகழ்ச்சி தெரிவிக்கிறதெனில், யாவுமறிந்த வேத பண்டிதர்களிடத்தில் அவருக்குள்ள அன்பை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளும் பல.

வேத வாழ்க்கையை மீண்டும் நிலைநாட்டுவதற்கே அவதரித்துள்ள ஆசாரியர்கள் வைதிகர்களுடைய ஏழ்மையைக் கண்டு கலங்குவார்கள். ஒன்றன்பின் ஒன்றாகப் பழைய சுதேச சமஸ்தானங்கள் மறைந்ததால் வேதாத்யயனம் செய்தவர்களுக்கு இருந்த சிறிது ஆதரவும் மறைந்து விட்டது. அவர்களுக்கு உதவி செய்து ஆறுதல் அளிக்க வேண்டும்; புதிதாக ஒருவரேனும் அத்தியயனம் செய்து வேதத்தைக் கற்றுக் காத்துத் தரவேண்டும் என்கிற சிந்தனையோடு ஆசாரியர்கள் இருந்து வருகிறார்.

இதே சிந்தனையோடு தஞ்சை ஜில்லாவில் ஒரு கிராமத்தில் மரத்தடியில் உட்கார்ந்திருக்கிறார்கள். நானும் அருகில் இருக்கிறேன். ஆனால் அவர்கள் மனத்தில் என்ன ஓடுகிறது என்று அப்போது எனக்குத் தெரியவில்லை. அந்த ஜில்லாவின் பணக்காரக் குடும்பம் ஒன்றைச் சேர்ந்த ஓர் அம்மாள் வந்து நமஸ்காரம் செய்கிறாள். வழக்கம் போல் சிரித்த முகத்துடன் ஆசீர்வதிக்கிறார். பேசிக் கொண்டே இருக்கும் காலத்தில் திடீரென ஒரு குழந்தையாகிறார். குழந்தை கேட்பதுபோல் ''எனக்கு நூறு பவுன் கொடுக்கிறாயா?'' என்று அந்த அம்மாளைக் கேட்கிறார். ''அத்யயனம் செய்தவர்களுக்குத் தோடா போட வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. இந்த நூறு பவுனைச் சம்பாதித்துக் கொடுக்கும் பொறுப்பு உன்னுடையது'' என்று சொல்கிறார்கள். அன்புக்கு ஆட்பட்ட அந்த அம்மாள் உடனே எதையும் செய்யத் தயாராக இருந்தாள். கழுத்தில் இருந்த சங்கிலியை அப்போதே கழற்றிக் கொடுத்தாள். இரண்டு வாரங்களில் நூறு பவுனையும் சேர்த்துவிட்டாள். அது தங்கக் கட்டுப்பாடு பிறக்காத காலம். இரவும் பகலுமாகத் தோடாக்கள் தயாராகிவிட்டன. செம்மங்குடி கிராமத்தில் கொடுக்க ஆரம்பித்தார்கள். இதன்பின் நூற்றுக் கணக்கில் தோடா கொடுத்தாகி விட்டது. ஆசாரியரிடத்தில் தோடா வாங்காத வேத வித்வான்களே இந்தியாவில் கிடையாது. பள்ளமடையில் நீர் பாய்வது போல் அத்யயனம் செய்த ஏழைகளிடம் ஆசாரியரின் அன்பு பிரவகிக்கிறது.

தம்மைத் தெய்வமாக நம்பிவரும் மக்களிடம் ஆசாரியருக்குள்ள அன்பு ஒருபுறம் இருக்கட்டும். அவர் தெய்வத்தை எப்படி நம்பி அன்பு செலுத்துகிறார் என்பதற்கும் எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சியைச் சொல்கிறேன்.

வியாஸ பூஜா வித்வத் சதஸை எப்படி நடத்த வேண்டும், எதற்காக நடத்த வேண்டும் என்பதை மாலை ஐந்து மணியிலிருந்து இரவு பன்னிரண்டு மணி வரை இளையாத்தங்குடி அதிஷ்டானத்தில் ஆசாரியர் விளக்கிக் கூறினார். மக்களுக்குத் தெய்விக உணர்ச்சியைக் கலை மூலமாக உண்டாக்க நினைத்த ஆசாரியர்கள் பிரமாதமான திட்டத்தைப் போட்டுவிட்டார்கள். அகில பாரத தேசத்திலும் மத உணர்ச்சி உண்டுபண்ணும் கலைகள் எங்கெங்குண்டோ அவற்றையெல்லாம் ஒரே இடத்தில் சேர்த்துப் பார்க்கவேண்டும் என்று தீர்மானித்து விட்டார்கள். வித்வத்



சபையினுடைய அவசியம் எப்படி இருந்தாலும் அதற்கு வேண்டிய நிதி வசதியைப் பற்றிய சம்சயம்தான் எங்களைச் சிந்தனையில் ஆழ்த்தியது. பணச் செலவைப் பற்றி மானேஜர் பிரஸ்தாபித்தார்.

அப்போது ஆசாரியர்களின் அசையாத தெய்வ நம்பிக்கையும், ஆண்டவனிடம் அவருக்குள்ள ஆழ்ந்த அன்பும் வெளியாயின. ''பணத்தைப் பற்றி இங்கு பேச வேண்டியதில்லை. ஏன் நடத்த வேண்டும், எப்படி நடத்த வேண்டும் என்பதுதான் யோசனை. இதனை நாம் முடிவு செய்து விட்டால் சந்திரமௌளீசுவரன் காரியத்தை நடத்திக் கொள்வார்'' என்று கூறினார்கள். 'எல்லாம் தெய்வச் செயல்' என்று நாம் அடிக்கடி சொல்வது போல் சொல்லாமல், ஒவ்வொரு வார்த்தையையும் பூரண நம்பிக்கையுடன் சொன்னார்கள். அவர்கள் கூறியபடியே நடந்தது. இளையாத்தங்குடியிலும் நாராயணபுரத்திலும் வித்வத் சதஸ்கள் அளவற்ற பொருட் செலவில் நிகழ்ந்தேறியது எப்படி என்பதற்கு இன்னும் நாம் காரணம் கூற முடியாது. சந்திரமௌளீசுவரன் நடத்தி வைத்தான் என்றுதான் சொல்லவேண்டும்.

கலிபுருஷனைக் கருணையினும் தோல்வியுறச் செய்யவே அவதரித்துள்ள ஆசாரியர்களைச் சந்திரமௌளீசுவரன் நீண்ட காலம் நம்மிடையே காத்துத் தருவானாக!

உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.





கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது. ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டமில்லாததுதான்.

இளமையில் வழுக்கை

இந்நிலையை நீங்கள் அனேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு ‘அமினோ ஆஸிட்’களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்ருக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.



ப்யூர் சில்விக்ரீன்

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது.

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது.



‘ஆல் எபௌட் ஹெயர்’ (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினுல் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மென்ட் K-2, சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ் தபால் பை 10022, பம்பாய்-1

Silvikrin

சில்விக்ரீன்—கேச ஆரோக்கியத்துக்கான வழி

SP/1/P/7/64

படத் தொழிலுக்கு அடிப்படையே திரைக் கதைதான். மேல்நாட்டில் படத்துக் கேற்ற கதைகளைத் தேடிப் பிடிப்பதற்காகவே ஒரு குழு பல நாவல்களைப் படித்துக் குறிப் பெடுத்தவண்ணம் இருக்கிறது. ஒரு குறிப் பிட்ட நாவல் படப் பிடிப்புக்கு ஏற்றதாயிருந் தால், அதன் ஆசிரியரிடம் அனுமதி கோரிப் பெற்று, கணிசமான தொகையைக் கொடுத்து நாவலைப் படமாக்கும் உரிமையைப் பெறு வார்கள். நம் நாட்டிலும் பல கதைகளையும், நாவல்களையும் படிக்கிறார்கள். ரஸமான பகுதியைத் தஸ்கரம் செய்து கொண்டு இரண்டு மூன்று நாவல்களைச் சேர்த்துக் கதம்பமாக்கி ஏதோ ஒரு பெயரில் பட மாக்கி விடுவார்கள். பாவம், நாவலாசிரியர்! அவருக்குத் தம் கதை படமாக வந்திருப்பதே தெரியாது.

இப்படிப்பட்ட தமிழ்ப்பட உலகில் பல ஆண்டுகளாகப் புகுந்து விளையாடிப் பெயர் பெற்ற பாடல் ஆசிரியர் தஞ்சை ராமையா தாஸ். அவர்களைச் சந்தித்துப் பேச அவர் இல்லம் சென்றேன்.

மாடர்ன் தியேட்டர்ஸின் வெற்றிப் பட மான, ''ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி''தான் அவருடைய முதல் படம். அதில் அவர் பாடல்கள் இயற்றினார். 1942ம் ஆண்டு அந்தப் படம் வெளி வந்தது.

ராமையாதாஸ் பாடல்கள் இயற்றுபவர் மாத்திரமல்ல; சினிமாவுக்குக் கதை, வசனம் எழுதுவதில் தேர்ந்தவர். 173 படங்களுக்குப் பாடல்கள் இயற்றியிருக்கிறார். இவற்றுள் கதை, வசனம் எழுதிய படங்களும் உண்டு.

குடும்பக் கஷ்டம் தாங்காமல் போலீஸில் சேரத் தீர்மானித்து மனுப் போட்டு விட் டார். வேலூருக்குப் போய்ப் போலீஸ் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து பயிற்சி பெற உத்தரவு வந்து விட்டது. ஆனால் தகப்பனார் சம்மதிக்க வில்லை. ஆகவே, ராமையாதாஸ் ஹையர்கிரேடு உபாத்தியாயர் பரீட்சையில் தேறி உபாத்தியாயரானார். பள்ளிச் சிறுவர் சிறுமியர் நடிக்க ஏற்ற நாட கங்கள் எழுதுவதிலேதான் இவரு டைய எழுத்துத் தொழில் ஆரம்ப மாயிற்று. பதினெட்டாவது வயதில் பாடல்கள் எழுத ஆரம்பித்தார். இவர் தகப்பனார் ஒரு தமிழறிஞர்.


''லீலா – சங்கர்'' என்ற இசைத் தட்டு நாடகத்தின் மூலம் திரு ராமையாதாஸுக்கு நல்ல புகழ் கிடைத்தது. அந்தக் காலத்தில் 'தாஸ்' என்ற இரண்டு எழுத்துக் களுக்கு இருந்து வந்த 'மவுஸ்' அதிகம். ஆகவே தான் ராமையா வும் லீலாசங்கர் இசைத் தட்டு வெளி வரும்போது ராமையாதாஸ் ஆகிவிட் டிருந் தார். கதை, வச னம், பாட்டு முத லியவற்றை இயற் றினதோடு திரு ராமையதாஸ் அந்நாடகத் தில் உபாத்தியாயராக நடித்தும் இருக்கிறார்.

''சினிமாவில் எப்படிப் புகுந்தீர்கள்?'' என்று கேட்டேன்.

''லீலா–சங்கர் இசைத்தட்டு நாடகத் தைக் கேட்டுச் சேலம் சங்கர் பிலிம்ஸார், 'அம்பிகாபதி'யில் பாடல் போட ஏற்பாடு செய்து தஞ்சையிலிருந்து என்னைச் சென் னைக்கு அழைத்துவந்தார்கள். ஆனால் எம். கே. தியாகராஜ பாகவதர் 'எனக்குப் பாபநாசம் சிவன்தான் பாட்டுப் போட வேண்டும். இளங்கோவன்தான் வசனம் எழுத வேண் டும். அவர்கள்தான் எனக்கு ராசியான வர்கள்!' என்று கண்டிப்பாய்க் கூறிவிடவே நான் மீண்டும் தஞ்சைக்கு வந்து சேர்ந் தேன். முதல் எடுப்பிலேயே தோல்வி கண் டாலும் பிறகு நல்ல வெற்றி கிட்டியது!'' என்றார் திரு ராமையாதாஸ்.

தம் அநுபவங்களைச் சொல்லும் போது திரு ராமையாதாஸிடம் காணும் நகைச்சுவை உணர்ச்சி, கதை சொல்லும் திறன் ஆகியவைகள் பிரமாதம்!

'' எனக்குத் தேச பக்தி உண்டானதற்குக் காரணம் லாலா லஜபத் ராயின் 'அன ஹேப்பி இந்தியா' என்ற நூல்தான். பிரிட்டிஷார் அதைப் பறிமுதல் செய்திருந்தனர். தேச பக்தியைத் தூண்டும் பாடல் களை இயற்றி மேடையில் பாடிய தால் சிறைக்குக் கூடச் சென்றிருக்கி றேன்'' என்றார்.



தஞ்சைராமையா தாஸிடம் பயின்ற ஆரூர்தாஸ் ஏற் கனவே திரை உல கில் பிரபலமான வர். மேலும் அம லன், செல்லமுத்து ஆகிய இருவருக்கும் தமது அநுபவ பூர்வமான அறிவாற் றலை வழங்கி அவர்களை முன் னுக்குக் கொண்டு வர முயன்று வருகிறார்.

ஒரு படம் என்றால் அறுபது பாடல்களுக்குக் குறையக் கூடாது என்ற விதி இருந்த அந்தக் காலத்திலிருந்து கச்சித மாக ஏழு பாடல்கள் இருந் தால் போதும் என்ற இந்தக் காலம் வரையில் நிறையப் பாடல்கள் போட்டு வந்திருக் கும் ராமையாதாஸ் ''மக்க ளுக்கு மகிழ்வூட்டுவதுதான் சினிமாவின் முக்கிய நோக்க மாக இருக்க வேண்டும் என்பது என் அபிப்பிராயம்!'' என்றார். அவர் சொல்லுவதும் நியாயந் தானே!

—விஜயம்



ஆன்மிகத்துக்கு ஓர் ஆலயம்



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் சநாதன தர்மத்துக்குச் செய்துள்ள பணிகள் பலப்பல. சநாதன தர்மத்தை மக்கள் எல்லோரும் ஏற்பதற்காக அவர்கள் செய்துள்ள சிந்தனைகள் பலப்பல. இந்தச் சிந்தனைகளில் சிகரமாக அமைந்து, பின்னர் செயலிலும் சிறப்புறப் பொலிந்த தர்ம நிலையமே ராமேசுவர க்ஷேத்திரத்தில் நிர்மாணமாகியுள்ள ஸ்ரீசங்கர மடம். சென்ற ஆண்டு சங்கர ஜயந்தியன்று இரு பெரியவர்களும் இம்மடத்துக்குக் கும்பாபிஷேகம் நடத்தி வைத்தனர்.

பாரதத்தின் தெற்குக் கோடியில் சாகரத்தில் ஸ்நானம் செய்து எழுபவர்கள் எல்லாரும், பாரதத்தைப் பாரதமாகப் புனர் நிர்மாணித்த ஞான சாகரமாகிய ஸ்ரீ ஆதி சங்கர பகவத்பாதரின் திரு உருவச் சிலையைக் காணும் கோணத்தில் இம்மடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

முப்பதடி உயரத்தில் சுரேச்வரர், பத்மபாதர், ஹஸ்தாமலகர், தோடகர் ஆகிய பிரதான சிஷ்யர்கள் சூழ வீற்றிருக்கும் ஸ்ரீ ஆதி ஆசாரியரின் கம்பீரமான பளிங்குப் பிம்பமே இம்மடத்தில் கர்ப்பக் கிருஹம் போன்றது. அதற்குச் சுற்றுக் கோயில்களாக மதிக்கத் தக்க சந்நிதிகள் யாவை என்றறிந்தால், நமது ஜகத்குரு எப்படிப் புனிதங்களையெல்லாம் ஒரே இடத்தில் திரட்டித் தேக்கித் தருகிறார் என்பதும், அவரது கலை உணர்வும், விசால மனப்பான்மையும் புரியும்.

பாரதப் பண்பை விளக்கும் வேதம், இதிகாசம், புராணம் முதலியவைகளில் நாம் பரிசயம் கொள்ளும் இருபத்தெட்டு சிரேஷ்டர்களின் சிற்பங்கள் மைய மண்டபத்தைச் சுற்றிப் பதிக்கப்பட்டிருக்கின்றன. ஜனகர்-யாக்ஞவல்கியர், சனத்குமாரர் - நாரதர், யமன் - நசிகேதன், சூதர் - மஹரிஷிகள், நாரதர் - துருவன், பிரஹலாதன் - அசுரபாலகர்கள், சப்தரிஷிகள், குசலவர்களுடன் கூடிய வால்மீகி மகரிஷி, தர்மபுத்ரர் - பீஷ்மர், வித்யாரண்யர், அப்பய்ய தீட்சிதர், நீலகண்ட தீக்ஷிதர், மதுசூதன சரஸ்வதி, மீராபாய், ராம்தாஸ், கபீர் - ராமானந்தர், ஏகநாதர் — ஜனார்த்தனர், சிவாஜி - ஸமர்த்த ராமதாஸர், தானிஷா - பத்ராசலம் ராமதாஸர், கீதகோவிந்தம் செய்த ஜயதேவர் - பத்மாவதி, போதேந்திரர்- ஸ்ரீதரவேங்கடேசர், பட்டினத்தார் - பத்ரகிரி, சத்குரு தியாகப்ரம்மம், சைதன்ய மகா பிரபு, துளசிதாஸர், சதாசிவ பிரம்மேந்திரர் இப்படியாக உன்ன உன்ன உள்ளத்தில் உன்னத எண்ணங்களை ஊறச் செய்யும் உத்தமர்களையெல்லாம் ஒருசேரத் தரிசிக்கிறோம்.

ஒவ்வொரு சிற்பத்தின் அடியிலும் அந்தந்தச் சிற்பத்துக்குப் பொருத்தமாக விளக்கங்கள் பொறிக்கப் பட்டிருக்கின்றன.

சங்கர மண்டபத்தின் முன் ஸ்ரீ ஆஞ்சநேயரின் ஆலயம் அமைந்திருக்கிறது.

அதன் பின்புறத்தில் பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தந்த ஜோதிர்லிங்கங்கள் உள்ள ஆலயங்களின் கோபுர அமைப்புப்படியே இங்கும் விமானங்கள் நிர்மாணிக்கப்பட்டிருப்பதால் அகில பாரத ஸ்தலங்களையும் ஒரே சமயத்தில் இங்கு தரிசிக்கலாம்.

இமயத்தில் உள்ள கேதாரேச்வரர், சௌராஷ்டிரத்தில் உள்ள சோமநாதர், உஜ்ஜயினியிலுள்ள மஹா காளேச்வரர், காசியில் உள்ள விச்வநாதர், பரலியில் உள்ள வைத்தியநாதர், டாகினியிலுள்ள பீமசங்கரர், நாசிக் அருகில் உள்ள திரியம்பகர், அவுந்தில் உள்ள நாகேசர், நர்மதை தீரத்திலுள்ள ஓங்காரேச்வரர், எல்லோராவில் உள்ள திருஷ்ணேச்வரர், ஸ்ரீசைலத்திலுள்ள மல்லிகார்ஜுனர், ராமேச்வரத்திலுள்ள ராமநாதர் ஆகிய லிங்க மூர்த்தங்களே பன்னிரு ஜோதிர்

ஔவையைக் கைலாயம் சேர்க்கிறார் கணநாதன்

தானிஷாவும் பத்ராசல ராமதாஸரும்

மதுசூதன சரஸ்வதியும் பலபத்திரரும்



லிங்கங்கள். ஆதி சங்கரர் இவ்வாலயங்கள் பன்னிரண்டையும் தரிசித்துத் துதித்துள்ளார். அவர் ஒரே துதியில் சொல்லால் ஆக்கித் தந்த தரிசனத்தை ஒரே இடத்தில் கல்லால் ஆக்கித் தந்துவிட்டார் நமது ஜகத்குரு.

துவாதசலிங்க ஆலயங்களுக்குப் பின்புறத்தில் ஜப மண்டபம். அதற்குப் பின், எல்லோரும் புஷ்பம் நிவேதிக்கக் கூடிய வகையில் சலவைக் கல்லில் ஆசார்ய பாதுகைகள் அமைந்துள்ள மண்டபம். இந்தப் பாதுகை மண்டபமானது காமகோடி பீடம் ஸ்ரீ மடம் சிப்பந்திகளின் கைங்கரியத்திலேயே நிர்மாணிக்கப்பட்டது.

சலவைக் கல்லில் சிறந்த வேலைப்பாட்டுடன் அமைந்த கலைவாணியின் திருவுருவம் சங்கர மண்டபத்தின் பின்புறமுள்ள நூல் நிலையத்தில் உள்ளது. அதன் பக்கத்தில் கணேச தியானத்தில் கூறப்பட்டுள்ளபடி பதினாறு வித கணேச உருவங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அகில பாரதத்திலுமுள்ள சிவபெருமான் திருமூர்த்தங்களை மடத்தின் ஒரு பகுதியில் காண்கிறோம் எனில், அம்பிகையின் திரு உருவங்களாகவே இந்நாடு முழுவதும் தோன்றிய நாரீமணிகளை இன்னொரு பகுதியில் தரிசித்து மனம் குளிரலாம்.

பாரதத்தின் பக்திக்கும் கற்புக்கும் எடுத்துக்காட்டாய் விளங்கும் அருந்ததி, அநசூயா, காவேரி (லோப முத்திரை), மண்டோதரி, சீதை - திரிசடை, சபரி, சந்திரமதி, தமயந்தி, திருதராஷ்டிரன் குருடனானதால் தானும் கண்களைக் கட்டிக்கொண்ட காந்தாரி, ஆர்யாம்பிகை (ஆதி சங்கரரின் தாயார்), பால சங்கரருக்கு நெல்லிக் கனி இட்ட ஏழை அந்தண மாது, நளாயினி, சாவித்திரி, ஸுகன்யா, ஔவை, கண்ணகி, வள்ளுவர் மனைவி வாசுகி ஆகியோர் உள்ளிட்ட இருபத்தொரு புண்ய மங்கையர்களின் திருவுருவங்கள் நூல் நிலையத்தில் பொறிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி யந்திர சக்கரம் ஸ்ரீ சங்கர மடத்தில் ஸ்தாபிதம் செய்யப்பட்டுள்ளது.

'சென்றிடுவீர் எட்டுத் திக்கும்; கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்து இங்கு சேர்ப்பீர்' என்று கவிபாடியதற்கேற்ப நாட்டின் நாலு திசைகளும் கண்ட ஆத்மிக அழகுகளைச் சேர்த்துத் தருவது ஸ்ரீ ராமேசுவரத்திலுள்ள சங்கர மடம். அகில பாரத ஐக்கியப் பாட்டினைப் பற்றி மிகவும் பேசப்படும் இக் காலத்தில், ஆத்மிக ரீதியில் இந்நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள சீலங்களை யெல்லாம் குவித்துத் தரும் பண்பு நிறுவனம் ஸ்ரீ ராமேசுவரத்து மடம். திரேதாயுகத்தில் ஸ்ரீ ராம பிரான் ஆலயமெடுத்து வழிபட்ட இந்த மகா க்ஷேத்திரத்தின் பெருமையை இவ்வாலய ஸ்தாபனத்தின் மூலம் ஸ்ரீ ஜகத்குரு புதுப்பித்திருக்கிறார்.

நம் உள்ளத்தை உயர்த்திக் கொள்ள ஓர் ஒப்பற்ற ஆத்மிகக் கருவூலமாக பரமாசாரியர் நிர்மாணித்துள்ள ராமேசுவர மடத்தை நாம் பூரணமாகப் பயன் செய்து கொள்வோமாக!



ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள் உலகுக்கு அளித்துள்ள செல்வங்களில் தலைசிறந்த செல்வம் இளைய பெரியவர்களாகிய ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள். மேலே ஞானவேந்தரை இளவரசர் பணியும் இனிய காட்சியைக் காண்கிறோம்.



சிவாஜியும் மகாராஷ்டிரத்து மகான் ராமதாஸரும்



மீராவுக்குக் கண்ணன் பதுமையை அளிக்கிறார் ரூபகோஸ்வாமி



கிருஷ்ணபக்தியைப் பெருக்கிடச் சென்ற சைதன்ய மகாப்பிரபு


வசீகரத்தையும், பெருமிதத்தையும் கொடுக்கும் நறுமணம் உங்களுக்கு பாமாலிவ் லவண்டர் டால்க் உபயோகிப்பதால்.

உங்களுக்கு மிகவும் பிடித்தமான ஸெண்டுகள்—உங்களுக்காகவே மீண்டும் உருவாக்கப்பட்டிருக்கின்றன!


ஒரு காலத்தில் உலக அழகுக் கேந்திரங்களின்று இறக்குமதி செய்யப்பட்டவையும், உங்களுக்கு மிகவும் பிடித்தமானவையுமான ஸெண்டுகளின்றி இனி நீங்கள் தவிக்கவேண்டாம்...இன்று பாமாலிவ் லவண்டர் டால்க் மட்டுமே அளிக்கும் வசீகர நறுமணத்தினாலும், பெருமிதத்தினாலும் உங்கள் உடலைச் சொகுசாகப் பராமரிக்க முடியும். பாமாலிவ் லவண்டரை உங்கள் உடம்பு முழுவதும் தூவிக் கொண்டு, சூழ்ந்து நிற்கும் அதன் இனிய வசீகர நறுமணத்தினால் களிப்படையுங்கள்.

எப்பொழுதும் புத்துணர்ச்சியுடனும் நறுமணம் சூழ்ந்த அழகுடனுமிருக்க பாமாலிவ் லவண்டர் டால்க்.

புதிய, நவீன காஸ்மெடிக் டின்!







மற்றும் கிடைக்கும் பாமாலிவ் டால்க் வகைகள்—
மயக்கும் 17 ஸெண்டுகளின் அற்புதமான கலை

PT.G.7 TAM.

இளைய பாரதத்தினர்

"— மக்கள்
துங்கம் உயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்ததும் இந்நாடே."

என்று பாரதப் பண்பாட்டின் சிறப்பைப் பாடினார் பாரதியார். நம் பண்பாட்டின் பெருமையை விளக்கக்கூடிய திருக் கோயில்களையும், திருவிழாக்களையும் அயல்நாட்டினரும் கண்டு களிக்கும்படி 'தமிழ்நாட்டின் திருக்கோயில்களும் திருவிழாக்களும்' என்னும் டாக்குமெண்டரிப் படத்தைத் தயாரித்தளித்திருக்கிறார்கள் மொராக் ஸ்தாபனத்தார். இந்த ஸ்தாபனத்தில்தான் திரு எஸ். கிருஷ்ணசாமி பணியாற்றுகிறார்.


விவேகாநந்தாக் கல்லூரியில் இண்டர் வகுப்புத் தேறி, பிரஸிடென்ஸி காலேஜில் சேர்ந்து பி. எஸ்ஸி. (பிஸிக்ஸ்) பட்டமும் பெற்றார். திரைப்பட டைரக்டர் கே. சுப்பிரமணியம் அவர்களின் புதல்வரான விஞ்ஞானப் பட்டதாரி திரு கிருஷ்ணசாமிக்கு ரத்தத்தோடு திரைப்பட ஞானமும் கலந்திருக்கதில் அதிசயமில்லை. அவர் சுயமுயற்சியில் வெள்ளித் திரையைப் பற்றி ஆராய்ச்சிக் குறிப்புகள் தயாரித்து வந்தார்.

கிருஷ்ணசாமி ஆர். ஸி. ஏ. ஸ்தாபனத்தில் சேர்ந்து எலெக்ட்ரானிக்ஸ் விஞ்ஞானத்தில் விசேஷப் பயிற்சி பெற அமெரிக்கா சென்றார். 'நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும்' என்பது உண்மையாகிவிட்டது. அவர் தங்கியிருந்த இடத்துக்கு எதிரே கொலம்பியா சர்வகலாசாலை இருந்தது. ஒரு நாள் அச்சர்வ கலாசாலையைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரச் சென்றார் கிருஷ்ணசாமி. வரவேற்பு அறையில் அந்தச் சர்வகலாசாலையில் பயிலுவிக்கப்படும் கலைகளைப்பற்றி விரிவான புத்தகங்கள் இருந்தன. அவற்றில் கலைப் பிரிவில் பொதுஜனத் தொடர்பு (Mass Communication) பற்றி ஒரு பயிற்சி இருந்தது. இத்தனை நாட்கள் கிருஷ்ணசாமி சென்னையில் இருக்கும்போது வெள்ளித்திரையைப் பற்றிச் செய்துவந்த ஆராய்ச்சிக்கு மேலும் தூண்டுகோலாக அமையும் பயிற்சி இது.

கொலம்பியா சர்வகலாசாலைப் பேராசிரியர் ஒருவரிடம் தாம் வெள்ளித்திரையைப் பற்றி எழுதியிருந்த ஆராய்ச்சிக் குறிப்பைக் கொடுத்து, தாம் அந்தச் சர்வகலாசாலையில் சேருவதற்கான ஆசைக்குக் காரணத்தைத் தெரிவித்தார். அந்த ஆராய்ச்சிக் குறிப்பு அந்தப் பேராசிரியருக்குக் கிருஷ்ணசாமியிடம் அளவற்ற ஈடுபாட்டை ஏற்படுத்தி விட்டது. பிறகு அவரே முன்னின்று சர்வகலாசாலையில் சேருவதற்கான கைங்கரியங்களைச் செய்து கொடுத்தார். 'உமக்கு எம். ஏ. பட்டம் கொடுக்க இயலாது. ஆனால் விசேஷ மாணவராகச் சேர்த்துக் கொள்கிறோம்' என்று கூறிவிட்டனர் சர்வகலாசாலையினர்.

சர்வகலாசாலையில் சேர்ந்த நாலு மாதங்களுக்குள்ளேயே கிருஷ்ணசாமியின் திறமையைக் கண்டு வியந்தனர் பேராசிரியர்கள். அது மட்டுமல்ல; பிறகு அவருக்குக் கொடுக்க முடியாதென்ற எம். ஏ. பட்டமும் அவரை வந்தடைந்தது.

நியூயார்க்கிலுள்ள ரீஜண்ட் கம்பெனி, டெலிவிஷன் திட்டத்தில் டெலிவிஷன் எழுத்தாளர், உதவித் தயாரிப்பாளர் பயிற்சி பெற்று, வாரம் ஒரு டெலிவிஷன் நிகழ்ச்சி வீதம் கிழக்கத்திய நாடுகளைப் பற்றி இருபத்தாறு நிகழ்ச்சிகளைத் தயாரித்து அளித்திருக்கிறார் திரு கிருஷ்ணசாமி.



திரு கிருஷ்ணசாமி

கிருஷ்ணசாமியின் செயலாற்றலை வியந்து அமெரிக்க புரொட்யூசர், டைரக்டர் எட்வர்ட் எம். ஜிம், "இவரது பணி ஈடு இணையற்றது!" என்று பாராட்டியிருக்கிறார்.

அமெரிக்காவில் பேராசிரியர்களுக்கு ஒரு சௌகரியம். ஆறு வருஷங்கள் பணி புரிந்து விட்டால் ஒரு வருஷம் அவர்களுக்கு ஓய்வு கொடுத்து அவர்கள் தங்கள் கலை ஞானத்தைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்புக் கொடுக்கிறார்கள்.

கிருஷ்ணசாமி கொலம்பியா சர்வகலாசாலையில் பட்டம் பெற்று இந்தியா திரும்பும் சமயம், அவரது உள்ளம் கவர்ந்த கொலம்பியா சர்வகலாசாலை நாடகக் கலை துணைப் பேராசிரியர் எரிக் பார்னேவ் அவர்களுக்கு ஒரு வருட ஓய்வு கிடைத்த தருணம். அவர் தம் ஓய்வை நல்லபடியாகக் கழிக்கத் திட்டமிட்டார்.




பேராசிரியர் பார்னேவ்


அப்போது, ''இருவரும் சேர்ந்து இந்திய வெள்ளித்திரை பற்றி ஒரு புத்தகம் எழுதலாமா?'' என்ற எண்ணத்தைக் கிருஷ்ணசாமி தெரிவித்தபோது, அவர் உடனே மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டு விட்டார். இவர்களது முயற்சிக்கு புல்பிரைட் ஸ்காலர்ஷிப்பும் கிடைத்தது.

இந்தியாவுக்கு இருவரும் வந்து திரைப் படம் சம்பந்தப்பட்ட டைரக்டர்கள், நடிகர்கள், படாதிபதிகள், தொழில் நிபுணர்கள் ஆகியவர்களைப் பேட்டி கண்டனர். 'இந்திய வெள்ளித் திரை' என்ற ஆராய்ச்சிப் புத்தகம் வெளி வந்தது. 'வாஷிங்டன் போஸ்ட்' என்னும் அமெரிக்கப் பத்திரிகை '''இந்திய வெள்ளித்திரை' உயிருள்ள, அறிவூட்டும் புத்தகம்'' என்று சிறப்பாக எழுதியுள்ளது.

இளம் வயதிலேயே பெரும் புகழ் சம்பாதித்துள்ள திரு எஸ். கிருஷ்ணசாமி இப்பொழுது 'இந்தியாவில் புரட்சி' என்னும் முழுநீள இரண்டரை மணி நேர டாக்குமெண்டரிப் படத்தைத் தயாரிப்பதில் கவனம் செலுத்தி வருகிறார். 1925ம் வருஷத்திலிருந்து 1963ம் வருடம் வரையில் இந்தியாவில் நடைபெற்ற கலை, சமூக, அரசியல் — போராட்டங்களைச் சித்திரிக்கும் திரைப்படமாக இது அமையும்.

இந்திய சர்க்கார் திரைப்படப் பிரிவில் உத்தியோகம் கிடைத்தும் அதை வேண்டாமென்று உதறி விட்டு, சுதந்திரமாகத் தாம் நினைத்தபடி செயலாற்றும் இளைஞர் திரு கிருஷ்ணசாமி விரைவில் புகழேணியின் உச்சியை அடைவார்.

— குண்டுமணி



மூல நோயை

முற்றவிடாமல்
நம்பிக்கையான

ஹெடன்ஸா

உபயோகித்து
நிவாரணம் அடையுங்கள்
—ரண சிகிச்சையையும்
தடுங்கள்

பொறுக்க முடியாத வலியா? தாங்க முடியாத அரிப்பா? எரிச்சலெடுக்கும் உணர்ச்சியா? ரத்தக கசிவா? உடனடியாக சிகிச்சை செய்யத் தாமதியாதீர்கள்! அலட்சியம் செய்தால், நோய் முற்றி ரணசிகிச்சை செய்ய வேண்டிவரும். 108 தேசங்களிலுள்ள டாக்டர்களால் சிபாரிசு செய்யப்பட்ட, நம்பிக்கையான ஜெர்மன் மூலநோய் களிம்பு ஹெடன்ஸா உபயோகித்து இப்பொழுதே நிவாரணம் பெறுங்கள்! ஹெடன்ஸா வலியையும் அரிப்பையும் சீக்கிரம் நிறுத்தி, மலப் பிரவிருத்தியைச் சுலபமாக கஷ்டமில்லாமல் செய்கிறது. முக்கியமாக, ஹெடன்ஸாவிலுள்ள சக்திவாய்ந்த மருந்துப் பொருள்கள் நீடித்த நிவாரணமளிப்பதோடு, வெடிப்புகளைச் சுருங்கச் செய்து, ஆரோக்கியமான தசைகளை வளர்க்கிறது. மூலநோய்க்குக் காலாகாலத்தில் ஹெடன்ஸா உபயோகித்தால் பிற்காலத்தில் ரணசிகிச்சை செய்யவேண்டிய நிலை ஏற்படாது என்பது ஞாபகமிருக்கட்டும்.

ஹெடன்ஸாவில் உணர்வழிக்கும் மருந்துகள் ஒன்றும் கிடையாது.


ஒரிஜினல் ஜெர்மன் முறைப்படி
இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

தி டாலர் கம்பெனி

337, தம்பு செட்டி தெரு
சென்னை-1

பிரபல மருந்து வியாபாரிகளிடம்
கிடைக்கும்.

83-DOL-2 A TM



கயல் விழி



குலோத்துங்க சோழரின் ராஜதந்திரத்தைப் புரிந்துகொண்டு செயலாற்றத் துணிந்த பாண்டிய மன்னர், ''நாம் இரண்டில் ஒன்றை முடிவு செய்ய வேண்டும். அதை இப்போதே முடிவு செய்ய வேண்டும்'' என்று தம் குரலை உயர்த்தி அழுத்தமாகப் பேசினார். ''பாண்டிய மண்டலத்தைச் சோழர்களிடமே விட்டு விட்டு நாம் அடிமைகளாகப் பணிந்து விடுவது; அல்லது, இப்போதே, இந்தக் கணத்திலேயே பாண்டிய நாடு தன் உரிமை பெற்று விட்டதாக அறிவித்து விட்டுச் சம உரிமையோடு வாழத் துணிவது. முடிவு கூறுங்கள்!''





''வாழ்க, குலசேகர பாண்டியர்! வாழ்க, பாண்டியத் திருநாடு! நாம் உரிமையோடு வாழ்வோம்!''

ஆரவாரங்களும் ஆனந்தக் கூக்குரலும் மகிழ்ச்சிப் பெருவெள்ளமும் அடங்குவதற்குச் சிறிது நேரமாகியது. பொறுக்கும்படி சைகை செய்த பாண்டியர், ''தன்னுரிமை என்பது வீரமுள்ள ஆண் மக்கள் வாழும் நாட்டில்தான் மலரக் கூடியது. அதற்காகச் செலுத்த வேண்டிய காணிக்கையையும் நாம் மறக்கலாகாது!'' என்றார். பின்னர், ''அறுபதாயிரம் யானைகளைக் கொண்ட யானைப் படையையும், லட்சத்துக்கு மேற்பட்ட குதிரை வீரர்களையும், பல லட்சம் பேர் கொண்ட பயிற்சி பெற்ற காலாட்படையையும் தன்னிடம் வைத்துக் கொண்டிருக்கிறது சோழ சாம்ராஜ்யம். நம்முடைய உரிமை வாழ்வின் வெகுமதியாக முதலில் போர்க்களத்தில் நாம் அதனைச் சந்திக்க வேண்டியதாயிருக்கும்'' என்று தமது படைத் தலைவர்களைப் பார்த்துக் கூறினார்.

''ஏழகப்படை எந்தக் கணத்திலும் சித்தமாக இருக்கிறது'' என்றார் அழகிய பெருமாள்.

''மறவப் படையும் கட்டளைக்குக் காத்திருக்கிறது'' என்றார் மழவச் சக்கரவர்த்தி.

''படைத் தலைவர்களின் வீரத்தைப் போற்றுகிறேன். பகைவரின் வலிமையை அறிந்த பிறகும் அவர்கள் கலங்கவில்லை. ஆனால் நமது இரு படைகளும் சேர்ந்து சோழர்களது பெருஞ் சேனைக்குமுன்பாக நூற்றில் ஒரு பங்கே தேறும்! இன்னும் நமக்கு வீரர்களும் வேண்டும்; ஆயுதங்களும் வேண்டும்.''

''பாண்டியநாடே போர்க்களமாகும்; ஒவ்வொரு வீடுமே பாசறையாகும்!'' என்று துள்ளி எழுந்து கூவினார் விழுப்

பரையர்: "பாண்டிய மக்கள் தங்களுடைய எண்ணத்தில் மனத் திண்மையை விதைத்துக் கொண்டால் போதும். 'உலகத்தில் எந்தப் பகைக்குமே இனித் தலை வணங்கி அடிமைகளாக வாழ மாட்டோம்' என்று உறுதி பூண்டு விட்டார்களானால் போதும். 'எண்ணிய எண்ணியாங்கெய்துவர், எண்ணியர் திண்ணியராகப் பெறின்' என்று கூறிய வள்ளுவப் பெருந்தகையின் நூலை அரங்கேற்றிய நாடு இது. அந்தப் பொய்யாமொழியை நாம் இதுவரை மறந்திருந்தோம். இனி மறக்க மாட்டோம். போர் மூண்டு இந்த நாடே அழியுமென்றாலும், இனி இந்த மண்ணில் வேறொருவரின் ஆட்சியை நடைபெற விடமாட்டோம். இன்றே உரிமை பெற்று விட்டோம். இனி உரிமைக்குள்ள கடமைகளை ஒருபோதும் மறவோம்...!"

"வெல்க பாண்டிய நாடு! வாழ்க, வீர மறவர் திருநாடு!" — அந்த மாளிகையே வாழ்த்தொலியால் அதிர்ந்தது.

சபை கலைந்தவுடன் குலசேகர பாண்டியர் அமைச்சர் சயங்கொண்ட சோழவல்லபரைத் தனியே அழைத்தார். அவரிடம் தமது திருமந்திர ஓலையை நீட்டினார். "அமைச்சர் அவர்களே! குலோத்துங்க சோழரது ஒற்றர் படைத் தலைவராக இருந்த தாங்கள் இந்த நாட்டின் அமைச்சராக அங்கிருந்து அனுப்பப் பெற்றீர்கள். அமைச்சர் என்ற முறையில் தாங்கள் ஆற்றிய அரும் பணிகளை இந்த நாடு என்றுமே மறக்காது. ஆனால் தாங்கள் தங்களை இந்தப் பதவிக்கு உயர்த்திய சக்கரவர்த்திகளின் பணிகளையும் சிறிதும் மறந்து விடவில்லை. சுந்தர பாண்டியனின் போக்கும், அவனிடம் இந்த நாட்டு மக்கள் கொண்டிருக்கும் பற்றுதலும் சோழ சாம்ராஜ்யத்துக்கே ஆபத்தாகிவிடுமோ என்று தாங்கள் அஞ்சுகிறீர்கள். சக்கரவர்த்திகளையும் அவ்வாறே அஞ்சச் செய்திருக்கிறீர்கள். இந்த விஷயத்திலும் தங்களுடைய கடமையைத்தான் சக்கரவர்த்திக்குத் தாங்கள் செய்திருக்கிறீர்கள்."

சயங்கொண்ட சோழவல்லபர் தம் வாழ்நாளிலேயே இப்படி ஓர் அநுபவம் பெற்றதில்லை. தலை நிமிர்ந்து நோக்கத் திறனின்றிக் குனிந்திருந்தார்.

"கங்கை கொண்ட சோழபுரத்துக்குத் தாங்கள் இன்றே புறப்பட்டுச் செல்லலாம். பாண்டியநாடு உரிமை பெற்று விட்டது. ஆனாலும் இது பகையை விரும்பவில்லை. குலோத்துங்க சோழரும் இங்கு விருந்தினராக வரலாம். ஆனால் நட்புரிமை கொண்ட விருந்தினராக வரலாமே தவிர, வெற்றி கொண்டவராக வர முடியாது."

"அரசே! பாண்டியர்களின் வீரத்துக்கு நான் தலை வணங்குகிறேன். நானும் என் குடும்பத்தாரும் இப்போது விடைபெற்றுக் கொள்கிறோம். தங்களுடைய அன்பு நிறைந்த பண்பை என்னால் எளிதில் மறந்துவிட முடியாது." சயங்கொண்ட சோழ வல்லபரின் நாத் தழுதழுத்தது.

வருத்தத்துடன் சிரிக்க முயன்றார் பாண்டியர். பல ஆண்டுகளாகப் பழகியவரின் பிரிவு அது. கடமைகளின் காரணமாகக் கருத்துக்களில் வேறுபாடு கொண்டிருந்தாலும் எப்படியோ ஒருவகை அன்பு அவர்களைப் பிணைத்திருந்தது.

"ஒருவேளை நாமே மீண்டும் போர்க்களத்தில் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும்! அப்படித்தானே?" என்றார் பாண்டியர்.

சயங்கொண்ட சோழ வல்லபருக்கு மறுமொழி கூறத் தெம்பில்லை. எந்தப் பாண்டிய மன்னரின் அன்பாலும், ஆதரவாலும், பொன்னாலும், மணிகளாலும், தமது வாழ்வையும், தமது குடும்பத்தினர் வாழ்வையும் வளப்படுத்திக் கொண்டாரோ அவருக்கு எதிராகவே போர்க்களத்தில் வாள் உயர்த்தத்தான் வேண்டுமா? அவருடைய இராஜதந்திர வாழ்க்கையில் அந்த ஒரு கணம் மட்டிலும் அவருக்கு வெறுப்பு ஏற்பட்டது.

"சந்திப்போம், சென்று வாருங்கள்!" என்ற பாண்டியர், "தங்களையும், குடும்பத்தாரையும் சோழ நாட்டுக்கு அனுப்பி வைக்க ரதங்கள் சித்தமாகி விட்டன" என்று முடித்தார்.

பதினொன்றாம் அத்தியாயம்

நெருப்பு

மதுரைமாநகரத்தின் உள் மதிலுக்கப்பால் அதன் புற மதிலுக்குள்ளே அமைந்திருந்த பெரியதொரு மாளிகை மரங்களாலும் பூங்கொடிகளாலும் சூழப்பெற்றுக் கண்ணுக்கினிய காட்சியைக் கொடுத்துக் கொண்டிருந்தது. அங்கங்கே அதன் சுற்றுச் சுவருக்குள் காணப்பெற்ற தனித் தனிக் கூடங்களிலிருந்து

பல்வகையான இசைக் கருவிகளின் ஒலிகள் எழுந்து கொண்டிருந்தன. சிவி கைகளும், ரதங்களும், குதிரைகளும் ஆங்காங்கே தென்பட்டு அதில் வசித்த வர்களது செல்வச் செழிப்பை எடுத்துக் காட்டின.

குதிரை வீரர்கள் இருவர் அதன் வாயில் முகப்பு வழியே உள்ளே புகுந்து கண்களால் அந்த மாளிகையின் அழகைப் பருகிக் கொண்டே மெல்ல ஊர்ந்து வந்தனர். அவர்களது உடைத் தோற் றம் அவர்கள் சோழ நாட்டைச் சார்ந் தவர்கள் என்பதைக் குறிப்பிட்டது.

''நாடோடிகளாகத் திரிந்து வள்ளல் களையும், அரசர்களையும் களிப்புறச் செய் வதே பாணர்களின் வழக்கம். பாணர்கள் செல்வர்களாக வாழ்ந்ததை நாம் கண்ட தில்லை. இங்கு பாண்டிய நாட்டிலோ தனி மாளிகை எழுப்பிக் கொண்டு சிறப்பாக வாழ்கிறாள் ஒரு பாணர் குல மங்கை!'' என்றான் ஒருவன்.



''இவ்வளவுக்கும் குல சேகர பாண்டியரின் ஆத ரவு இவளுக்குக் கிடை யாதாம். பாண்டிய நாட்டு மக்களுக்கு இவள் பெயரைக் கேட்கும் போதே மகிழ்ச்சி பொங் குகிறது. சேர நாட்டிலும் ஈழ நாட்டிலும் கூட இவ ளுடைய கூத்தென்றால் மக்கள் பெரும் திரளாகக் கூடுவார்களாம்.''

''கயல்விழிக்கு அதிர்ஷ் டம் பிறந்து விட்டது!'' என்று பெருமையோடு கூறினான் அவன். ''நம்முடைய இள வரசர் இராஜ ராஜருடைய செவி களுக்கு இவளுடைய அழகின் புகழும் ஆட்டத்தின் புகழும் எட்டி விட்டன. அரச குலத்து இளவரசிகளை விட இவள் பாக்கியம் செய்தவள்.''

''சோழ நாடு பாக்கியம் செய்திருக் கிறதென்று சொல்! பெரிய சக்கரவர்த் திகள் ஒட்டக்கூத்தர், கம்பர் போன்ற பெரும் புலவர்களை ஆதரித்துப் புகழ் பெற்றவர். இளவரசருக்கோ இசைகளி லும், நடனங்களிலும் நாட்டம்.''

''பெரிய சக்கரவர்த்திகளுக்கு இள வரசரின் இந்தப் போக்குத்தான் கவலை யைத் தருகிறது. அதனால்தான் நம் மைக்கூடச் சக்கரவர்த்திகளுக்குத் தெரி யாமல் இங்கு அனுப்பி வைத்திருக் கிறார் இளவரசர்.''

குலோத்துங்க சோழர் தம்முடைய குமாரனிடம் இன்பம் விழையும் மனப் போக்கு மிகுந்திருப்பதைக் கண்டு கவலை யுறுகிறார் என்பது நாடறிந்த இரகசிய மாகி விட்டது. அரசியல் பொறுப்பை ஏற்கும் தகுதி களியாட்டங்களில் மிகுதி யாக ஈடுபடுவோருக்கு அமைந்து விடுவ தில்லை என்பது அவர் கருத்து. அரசியல் வாழ்வின் துன்பங்களைச் சற்று மறப்ப தற்காகவே அவற்றை நாட வேண்டுமே தவிர, அவைகளில் ஆழ்ந்து மூழ்குவது அரசியலுக்கு ஆபத்து என்பார். இராஜ ராஜனோ இவ்விஷயத்திலும் தந்தையா ருக்கு நேர்மாறானவனாக இருந்தான்.

கயல்விழியின் மாளிகையின் உள் முகப்பில் அவளுடைய தந்தை ஆதிச்ச தேவர் வந்தவர்களை வரவேற்று அவர்கள் வந்த நோக்கத்தை வினவினார்.

வந்தவர்கள் தாங்கள் கொண்டு வந்திருந்த மூட்டைகளை அவருக்கு எதிரில் அவிழ்த்தார்கள். உட்புற மிருந்து சாளரத்தின் பூந்துகிலுக்குப் பின்னால் கயல்விழியின் மதிமுகம் உதயமாகித் தனது குளிர்ந்த விழிக் கிரணங்களால் அவற் றைப் பார்வையிட்டது. பார்த்த விழிகள் இமைப்பை மறந்தன. இத்தனை வகையான ஆப ரணங்களையும், அணி மணிகளையும் அவளேகூட ஒருங்குசேரத் தன் விழி களால் அதற்கு முன் கண்டதில்லை.

பொன்னாரங்கள், நவ ரத்தின மாலைகள், மணி யிழைத்த நெற்றிப் பட்டம், செவிகளை அலங்கரிக்கும் மகரக் குழை, பொற் கலன்கள், பொன்னாலான பேட்ட கங்கள், பொற் கழஞ்சுகள் நிறைந்த பட்டுத் துகில் முடிச்சுக்கள், இன்னும் நவநவமான அணிகளும், மணிகளும் கண்களைப் பறித்தன.

ஆதிச்ச தேவருக்கு அவற்றைப் பார்த்தவுடனேயே அச்சம் பிறந்து விட்டது. ''ஐயா! பாண்டியரின் அந் தப்புரத்து அணிகளையோ, அல்லது வேறெந்த நாட்டு மன்னரின் உடைமை களையோ நீங்கள் கவர்ந்து கொண்டு வந்திருக்கிறீர்கள். எங்களிடம் இதை வாணிபம்செய்ய முயற்சி செய்ய வேண் டாம். நாளைக்கே அரண்மனைக் காவ லர்கள் இங்கு வந்து குழுமிவிடுவார்கள். நாங்கள் உழைத்துப் பாடுபட்டுப் பொருள் சேர்ப்பவர்கள். நீங்கள் சென்று வாருங்கள்.''

கயல்விழியின் விழிகள் அங்கிருந்த மகரக் குழைகளில் தங்களைப் பறிகொடுத்துக் கிறங்கின. மகர மீன்கள் துள்ளிக் குதிப்பது போன்ற காதணி. மீன்களின் விழிகளில் இரத்தச் சிவப்பு பதிக்கப் பெற்றிருந்தது.

கலகலவென்று சிரித்தார்கள் வந்தவர்கள், "ஐயா, பாணரே! வழிப்பறி நடத்தி வந்து வாணிபம் செய்ய வருபவர்கள் உங்களிடம் பொற்கழஞ்சுகளுக்குமா விலை பேசுவார்கள்?" என்று கேட்டு மூன்று நான்கு பொன் முடிச்சுக்களை எடுத்து அவர் முன்னே வீசினன் ஒருவன்.

"உம்முடைய குமாரத்தி முற்பிறப்பில் என்ன தவம் செய்திருக்கிறளோ தெரியவில்லை; மாபெரும் சோழ சாம்ராஜ்யத்துச் சக்கரவர்த்திகளின் திருக்குமாரர் இராஜராஜ சோழர் அவளுக்கு இறை செலுத்துகிறர். கலைத் தேவியின் திருவருள் பெற்ற அந்தப் பெண்ணரசிக்குத் தம்முடைய வாழ்த்துக்களைக் கூறி இந்தப் பரிசில்களையும் அளித்து வரும்படி எங்களை அனுப்பியிருக்கிறர்!"

வாயடைத்துப் போனர் ஆடிச்ச தேவர். பூந்துகிலுக்குப் பின்னும் தோன்றிய மதிமுகம் சிந்தனை செய்தது.

"இந்த மகரக் குழை இருக்கிறதே, இதை எங்கள் இளவரசே நேரில் பொற்கொல்லரிடம் கூறிக் கயல்விழிக்காகச் செய்து வரப்பணித்தார். கயல்களிரண்டும் உங்கள் புதல்வியின் செவிகளை அலங்கரித்தவாறே எங்கள் இளவரசரை அன்போடு விழித்து நோக்க வேண்டுமாம்! இந்த மகர மீன்களின் விழிகளையும் உங்களது புதல்வியின் விழிகளையும் ஒப்பிட்டு நோக்கி மகிழ்ந்தார் அவர்!....."

கயல்விழி சட்டென்று தனது செவிகளை இரு கரங்களாலும் மூடிக்கொண்டாள். என்றாலும் அடுத்தவன் பேசிய சொற்கள் அவள் செவிகளுக்கு எட்டின.

"தங்களது குமாரத்தி நடனமாடும்போது எங்களது ஓவியர் ஒருவர் வந்து அவளது உருவத்தை வண்ணக் கலவையில் வரைந்து இளவரசரிடம் கொடுத்திருக்கிறர். இப்போது நேரிலேயே கண்டு களிக்கும் வாய்ப்பையும் இளவரசர் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறர்."

ஆளப்பிறந்தவன்

சித்திரத் தொடர்கதை

கதை : ராஜி



சித்திரம் : வினு

14.6.1964 இதழில் ஆரம்பமாகிறது

கல்கி

மற்றொருவன் குறுக்கிட்டுத் தாங்கள் வந்த காரணத்தை விளக்கினன். "கரூர்ப் போரின் வெற்றியைக் கொண்டாடுவதற்காகக் கங்கை கொண்ட சோழபுரத்தில் விழா நடைபெற விருக்கிறது. அந்த விழாவில் தங்களது புதல்வியின் கூத்து நடைபெற வேண்டும். சக்கரவர்த்திகளும், இளவரசருமே அதைக் கண்டு களிக்கப் போகிறர்கள்."

"ஒரு முக்கியமான செய்தியை நான் உங்களுக்குக் கூற வேண்டியிருக்கிறது!" என்று உறுதியான குரலில் அவர்களுக்கு மட்டிலும் கேட்கும்படியாகக் கூறினர் ஆடிச்ச தேவர். "கூத்துக்கு வரும் விறலியரென்றல் அவர்களைத் தங்களது வேட்கைப் பொருளென்று சில வள்ளல்களும், செல்வந்தர்களும், அரசர்களும் கருதுகிறர்கள். கயல்விழியை உங்கள் இளவரசர் நெருப்பாக மதிக்க வேண்டும். நெருப்பைத் தீண்டும் துணிவு இரிலோகங்களையும் ஒரு குடைக் கீழ் ஆளும் சக்கரவர்த்திகளுக்கும் கூடக் கிடையாதல்லவா? நெருப்பென்னும் நீனிருந்தால் அதனிடம் இன்பம் விழையும் எண்ணம் இருக்காதல்லவா?"

போர்ப்பறை கேட்ட கோழைகள் போல் அந்த வீரர்கள் இருவரும் அஞ்சி நடுங்கி ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். அரச குலத்து ஆண்களைக் கண்டு உலகத்துப் பெண்களே மதிமயங்



'' சார், ஒரு பத்து ரூபாய் இருந்தால் கைமாத்தாக் கொடுங்க !''

''வேண்டாம், சார்! அப்புறம் நம்ப சிநேகம் போயிடும் !''

''அட, போங்கய்யா ! சிநேகமாம் சிநேகம். அப்படி என்ன நம்ப இரண்டு பேரும் கட்டிப் புரண்ட சிநேகம் பாழாய்ப் போகிறது. கொடுங்கய்யா !''

'' சரியாய்ப் போச்சு. நீங்க நடந்து கொள்வதைப் பார்த்தால் பணம் கொடுக்கிறதுக்கு முன்னாடியே நம்ம சிநேகம் போயிடும் போலிருக்கே !''

கியதாகப் புலவர்கள் சிலர் அப்போது உலாக்களையும், கோவைகளையும் எழுதி விருந்தார்கள். சோழ சாம்ராஜ்யத்து இளவரசனின் புன்னகை ஒன்று கிடைத்தால் போதுமென்று ஏங்கிய விறலியரும் கூத்தியரும் எத்தனையோ பேர்! அவ்விதம் இருக்க இந்தப் பாண்டிய நாட்டுப் பாணனுக்கு எத்தனை துணிவிருந்தால் இந்த மொழி கூறியிருப்பான்?

''பாணரே! இந்தச் சொல் கூறிய நீர் இப்போது சோழ நாட்டில் வாழாமல் இருந்ததால் உயிர் தப்பினீர். இளவரசரின் கலையுள்ளம் மகிழ்ச்சியுற்றால் உமது புதல்வி இந்திரனின் சபையில் ஆடும் ஊர்வசியை விட உயர்ந்து விடுவாள். எங்களுக்கு இந்த விவரங்கள் ஏதும் தெரியாது; இதைப் பற்றிப் பேசவும் எங்களுக்கு உரிமை இல்லை. ஆனால் ஒன்றுமட்டும் கட்டாயம் நடந்தேறிவிடும். தங்களது குமாரத்தியின் செருக்கால் இளவரசரின் மனம் சிறிது வருந்தினாலும் முதலில் எங்கள் தலைகளே தரையில் உருளும்.''

அதே சமயம் தூரத்தில் ஏதோ முரசம் அதிரும் சத்தம் கேட்டது. வந்தவர்களுக்கோ ஆதிச்ச தேவருக்கோ முரசுச் செய்தி எதுவும் தெளிவாக விளங்கவில்லை. சாளரத்துக்குப் பின்னால் நின்ற கயல்விழி பூஞ்சிட்டெனப் பறந்து சென்றாள். பிறகு துள்ளிக் குதித்து ஆனந்த நடனம் புரிந்து கொண்டே வெளி முகப்புக்கு ஓடி வந்தாள்.

''ஐயா! ஐயா! முரசுச் செய்தி கேட்டீர்களா? கேட்டீர்களா?'' என்று மீண்டும் அங்கே ஆடினாள். ஆதிச்ச தேவருக்கே தம்முடைய குமாரத்தியின் இந்தச் செய்கை விநோதமாகத் தோன்றியது.

''பாண்டியநாடு தன்னுரிமை பெற்று விட்டது ஐயா! இனி நாம் சோழர்களுக்கு அடிமை இல்லை ஐயா!''

''கயல்விழி!'' என்று அதட்டினார் ஆதிச்ச தேவர். ''இவ்வளவு பரிசுப் பொருள்களையும் உனக்காகச் சோழ சாம்ராஜ்யத்தின் இளவரசர் இராஜராஜர் அனுப்பி வைத்திருக்கிறார். கருவூர்ப் போரின் வெற்றி விழாவுக்காக நீ சோழ சாம்ராஜ்யத்தின் தலைநகரத்தில் கூத்து நடத்த வேண்டுமாம். இளவரசரின் கட்டளையை மறுத்தால் உயிர் வாழ முடியாது என்கிறார்கள் இந்தத் தூதுவர்கள்.''

கயல்விழியின் செவிகளில் அவளுடைய தந்தையாரின் கடுஞ் சொல் ஏறவில்லை. கீழே குனிந்து அந்த மகரக் குழலை மட்டும் கையில் எடுத்தாள். உற்றுப் பார்த்தாள்.

''ஐயா! இதை மட்டும் அவர்கள் விற்பனை செய்வதாக இருந்தால் வேண்டும் பொன் கொடுத்து வாங்குங்கள். நம்முடைய நாட்டின் விடுதலை விழாவுக்கு நானே கூத்தாடப் போகிறேன். பாண்டிய மன்னர் நம்மை அழைக்க வேண்டுமென்பது கூட இல்லை. அனுமதி கிடைத்தால் அரண்மனையில் ஆடுவோம்; இல்லையென்றால் மக்களுக்கு மத்தியில் பொது அரங்கில் ஆடுவோம்!''

நெருப்பைக் கக்கும் விழிகளுடன் எழுந்தார்கள் இருவரும். ஒருவன் அவள் கரத்திலிருந்த மகரக் குழைகளை வெடுக்கெனப் பற்றி இழுத்து, ''விழா நடக்கப் போகிறதா விழா? பார்ப்போம் இந்த நகரத்தில் என்ன விழா நடைபெறுமென்று!'' எனச் சீறினான்.

''உம்முடைய புதல்வியை நெருப்பென்று கூறினீரல்லவா? அந்த நெருப்பூட்டு விழாவைத்தான் நீங்கள் இருவருமே இங்கு கண் குளிரக் காணப் போகிறீர்கள்!''

பரிசுப் பொருள்களைப் பத்திரமாகச் சேகரித்து மூட்டை கட்டிக் கொண்டு பாயும் புரவிகளில் ஏறிக் காற்றெனக் கடுகி விரைந்தார்கள் அவர்கள்.

ஆதிச்ச தேவரின் முகம் பேயறைந்த தோற்றம் அளித்தது. (தொடரும்)

உங்கள் குழந்தைக்கு

க்ரைமிக்ஸ் முறையாகக் கொடுத்து

ஆரோக்கியத்துடனும் மகிழ்ச்சியுடனும் இருக்க உதவுங்கள்.



க்ரைமிக்ஸ், வயிற்றுப்பிடிப்பு, வாயு, மற்றும் வயிற்றுக்கோளாறுகள் முதலியன உங்கள்குழந்தையை அணுகவிடாமல் தடுக்கிறது.

மேலும் மேலும் அதிகமான தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு முறையாக க்ரைமிக்ஸ் கொடுத்து அவர்கள் ஆரோக்யமான துறுதுறுப்பான குழந்தைகளாக வளர உதவுகின்றனர்.

ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்—உங்கள் குழந்தை சிறந்த ஆரோக்யத்துடனிருக்க முறையாக க்ரைமிக்ஸ் கொடுங்கள்.

க்ரைமிக்ஸ்

பூட்ஸ் Boots தயாரித்து, லக்ஷக்கணக்கான தாய்மார்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானது.


NAB 5864

[ஜே. எம். ஸ்காட் எழுதிய ஹீதர் மேரி என்ற நூலின் சுருக்கம். லண்டன், ஹோடர் அண்ட் ஸ்டாட்டன் கம்பெனி பிரசுரம்.]

அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் பெர்முடா என்ற பிரிட்டிஷ் தீவுக்கும் அஸோரேஸ் என்ற போர்ச்சுகீசிய தீவுக்கும் இடையில் சுமார் இரண்டாயிரம் மைல்களுக்கு உள்ள நீலக் கடல் பரப்பிலே ஓரிடத்தில் 1947ம் வருஷம் நவம்பர் மாதம் முதல் தேதியன்று ஒரு விமானம் விழுந்து நொறுங்கியது.

அட்லாண்டிக்கில் அந்தப் பக்கமாகச் சென்ற கப்பல்களெல்லாம் விமானப் பிரயாணிகளில் யாரையேனும் காப்பாற்ற முடியுமா என்று பார்க்குமாறு ரேடியோ மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டன. மூன்றாம் நாள் மார்னிங் ப்ரைட் (Morning Pride) என்ற கப்பல், கடலில் காற்றடைக்கப்பட்ட ரப்பர்த் தோணிகளில் மிதந்து கொண்டிருந்த இருபத்தியாறுபேர்களைக் காப்பாற்றியது. விமானத்தில் இருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை இருபத்தியேழு.


மற்றவர்கள் பிழைத்துவிட்டபோது ஒரே ஒரு பெண் மட்டும் உயிரை விட நேர்ந்தது. ஹூஸெல்லஸ் என்ற கப்பலில் பிரயாணம் செய்து கொண்டிருந்த எங்களுக்கு மிகுந்த மன வருத்தத்தை அளித்தது. அந்த ஒருத்தியின் பெயர் மேரி ப்ரௌன். நாங்கள் ரேடியோவில் விபத்து பற்றிய செய்திகளைக் கேட்டோம். என்றாலும் அவளை நாங்களே காப்பாற்ற நேரிடும் என்று நினைக்கவே இல்லை.



நவம்பர் பதின்மூன்றாம் தேதி காலை மஞ்சள் நிற ரப்பர்த் தோணி ஒன்று கடலில் மிதப்பதைக் கண்டோம். சட்டென அதை நெருங்க நெருங்க எங்களைப் பேராச்சரியம் ஆட்கொண்டது. ஏனெனில் அந்தத் தோணியில் இருந்தது ஒருவரல்ல — இருவர்!

நடுக் கடலில் பன்னிரண்டு நாட்களாய் மிதக்கும் மேரி ப்ரேஸன் சாகாமல் எப்படித் தப்பினாள்? அவளுக்குத் துணையாக வந்து சேர்ந்துகொண்ட அவன் யார்? அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின் மத்தியிலிருந்து திடீரென அவன் எவ்வாறு முளைத்தான்?

எப்பாடு பட்டேனும் இந்தக் கேள்விகளுக்கு விடைகளைக் கண்டு பிடித்து விவரமாக எழுத வேண்டும் என்று நான் நிர்மானித்துக் கொண்டேன்.....



ப்ரிக்ஸ்ஹாம் என்ற துறைமுகப் பட்டினத்தில் அன்று மாலை ரயிலில் வந்து இறங்கியவர்களில் ஒரே நோக்கத்தோடுவந்தவர்கள் நால்வர். அந்நால்வரும் ஒருவரை ஒருவர் அதற்கு முன்னும் நேரில் பார்த்துக் கொண்டது கிடையாது. ஆனால் நால்வருக்கும் ஹீதர் மேரியையும் அவள் கணவன் ரிச்சர்டையும் நன்கு தெரியும். ரிச்சர்ட் எழுதிய கடிதங்கள் வாயிலாக ஒருவரைப் பற்றி ஒருவர் அறிந்திருந்தனர். நால்வருமே இப்போது ரிச்சர்டின் அழைப்பை ஏற்றுத் தான் ப்ரிக்ஸ்ஹாமுக்கு வந்திருந்தனர். ஹீதர் மேரி என்ற அவனுடைய கப்பலில் அவனுடன் சேர்ந்து அந்நால்வரும் பெர்முடாவுக்குப் போகப் போகிறார்கள். அந்தச் சிறிய கப்பல் பல வருஷங்களுக்கு முன்பு அவனுடைய மனைவி அவனுக்குப் பரிசாக அளித்தது. அவளைப் போலவே அந்தக் கப்பலும் மிகவும் அழகாகத்தான் இருந்தது. ரிச்சர்டுக்குக் கப்பல் செலுத்துவதில் ஆர்வமும் அனுபவமும் அதிகம். அந்தக் கப்பலின் வனப்பிலே அவள் சொக்கி நிற்பதைப் பார்த்து அவன் அதை விலைக்கு வாங்கி அதற்குத் தன் பெயரையே சூட்டி அவளுக்குப் பரிசாக அளித்திருந்தான். அந்தப் பரிசும் அது அவளைப் பற்றி உருவாக்கிய நினைவுகளும்தான் ரிச்சர்டுக்கு இன்று மிச்சமிருந்தன. ஹீதர் மேரி இறந்து நீண்ட நாட்களாகி விட்டன.

தன் கணவனிடம் தான் எதிர்பார்த்த நேசபாவமும் உரிமையும் கூடிய சகஜமான வாழ்க்கை கிடைக்காதென்பது கல்யாணமான சிறிது காலத்திலேயே ஹீதர் மேரிக்குப் புரிந்து விட்டது. அவளிடம் அவனுக்கு அன்பு இல்லாமல் போகவில்லை. அந்த அன்பு பேராசையும், பொறுமையும் நிறைந்த ஓர் அன்பாக இருந்தது. அவன் ஆளப் பிறந்தவன் அவள் ஆளப்பட வேண்டியவள் என்ற ரீதியிலேதான் அவன் நடந்து கொண்டான். சுதந்திரமாக அவள் திரிந்து பறந்து வளர்ந்த போது அதன் அருமையை அவன் உணரவேயில்லை. இப்போது இந்த அடக்குமுறைக்கு ஆளாவதைத் தாங்கிக் கொள்வது அவளுக்கு மிகவும் கடினமாயிருந்தது.

மூன்று நான்கு வருடங்கள் ஓடிவிட்டன. உலக யுத்தம் மூண்டது. காந்தத்தால் கவர்ந்திழுக்கப்பட்ட இரும்புத் துகள்களைப் போல்

சிப்பாய்க் கோலம் பூண்ட இந்து கோடிப் பேர்களில் ஒருவனாக ரிச்சர்டும் சென்று விட்டான்.

ரிச்சர்ட் கைதாக்கப்பட்டான் என்ற செய்தி கிடைத்தபோது தான் அடைந்த மகிழ்ச்சிக்குக் காரணம் அவன் சாகவில்லை என்பது உறுதியாயிற்றே, அதுதான் என்று முதலில் மேரி நினைத்தாள். பிறகு தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்ளப் பார்ப்பதில் அர்த்தமில்லை என்று அவளுக்குத் தோன்றியது.

அயல்நாட்டு விவகார இலாகாவின் வாஷிங்டன் காரியாலயத்தில் ஓரிடம் காலியாக இருந்தது. அந்த வேலையை ஏற்றுக் கொண்டு அமெரிக்கா செல்லத் தீர்மானித்தாள் மேரி. ஒரு மாறுதலுக்காகவேனும் சிறிது காலம் வேறு தேசத்துக்குப் போய் வந்தால் கொந்தளிக்கும் தன் உள்ளம் சற்று அமைதியுறலாம் எனக் கருதினாள். ஆனால் அவள் எண்ணம் இதிலும் ஈடேறவில்லை. மனக் குழப்பம் அதிகரித்ததுடன் அது காரணமாய் அவள் உடல் நலனும் வெகுவாகப் பாதிக்கப்பட்டது.

யுத்தம் முடிகிற கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. வாஷிங்டனிலிருந்து கடல் மார்க்கமாய்த் தாய்நாடு திரும்புகையில் அவள் பாயிடைக் கப்பல் தளத்தில் சந்தித்தாள். அவனுடைய இனிய சுபாவம் அவளைப் பேச வைத்தது. மனத்துக்குள்ளேயே பூட்டி வைத்துப் புழுங்கிக் கொண்டிருந்த தன் கதையையெல்லாம் அவனிடம் தான் ஒளிவு மறைவு இன்றிச் சொல்லிக் கொண்டிருந்ததை எண்ணி அவளுக்கே ஆச்சரியமாயிருந்தது. மேற்கொண்டு தான் என்ன செய்வது என்று பாயிட்டிடம் யோசனை கேட்பதா வேண்டாமா என்று அவள் நினைத்துப் பார்க்கையில் அந்தத் தந்தி வந்தது. தந்தியின் வாசகத்தைப் படித்ததும் அவள் முகம் வெளிறிப் போனதைக் கவனித்தான் பாயிட்.

மறுநாள் காலை கப்பலில் மேரியைக் காணவில்லை. இரவோடு இரவாக யாரும் பாராத தருணத்தில் அவள் கடலில் விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டாள் என்பதை ஊகிப்பது கடினமாயில்லை.

* * *

ராணுவத்தில் தான் சேர்ந்திருந்தபோது மேரியிடம் நட்புரிமையுடன் பழகியவர்கள் யார் யார் என்பதைத் தீவிரமாக விசாரித்துத் தெரிந்து கொண்டு அந்நால்வருடனும் இப்போது ஹீதர் மேரியில் புறப்பட்டிருந்தான் ரிச்சர்டு. நூறு நாட்கள் உல்லாசக் கடல் பிரயாணம் செய்து பெர்முடாவுக்குப் போகலாம் என்று சொல்லித்தான் அவர்களை அழைத்திருந்தான். ஆனால் அவனுடைய அந்தரங்க நோக்கம் வேறு.

நூறு நாள் பயணத்தில் ஹீதர் மேரி பல அபாயங்களுக்கு உள்ளானது. பலமான புயல் வீசி மலை போன்ற அலைகள் பொங்கி எழுந்து அந்தச் சிறிய கலத்தை ஆவேசத்தோடு தாக்கியபோதெல்லாம் ரிச்சர்ட் மிகுந்த சாமர்த்தியத்தோடு நடந்துகொண்டு கப்பலுக்கோ அல்லது உயிருக்கோ சேதம் ஏதும் ஏற்படாமல் காப்பாற்றினான்.

அவர்களையோ தன்னையோ அல்லது அந்தக் கப்பலையோ அதற்குள் அவசரப்பட்டுக் கடலுக்குப் பலி கொடுத்துவிட ரிச்சர்ட் தயாராக இல்லை. அதற்கான வேளை இன்னும் வரவில்லை. ஆகவே அவர்களில் யாரும் இப்போது இறந்துவிடக் கூடாது!

மேரி அமெரிக்காவிலிருந்து திரும்புகையில் எந்த இடத்தில் கடலில் விழுந்து உயிரை விட்டாளோ அதே இடம்தான் அவர்களுக்கும் தனக்கும் அந்தக் கப்பலுக்கும் சமாதியாக அமைய வேண்டும்! குறிப்பிட்ட அந்த இடத்தை அவன் மேரி பயணம் செய்த கப்பலின் காப்டனைச் சந்தித்துப் பேசிக் கேட்டறிந்து கொண்டிருந்தான்.

அந்த இடத்தை அடைவதற்கு முன்னும் சக பிரயாணிகளை அவன் சுற்றி வளைத்து என்னென்னவோ கேள்விகள் கேட்டுக் குடைந்தான். பட்டவர்த்தனமாக அவன் ஏதும் வினவவில்லை என்றாலும் தன் மனைவிக்கும் அவர்களுக்கும் இடையில் இருந்திருக்கக் கூடிய தொடர்புகள் பற்றி விவரமாக அறிய விரும்பியவன் போல் காணப்பட்டான். சந்தேகப் பேய் ஆட்கொண்டிருந்த அவன் உள்ளத்துக்குக் களங்கமற்ற அவர்களது பதில்கள் திருப்தி அளிக்கவில்லை.

ஆகவே கடைசியில் ஒரு நாள் விஷயத்தை விண்டுரைத்து விட்டான். "மேரியை அடைவதற்காக ராணுவக் கைதிகள் முகாமிலிருந்து தப்பிக்க நான்கு வருஷங்கள் நான் முயன்றேன். முடிவில் நான் சற்றும் எதிர்பாராத வகையில் வெற்றியும் கண்டேன். ஆனால் அத்தனை சிரமப்பட்டு வந்து அவளுடன் இணை சேருவதற்குள் மேரி மறைந்து விட்டாள். 'ஏன், எப்படி மறைந்தாள்?' என்பதை எனக்குக் கூறக் கூடிய தோழர்கள் கிடைத்திருக்கிறீர்கள்!

"ஜெர்மனியிலிருந்து திரும்பியதும் நான் வந்துவிட்டதை அறிவிக்கும் விதத்தில் அமெரிக்காவிலிருந்த மேரிக்குத் தந்தி அடித்தேன். அதற்கு உடனடியாக எனக்குப் பதில் கிடைக்கவில்லை. ஆனால் அயல்நாட்டு விவகார இலாகாவில் அவள் கப்பலேறித் திரும்பி வந்து கொண்டிருப்பதாய்ச் சொன்னார்கள். அந்தக் கப்பல் எந்தத் துறைமுகத்தை அடையப்போகிறதென்று கேட்டறிந்து கொண்டு ஆவலுடன் அவளை எதிர்பார்த்துக் கரையில் காத்திருந்தேன். கப்பலிலிருந்து அவள் இறங்கவேயில்லை!...."

'நீ திரும்பி விட்டாய் என்பதை அறிந்ததனால்தானடா அவள் தற்கொலைக்குத் துணிந்தாள்' என்று கூற நினைத்தான் பாயிட். ஆனால் அதற்கு மனம் வரவில்லை.

ஒரு நாள் காலை பதினொரு மணி சுமாருக்கு டாபி கப்பலின் கீழ்த் தளத்துக்கு இறங்கிச் சென்றான். ரிச்சர்ட் அங்கே நாலு காலன் டின் ஒன்றைத் திறந்து நாலா பக்கமும் பெட்ரோலை ஊற்றிக் கொண்டிருந்தான். வைத்த விழி வாங்காமல் பிரமித்துப்போய் டாபி நிற்கையில் ரிச்சர்ட் அலமாரியிலிருந்து ஒரு தீப்பெட்டியை எடுத்து நெருப்புக் குச்சியைக் கிழித்தான். ஆனால் முதல் நாள் ஏற்பட்ட புயல் மழை காரணமாக எல்லாமே நனைந்தது போல் தீப்பெட்டியும் நனைந்து

பற்றிக்கொள்ள மறுத்தது. ரிச்சர்ட், டாபி இருந்த பக்கமாய்த் திரும்பினான். ''உன்னுடைய சிகரெட் லைட்டரைக் கொஞ்சம் கொடு'' என்றான்.

அப்போதுதான் டாபி விழித்துக்கொண்டான். ரிச்சர்ட் மீது பாய்ந்தான். இருவரும் உருண்டு புரண்டார்கள். சந்தடி கேட்டு மற்றவர்களும் அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். டாபி ஒரு மூலையில் விழுந்து கிடப்பதைக் கண்டார்கள்.

ரிச்சர்ட் கொஞ்சம்கூடப் பயப்படவில்லை. டாபியின் சிகரெட் லைட்டர் இப்போது அவன் கரத்தில் இருந்தது. ''உண்மையைக் கூறுமாறு உங்களிடம் கேட்டுக் கொண்டிருக்கிறேன். நீங்கள் சொல்ல மறுக்கிறீர்கள். மரணப் படுக்கையில் இருப்பவன் பாதிரியைக் கூப்பிட்டனுப்பித் தன் பாவங்களையெல்லாம் ஒளிவு மறைவின்றி வெளியிடுவதில்லையா? இப்போது நாம் சமாதியடைய வேண்டிய இடத்துக்கு வந்து சேர்ந்து விட்டோம். மேரி மரணமடைந்த இடத்துக்கு நேர் மேலே நாம் மிதக்கிறோம்'' என்றான்.

''அப்படியா? அதனால்தான் அவள் குரலும் இங்கு ஒலிக்கிறதோ?'' என்று கேட்டான் ஜாக்.

அனைவரும் திகைப்புடன் அவனை நோக்கினார்கள்.

''உற்றுக் கேளுங்கள்'' என்றான் ஜாக். ''மேரி நம்முடன் ஏதோ பேச விரும்புகிறாள்!''

ஆம்! உண்மையிலேயே அப்போது ஒரு குரலொலி கேட்டது! அனைவரும் 'திபு திபு' வென்று மேல்தளத்துக்கு ஓடிச் சென்று பார்த்தார்கள். நீண்ட இறக்கைகளுடன் கூடிய அந்தக் கடல் பட்சி அவர்களுடனேயே பிரயாணம் செய்து வந்தது. அது சிறிது நேரம் கடல் மீதாக வட்டமிட்டு இரை தேடும். பிறகு கரையோரத்திலிருந்து தெரியாத்தனமாக வெகு தூரம் வந்துவிட்டதால் அது திரும்பிப் போகத் திராணியின்றிக் கப்பலிலேயே வந்து ஒட்டிக் கொள்ளும். மாலுமிகளுக்கு இது சகஜமான காட்சிதான். ஆனால் இன்று அந்தப் பறவை குரலெழுப்பி அந்தக் கப்பலையும் அதிலிருந்தோரையும் கடல் ஆழத்துக்குள் அமிழ்ந்து போகாமல் காப்பாற்றியது.

மேரியைப் பற்றியே நினைத்தபடி அவள் உயிர் துறந்த இடத்துக்கு மேலாக இருப்பதாக எண்ணிக் கொண்டு வாழ்வா சாவா என்ற ஓர் இக்கட்டான நிலையில் இருந்த அவர்கள் பறவையின் குரலை மேரியின் குரலாகவே பாவித்து மேல் தளத்துக்கு விரைந்து வந்ததில் வியப்பில்லை. ரிச்சர்டும் ஆவலை அடக்க மாட்டாமல் அவர்களைப் பின்தொடர்ந்தான்.

குரலெழுப்பியது என்னவோ பறவைதான். ஆனால் உண்மையாகவே ஒரு பெண்ணும் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தாள். மஞ்சள் நிற ரப்பர்த்தோணி ஒன்றுடன் அவள் தன் உடலைப் பெல்டினால் பிணைத்துக்கொண்டிருந்தாள். தோணியுடன் அவளைக் கப்பலின் மேல் தளத்துக்குத் தூக்கினார்கள்.

''நீ எங்கிருந்து வருகிறாய்? நீ யார்?''

''என் பெயர் மேரி! காலம் காலமாகக் கடலிலேயே இருந்தது போல் எனக்குத் தோன்றுகிறது!''

ரிச்சர்ட் அவளை உற்றுப் பார்த்தான். அவன் உள்ளத்தில் என்னவெல்லாம் உணர்ச்சிகள் பொங்கிப் புரண்டு கொடுத்தனவோ யாரால் வர்ணிக்க முடியும்?

இரண்டு தினங்கள் சென்றன. கப்பலின் மேல் தளத்தில் டாபிக்குப் பக்கத்தில் மேரி ப்ரௌன் அமர்ந்து மதுக் கோப்பையைக் கையிலேந்தியபடி கல்மிஷமில்லாமல் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள். ரிச்சர்டின் பொறாமைக் கண்கள் வெறி நோக்குடன் அவர்களைப் பார்த்தன. ஒரு முறை அவன் மேரியை இழந்தவன். தெய்வாதீனமாக அவள் மீண்டும் அவனுக்குக் கிடைத்திருக்கிறாள். அப்படியிருக்க இப்போது அவளைப் பேராசையுடன் அவன் கண்காணித்துப் பாதுகாக்காவிட்டால் யாருக்கு என்ன நேரிடுமோ? அவளை வேறொருவனிடம் பறி கொடுக்க நேரலாமோ?

ரிச்சர்டின் நோயுற்ற நெஞ்சத்தில் என்னவெல்லாம் சிந்தனைகள் எழுந்தனவோ; நமக்குத் தெரியாது. டாபியின் மண்டையில் பலமான ஓர் அடி விழுந்தது. அவன் மயங்கி விழுந்தான். மற்ற மூவரும் திடுமெனக் கப்பலின் இஞ்சின் அறை பற்றி எரிந்து கொண்டிருப்பதைக் கண்டார்கள். தீயை அணைக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டார்கள். தீ நாக்குகள் சற்று அடங்கியதும், மேரியுடன் முன்பு மிதந்து வந்து சேர்ந்த மஞ்சள் ரப்பர்த் தோணியில் இப்போது அவளும் ரிச்சர்டும் சென்று கொண்டிருப்பதைப் பார்த்தார்கள்.

''கப்பல் தீப்பிடித்துக் கொண்டது. நாம் தப்பிப் பிழைக்க முயலுவோம்'' என்று கூறி அவளை அவன் அந்தத் தோணியில் இறக்கி அழைத்துப் போயிருக்க வேண்டும்....

தீயால் அழிந்த கப்பலின் எஞ்சின் இப்போது இயங்கவில்லை. நடுக் கடலில் அந்தச் சிறிய கலம் தத்தளித்தது. கப்பலோட்டத் தெரியாத நாம் என்ன செய்யப் போகிறோமோ என்று கலங்கினார்கள் அம்மூவரும். அவர்களுக்கு ஆறுதல் கூறுவது போல் அருகே கடல் பறவை குரலெழுப்பியது. ''உங்களுக்குப் புரியவில்லையா? அது கடல் பறவையே அல்ல! ஹீதர் மேரிதான்!'' என்றான் டாபி.

இந்தச் சமயத்தில் மாபெரும் மலை ஒன்று அந்தச் சிறிய கலத்தின் மீது மோதுவது போல் பிரும்மாண்டமான ஒரு கப்பல் அதனைத் தாக்கித் தவிடு பொடியாக்கியது. மூடு பனி காரணமாக ஹீதர் மேரியை அந்தக் கப்பலின் காப்டன் கவனிக்கத் தவறிவிட்டார். ஹீதர் மேரியில் இருந்தவர்களோ கப்பல் செலுத்தும் கலையைக் கற்றறிந்தவர்களல்ல. நால்வரும் அலை கடலில் நீந்தியபடி உயிருக்காகப் போராடினார்கள். கனத்த மூடு பனித் திரை படிந்திருந்த போதிலும் அந்நால்வரையும் கண்டு பிடித்துக் கப்பலில் ஏற்றிக்கொள்வது காப்டனுக்குக் கடினமாயில்லை. ஏனெனில் காப்பாற்ற முற்பட்டவர்களுக்குத் திசை காட்டுவது போல் காப்பாற்றுதலுக்கு உட்பட்டவர்களைச் சுற்றிச் சுற்றியே ஒரு கடல் பறவை பறந்து கொண்டிருந்தது....

பதினைந்தாவது அத்தியாயம்

நீரோட்டம்

தியாகுவைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றால் அவனுக்கு எந்த நிலையில் வரவேற்புக் கிடைக்குமோ என்ற பயம் கீதாவுக்கு ஒரு பக்கம் இருந்தாலும் தென்னாட்டைச் சேர்ந்த ஒருவனுடைய வேலையை அபகரித்துவிட்டோமே என்ற வருத்தம் அவன் மீது கருணை கொள்ளச் செய்தது. வீடு இருந்த நிலையில் தியாகுவை உள்ளே சேர்க்க அத்தை என்ன கூறுவாளோ! இந்த வேலையைத் தியாகுவுக்கே சிபாரிசு செய்துவிடலாம் என்றாலும், வேலையில் அமர்வதற்கான அவசியம் அவளுக்கும் நிறைய இருந்தது.

பார்க்கப் போனால் கீதா வேலைக்குச் செல்வதை அத்தை விரும்பவேயில்லை. கீதாதான் அத்தைக்கு ஊன்றுகோலாக இருக்க ஒரே பிடிவாதத்துடன் வேலையில் அமர்ந்துவிட்டாள். அத்தையை நினைக்கும் போதெல்லாம் கீதாவுக்கு நெஞ்சை அடைக்கும். அத்தையை நினைத்துத் தன் துயரைக் குறைவாக நினைப்பாள் கீதா.

கல்கத்தாவில் அத்தையும் அத்தை புருஷனும் இருக்கிறார்கள் என்று அம்மா சொல்லிக் கேட்டிருக்கிறாள் கீதா. கருவிலிருந்த பொழுதே அவள் தந்தை உலகத்திலிருந்து விடைபெற்றுவிட்டார். ஆனால் அத்தை மட்டும் உறவைத் துண்டித்துவிடவில்லை. அடிக்கடி கடிதம் எழுதி வந்தாள். கீதாவின் தாயார் உறவுமுறையை ஒட்ட வைத்துக் கொண்டு ஒருமுறை பெண்ணோடு கல்கத்தா புறப்பட்டுவிட்டாள். ஒருகால் அத்தையிடம் பெண்ணை ஒப்படைக்க அவள் அப்படிப் புறப்படும்படி விதி குறுக்கிட்டதோ, என்னவோ? இல்லாவிடில் வந்த சில நாட்களிலெல்லாம் அந்நகரில் பரவியிருந்த விஷ ஜுரத்தினால் அவள் தாய் இறந்துவிட, அதைத் தொடர்ந்து அத்தை புருஷனும் இறக்க நேரிடுமோ? அத்தைக்குக் கீதா, கீதாவுக்கு அத்தை என்று ஆறுதல் கூறிக் கொண்டனர்.

சொல்லப் போனால் அத்தை ஒண்டிக்கட்டை இல்லை. அவளைக் காப்பாற்ற மகன் ஒருவன் உண்டு. அத்தையின் வீட்டில் காலடி வைத்த தினமே அத்தை மகனைப் பார்த்துத் திகைத்து நின்றுவிட்டாள் கீதா. அத்தையின் சாயலை அப்படியே உரித்து வைத்திருந்தான் அவன். உடற்கட்டும், அங்கமும், ஆண்மைக்கும் பௌருஷத்துக்கும் எடுத்துக்காட்டாக இருந்தன. பருவத்தின் எழிலையெல்லாம் உருட்டித் திரட்டி வைத்தாற்போல் நிற்கும் கீதாவிடமிருந்து தன் கண்களை நகர்த்த முடியாமல் அவன் நிற்கும்போது கீதாவும் திணறுவாள்....

"கீதா!"

எண்ணச் சுழலில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த கீதா, குரல் கேட்டதும் சட்டென நிமிர்ந்தாள். எதிரே...

"மூர்த்தி!"

உணர்ச்சியின் பிடிப்பில் அன்பின் சுழலில் சிக்கி, இரு கைகளையும் விரித்தபடி, படியருகே நின்றிருந்த மூர்த்தியிடம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு விட்டாள். அவன் மார்போடு முகத்தைப் புதைத்துக் கண்ணீர் வெள்ளத்திடையே அவனை நனைத்து விட்டாள். மூர்த்தியின் கண்களிலிருந்து நீர் பெருக்கம். இருவர் மனமும் ஒன்று கூடியபோது உடல் தூக்கிப் போட உள்ளம் விம்மியது. இத்தகைய உணர்ச்சி வசப்பட்ட சந்திப்பை உணர்ந்தே தியாகு அவர்கள் இருவரும் ஹோட்டலிலோ, பொதுஜன விடுதியிலோ சந்திக்க நேராமல், அத்தை வசித்த வீட்டை அப்படியே வைத்துக் கொள்ளக் கூறியிருந்தான்.

கீதா மூர்த்தியை ஏறிட்டு நோக்கினாள். முதன் முதலாகச் சந்தித்தாளே, அந்த மூர்த்தியா இது...? கண்கள் உள்ளடங்கத் தாடியும், மீசையுமாகப் பஞ்சப் பட்டினி போல... ஐயோ! பார்க்கச் சகிக்கவில்லையே! ஜெயிலில் வாசம் செய்ததற்கு அடையாளமா? ....ஆம், அவன் சிறைத் தண்டனை அனுபவித்துவிட்டுச் சிறைச்சாலையிலிருந்து நேராக வருகிறான்... ஆனால் அதற்காக அவள் அன்பு சிறிதும் குறைந்துவிடப் போவதில்லை. இனியும் அவனைத்தான் நேசிப்பாள் அவள்.

தியாகு ஒரு முறை கூறினான்: "கீதா! உலகில் அன்பு என்ற சொல்

னுக்கு எல்லா இடத்திலும் எல்லாக் காலத்துக்கும் ஒரே பொருளைக் கொண்டு விட முடியாது. மூர்த்தியைப் போன்ற ஒருவனிடம் நீ அன்பு செலுத்த முற்பட்டிருக்கிறாயே! அதுதான் உண்மையான பொருளை உடையது. இதிலிருந்து விலகிவிடாமல் இருக்கத் தெய்வம் உனக்கு அருள் புரியட்டும். உனக்கு என்றேனும் ஒரு நாள் நல்வழி பிறக்கத்தான் செய்யும்!''

எத்தனையோ சோதனைகளில், பரீட்சைகளில் அவள் தேறிவிட்டாள். அவள் மனத்தில் மூர்த்தியைத் தவிர வேறு ஒருவருக்கும் இடமில்லை. அவனது இந்த அவல உருவத்தைக் கண்டு மனம் துடித்தாள்; விம்மினாள்.

''ஐயோ மூர்த்தி, உங்கள் கோலத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை....''

''சிறைத் தண்டனை நான் செய்து வந்த தீச்செயல்களுக்கு ஒரு பிராயச் சித்தம் இதோ. அதை நினைத்து ஏன்வருந்துகிறாய்?''

''அப்படிக் கூறாதீர்கள். நீங்கள் சிறைச்சாலையிலிருந்த ஒவ்வொரு நிமிடத்தையும் நான் முள்ளின் மேல் இருப்பதாக நினைத்துத் தவித்தேன். அத்தை இறந்த தினமே உங்கள் போக்கில் மாறுதல் கண்டு இனி நம் வாழ்வு நற்பாதையில் திரும்பும் என நினைத்தேன். அந்த ஆனந்தத்தை நெடுநாட்கள் அனுபவிக்கவும் இயலாமல் கள்ளக் கடத்தல் ஒன்றில் உங்களைச் சம்பந்தப்படுத்திப் போலீஸார் உங்களைக் கைது செய்து போய்விட்டனர்.''

'' அப்பொழுதே நான் அத்தண்டனையை வரவேற்றேன் இதோ. நீதான் அவசரப்பட்டுத் தியாகுவுக்குத் தபால் எழுதி வரவழைத்துவிட்டாய். என் அம்மா இறந்த போது நீ அவனுக்குத் தந்தி அடித்தது ஒரு பிசகு என்றால் அதற்கு மேல் கடிதம் எழுதியது பெரும் பிசகு. புது மணப் பிள்ளையான தியாகு உன் கடிதத்துக்கு



மதிப்பு வைத்து வந்து விட்டான்.''

''என் மனம் தவித்த நிலையில் பெருத்த உதவியாகத் தியாகுவைத்

தான் நினைக்க முடிந்தது. அவர் உடனே புறப்பட்டு வந்தது எனக்கு ஆறுதலாக இருந்தது. அவர் ஆறுதல் கூற நம் வீட்டுக்கு வந்தபோது திடீரெனச் 'சர்ச் வாரண்'டை எடுத்துக் கொண்டு நம் வீட்டைச் சோதனையிடப் போலீஸார் வந்து விட்டனர். நான் 'ஐயோ!' என்று கத்தியபோது, தியாகுதான் நம் வீட்டு நிலையை என் நடுக்கக் கூச்சலினால் வெளியே பரவி விடாதபடி என்னை அடக்கினார். உங்களை ஜாமீனில் விடுவிக்க வெற்றி பெற்றவர் வழக்கில் மட்டும் வெற்றி காண இயலாமல் தவித்து விட்டார்.''

''இந்தத் தண்டனைக்காக நான் தனிப்பட்ட முறையில் கலங்கவில்லை கீதா. பெற்றோர்களுக்கும் உனக்கும் பல துன்பங்களைக் கொடுத்துவிட்ட நான் இதை ஆண்டவன் அளித்த தண்டனையாகவே ஏற்றேன். உங்கள் இருவரிடமும் எதிர் வழக்காடவே வேண்டாம் என்று மன்றாடினேன். நீங்கள் வக்கீலைப் பார்க்க வேண்டாமென்று உனக்குத் தெரியாமல் எழுதி அனுப்பினேன். அவனும் உன் பிடிவாதத்தோடு சேர்ந்து விட்டான். வக்கீலுக்கு வீணாகப் பணத்தைச் செலவழித்தீர்கள்...''

''எதிர் வழக்காடியதால்தான் தண்டனைக் காலம் குறைந்தது. தியாகு செய்த உதவிக்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இரவு பகல் பாராமல் இந்த வழக்குக்காகப் பாடுபட்டார். அவருடன் எனக்கும் சென்னைக்கே மாற்றல் கிடைத்துவிட்டபோது அங்கும் எனக்கு உதவியவர் தியாகுதான். விடுதலை தினமான இன்றே உங்களைச் சந்திக்கத் துடித்தேன். விஸா தாமதமாகக் கிடைத்தது. தியாகுதான் விமானத்தில் செல்ல ஏற்பாடு செய்து வேண்டிய சாமான்களை வாங்கிக் கொடுத்து விமான நிலையம் வரையில் வந்து வழியனுப்பினார்...''

''கீதா! இந்த உலகில் எவ்வளவு வேடிக்கை பார்த்தாயா? நான் தீயவன் என்று தெரிந்த பிறகும் நீ உன் காதலைப் பக்குவமாகப் பலப்படுத்தி விட்டாய். மூன்றாம் மனிதனான தியாகுவோ உன் சகோதரன் நிலையில் இருந்து கொண்டு எவ்வளவோ உதவிகளைச் செய்து விட்டான். இவ்வளவு பேர்கள் என்னிடம் பற்றுதல் வைத்து என்னைப் பாக்கியசாலியாக்கி விட்டார்கள். நல்லவர்களான நீங்களோ என் காரணமாகத் துன்பத்தைத்தான் அனுபவிக்க முடிகிறது....''

''போதும். கடந்ததைப் பற்றி மறந்து விடுவதே வாழ்க்கையின் முன்னேற்றப் பாதைக்கு அடிகோலும். நீங்கள் குணம் மாறி யிருப்பதற்கு அத்தை இருந்து மகிழவில்லையே என்பதுதான் என் குறை...'' என்று கீதா கூறினாள்.

தாயின் நினைவு வந்ததுமே மூர்த்தியின் உள்ளம் குமுறியது. சுருக்கம் விழுந்த கண்கள், ஒட்டிய அந்த முகம் பாசநீரை நிரப்பிக் கொண்டு பிம்பமாக அவன் முன்னே நின்றபோது 'அம்மா!' என அலறிவிட்டான் அவன். கீதா அவனைத் தேற்ற முயன்றாள். அவளுக்கும் அந்த நேரத்தில் அத்தையின் நினைவு வாட்டி எடுத்தது.

அத்தையைப் போல் இந்த உலகில் ஒருவர் இருக்க முடியுமா என்பது சந்தேகம். அவனுக்கு இப்போது நினைத்தாலும் ஆச்சரியமாக இருக்கிறது. வீட்டில் தங்கிய கீதாவிடமே அவன் தன் மகனின் போக்கை எவ்வளவு சாமர்த்தியமாக மறைப்பாள்? கீதா அவர்கள் வீட்டுக்கு வந்ததிலிருந்துதான் மூர்த்தி சிறிது நேரமாவது வீட்டில் இருந்தான் என்பது மாமாவின் மூலமாகத் தெரிந்தது. அவர் உயிருடன் இருந்தவரை கூறுவார்: ''கீதா! இனி நீ இங்கேயே இருந்து விடும்மா. மூர்த்தி ஒழுங்காக வீட்டோடு இருப்பான்'' என்பார்.

கீதா மூர்த்தியை நோக்குவாள். ''அப்பா ஏதாவது சொல்லிக்கொண்டிருப்பார். நீ அதையெல்லாம் நினைவில் வைக்காதே கீதா!'' என்று மூர்த்தி கூறிவிடுவான்.

மாமா இறந்ததும் மூர்த்தி ஒரு வாரம் வீட்டோடு இருந்தான். பிறகு பழைய வழக்கப்படி எங்கோ வெளியே சென்றான். இஷ்டப்பட்ட நேரத்துக்குச் சென்றது போல் இஷ்டப்பட்ட நேரத்துக்குத் திரும்பினான்.

கீதா அத்தையிடம் கேட்பாள். ''அத்தே! மூர்த்தி வெளியே தினமும் எங்கே போகிறான்?''

''ஏதோ படிப்புப் படிக்கிறானே! அதை முடிக்க வேண்டாமாம்மா.... ஏதோ, போறான். வரான்... அதைப் பற்றிக் கவலைப்பட்டுக்காதேம்மா....'' என்று அத்தை மழுப்பி விடுவாள்.

கீதாவுக்கு ஏதோ புரிந்தும் புரியாததுமாகத்தான் இருந்தது. படிப்பு என்கிறான் அத்தை. ஆனால் புத்தகம் வைத்துப் படிக்காத படிப்பு என்னவாக இருக்கும்? இஷ்டப்பட்ட நேரத்தில் தன் விச்சையாகத் திரும்பும் மாணாக்கன் எந்தப் பள்ளியில் இருப்பான்....?

அருகிலிருந்த தையல் வகுப்பில் சேர்ந்திருந்தாள் கீதா. ஒரொரு முறை கீதா தன் வகுப்பிலிருந்து திரும்பும்

டாடாவின் ஷாம்பு





அபூர்வமான பளபளப்பைத் தருகிறது.



நவநாகரீக மாதர்கள் டாடாவின் ஷாம்புவையே உபயோகிக்கின்றனர். காரணம் கூந்தலைச் சுத்தம் செய்வதற்கெனவே விசேஷமாய்த் தயாரிக்கப்படுகிறது. அது. கூந்தலைத் துப்புரவாகவும், சுலபமாயும் சுத்தம் செய்கிறது டாடாவின் ஷாம்பு. கொழிக்கும் அதன் நுரை கூந்தலிலுள்ள தூசியை அகற்றி, கூந்தலைப் பட்டுப்போன்ற மென்மையுடனும். பளபளப்புடனும் மிளிரச்செய்கிறது. நறுமணத்திற்கோ கேட்கவேண்டாம். கூந்தல் சுத்தமாகவும், நறுமணத்துடனும் இருக்க நீங்களும் டாடாவின் ஷாம்புவை உபயோகியுங்கள்.

எழில்மிக்க, மிருதுவான, பரிமளக் கூந்தலுக்கு — டாடாவின் ஷாம்பு!

BI-TS-69 TAM





இன்பம் பொங்கும் இல்லம், கண் நிறைந்த கணவன்,
மாண்புள்ள மனையாள், வீட்டு வேலைகளை விருப்பமுடன்
செய்வாள்...

துணி வெளுக்க அவள் உபயோகிப்பது துல்லியமான டெட்...

கண்ணைப் பறிக்கும் வெண்மை, ஆரோக்கியம்
தரும் தூய்மை, டெட் சலவையின் மேன்மை!

நாகரீக நங்கையர் தேர்ந்தெடுக்கும்
நவீன சலவை சாதனம் டெட்!

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், பம்பாய்-

Shilpi som I c

போது தாயும் மகனும் ஏதோ விவாதத்தில் ஈடுபட்டிருப்பார்கள். சீதாவைக் கண்டதும் அத்தை அடங்கி விடுவாள்.

''போடா மூர்த்தி. இந்த அல்ப விஷயத்தைப் பற்றிப் பேசுவானேன்? சாப்பிடப் போ'' என்று முடிவு கூறி விடுவாள் அத்தை.

ஏதோ பணத்தைப் பற்றிய விவாதம் போலிருக்கிறது. அத்தை அதை ஏன் மறைத்து அல்ப விஷயமாகக் காட்டுகிறாள்! ''அத்தை பணம், கிணம் என்று ஏதேதோ பேசினீர்கள். அதைச் சுலபம் எனத் தள்ளிவிடப் பார்க்கிறீர்களே!'' என்று சீதா கேட்டாள்.

''ஒன்றுமில்லை சீதா. படிப்புக்குப் பணம் பணம் என்று கேட்கிறான். நான் எங்கிருந்து கொடுக்க? படிப்பு போதும், வேலை தேடிக் கொள் என்கிறேன். அவ்வளவுதான். வயது வந்த பிள்ளையாக நிற்கிறானே! நான் சொன்னாலும் புரிய மாட்டேங்குதே!''

''அத்தை, நான் ஒன்று சொல்லுகிறேன். அம்மாவின் நிலம் தஞ்சாவூரில் கிடக்கிறதே. அதை வைத்துக் கொண்டு இந்தக் கல்கத்தாவைக் காலி செய்துவிட்டு அங்கேயே இருந்து விடலாமே!'' சீதா யோசனை கூறினாள்.

''நானும் அதைத்தான் மூர்த்தியிடம் சொல்கிறேன், சீதா. இங்கிருந்து குடும்பம் நடத்தக் கட்டுப்படியாகவில்லை. தெற்கே போய்விடலாம் என்றால் இவன் கேட்டால்தானே? இவன் வரமாட்டானாம். இந்த ஒரு பிள்ளையை விட்டு விட்டு எனக்கு அங்கே என்ன வேலை?'' அத்தை நொந்த மனத்துடன் கூறினாள்.

''அப்படியானால் அந்த நிலத்தை விற்றுப் பணத்தை எடுத்து வந்து விடலாமே? மூர்த்தியின் படிப்புக்கு உதவுமே!''

துள்ளிக் குதித்து எழுந்தான் மூர்த்தி. ''ரொம்ப நல்ல ஐடியா சீதா.... அம்மா! இன்றே நான் புறப்பட்டுப் போய் வேண்டிய ஏற்பாடெல்லாம் செய்து நிலத்தை விற்றுப் பணத்தை வாங்கி வந்து விடுகிறேன்...''

அத்தை கைநீட்டித் தடுத்தாள். ''முடியாது. அவள் பணத்தை நீ தொடக் கூடாது... சீதா! அந்த நிலத்தை நீ விற்காதே. பணம் பாழாகி விடும்....'' அத்தை கூவினாள்.

சீதா திகைப்புடன் நின்றாள்.. ''பாழாவதற்கு வழி என்ன அத்தை? மூர்த்தியின் படிப்பு முடிந்து விட்டால் பிறகு வேலை ஆகாதா?''

''உனக்குத் தெரியாது சீதா. நான் பெரியவள். என் பேச்சைக் கேள். நிலத்தை விற்காதே. நிலத்தை விற்ப

திரைத் துணுக்குகள்---

மறக்க முடியாது!

''மனோகராவின் வெற்றி, பாரதப் பெண் குலத்தின் சிறப்பியல்பான கற்பு நெறிக்கு வெற்றி. தமிழ் மொழியை எவ்வளவு வன்மையாகக் கையாள முடியும் என்பதற்கு மனோகராவின் ராஜ சபைப் பேச்சு நல்ல எடுத்துக் காட்டு. ஆனால் இவ்வளவு வன்மையான பேச்சும் காரியத்துக்கு உதவாமல் போகிறது. அடுத்தாற்போல் கற்புக்கரசியாகிய பத்மாவதியோ ஒரு சில சொற்களைத்தான் சொல்லுகிறாள்.

'சங்கிலி அறுந்து விழட்டும்! சங்கிலி அறுந்து விழட்டும்! சங்கிலி அறுந்து விழட்டும்!' என்று மந்திரம் ஒலிப்பது போல் ஆவேசத்துடன் சொல்கிறாள். மனோகரனைப் பிணைத்திருந்த இரும்புச் சங்கிலிகள் அறுந்தே விழுந்து விடுகின்றன! ஆகா! படம் பார்க்கிறவர்கள் அச்சமயம் எப்படி கொட்டகை அதிரும்படி கை தட்டி ஆர்ப்பரிக்கிறார்கள்!''

இவ்வாறு பேராசிரியர் கல்கி அவர்கள் மனோகரா திரைப் படத்தைப் பற்றி எழுதி மகிழ்ந்தார்கள். ராணி பத்மாவதியைப் போன்று இன்னும் பலப்பல மறக்க முடியாத கதாபாத்திரங்களாகத் திரையில் தோன்றிய ஸ்ரீமதி கண்ணாம்பா அவர்களின் பெயர் இந்நாட்டில் வெள்ளித் திரை உள்ளளவும் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமென்ன?

நடிக்க விரும்பாத அழகி

திரைப்பட நட்சத்திரமாகிப் பேரும் புகழும் செல்வமும் பெற அருமையான வாய்ப்புக் கிட்டியும் அதை உதறித் தள்ளியவர்களைப் பற்றி நாம் கேள்விப்பட்டதுண்டா? அந்த அதிசயம் நிகழ்ந்துதான் இருக்கிறது மேற்கு ஜெர்மனியிலே. பதினெட்டு வயதான மாடிலேன் லோமர் என்ற அழகி (படம்) ஏதோ ஒரு பொழுது போக்குக்காக ஒரு படத்தில் நடித்தாள். ''மாடிலேன், மாடிலேன்!'' என்ற அந்தப் படம் அவளுக்குப் பிரமாத புகழையும் சர்வதேசப் பரிசுகளையும் பெற்றுத் தந்தது. உடனே எல்லாப் படாதிபதிகளும் அவளைச் சூழ்ந்து கொண்டு தங்கள் தங்கள் படத்தில் நடிக்க ஒப்புக் கொள்ளுமாறு வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்கள். மாடிலேன் 'முதலில் என் படிப்பை முடிக்கிறேன்; அப்புறம் வேணுமானால் பார்த்துக் கொள்ளலாம்' என்று தட்டிக் கழித்து வருகிறாள். மாடிலேனின்புகைப் படத்தைப் பார்க்கும் நமக்கு அவளை அத்தனை சுலபமாகப் படாதிபதிகள் விட்டு விடுவார்கள் என்று நம்பத் தோன்ற வில்லை அல்லவா?



அவளுடைய இன்பமான எதிர்காலத்திற்கு



இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கின் ரெக்கரிங்
டிபாஸிட் திட்டத்தின் சேமிப்பு நிச்சயம் உதவும்...

குறைந்த பட்சம் ரூ. 5/-லிருந்து அதிக பட்சமாக அதன் பெருக்குத் தொகை ரூ. 500/- வரையில், டிபாஸிட்டுகள் ஏற்றுககொள்ளபபடும்.

பிரதிமாதம் டிபாஸிட் செய்யும் தொகையான:

	ரூ. 5/-	ரூ. 10/-	ரூ. 50/-	ரூ. 100/-	ரூ. 500/-
கீழ்க்கண்டபடி பெருகும்:					
12 மாதங்களில் ரூ.	61.00	ரூ. 122	ரூ. 610	ரூ. 1,220	ரூ. 6,100
24 மாதங்களில் ,,	124.50	,, 249	,, 1,245	,, 2,490	,, 12,450
36 மாதங்களில் ,,	192.00	,, 384	,, 1,920	,, 3,840	,, 19,200
48 மாதங்களில் ,,	262.00	,, 524	,, 2,620	,, 5,240	,, 26,200

முழு விபரங்கள் பாங்கின் எந்தக் கிளைக் காரியாலயங்களிலும் கிடைக்கும்

இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் லிட்.

தலைமைக் காரியாலயம்: 151, மவுண்ட் ரோட், சென்னை-2

எம். ஸிடி. முத்தையா
சேர்மன்

எஸ். ஆர். வி. அரசு
ஜெனரல் மானேஜர்

தென்றால் நீ அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு அங்கேயே இருந்துவிடு. மீண்டும் இங்கு வராதே.''

கீதா துணுக்குற்றாள். ''அத்தை! நீங்களா இப்படிக் கூறுகிறீர்கள்? நான் உங்களுக்கே பாரமாகிவிட்டேனா?''

விம்மலுடன் கூறிய கீதாவை, அத்தை அணைத்துக் கொண்டாள். அவள் கண்களில் நீர் திரையிட்டது. ''இல்லை, கீதா! நான் ஏதோ சொல்லத் தெரியாமல் சொல்லி விட்டேன். நீ நிலத்தை மட்டும் விற்காதே. அதுதான் நான் சொல்ல முடியும்.''

கீதா அத்தையின் குடும்பத்துக்கு உதவி செய்வதற்காகவே முன்வந்தாள். அதனால் அத்தையின் எதிர்ப்புக்குச் செவி சாய்க்காமல் நிலத்தை விற்று வர ஏற்பாடு செய்துவிட்டாள். மூர்த்தி அன்றிரவே ஆனந்தத்துடன் புறப்பட்டு விட்டான். அத்தையோ முகம் வீங்க அழுதபடி இருந்தாள். கீதாவுடன் அன்று முழுவதும் அவள் சரியாகவே பேசவில்லை.

நிலத்தை விற்றுப் பணத்தை எடுத்து வந்து விட்டான் மூர்த்தி. பணத்தைக் கீதாவின் கையில் கொடுத்துவிட்டான். கீதாவே முன்வந்து அதில் ஒரு பகுதியை மூர்த்தியின் கையில் கொடுத்த போதும் அத்தை குறுக்கே விழுந்து தடுத்தாள்.

மூர்த்தி தாயை முறைத்துப் பார்த்தான். ''அம்மா! மகனுக்கு ஒருத்தி உதவி செய்யும்போது நீ குறுக்கே விழுந்து தடுப்பது துரோகம்.''

''துரோகமா? யாரடா துரோகி? நீயா, நானா? நெஞ்சைத் தொட்டுப் பாரடா...'' என்று இருமடங்கு கோபத்துடன் கொட்டினவள் சட்டென்று ஏதோ நினைவுக்கு வந்தவள்போல் புடவைத் தலைப்பால் வாயை மூடிக்கொண்டாள். அடைபட்ட வார்த்தைகள் நெஞ்சினுள்ளே சிக்கியதும், நெஞ்சு குலுங்கி நின்றது. மனத்துயரம் கண்ணீர் வழியே வெளிக் கொட்டியது. அவள் மறுபுறம் சென்று விட்டாள்.

மூர்த்தி தடுப்பில்லாமல் கீதாவிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு விட்டான்.

''அத்தை! உங்கள் போக்கே எனக்குப் புரியவில்லை'' என்று கீதா மெதுவாகக் கூறினாள்.

''உனக்கு எதுதான் புரிகிறது? புரிந்து கொள்ளக் கூடிய வயது உனக்கு வந்து விட்டது என்பதே உனக்குப் புரியவில்லை'' என்று அத்தை மிகுந்த விரக்தியுடன் கூறினாள்.


மெதுவாக ஒரு மாதம் சென்றது. இரவு நேரம். அறையில் சிறு சத்தம் கேட்டுக் கீதா கண் விழித்தாள். அவள் பெட்டியைத் திறந்தபடி ஒருவன் நின்றான். கீதா கூச்சலிட வாயெடுத்தவள் சட்டென்று வாயைப் பொத்திக் கொண்டாள். உடலெல்லாம் ஒரு நிமிடம் நடுங்கியது. மூச்சே நின்றுவிடக் கூடிய நிலை. அத்தை கண் விழித்துவிடக் கூடாதே என்ற பயம். ஆனால் அத்தை அவளுக்கு முன்பே கண் விழித்திருக்க வேண்டும். அதனால் தன் துணிவையும் வலுவையும் ஒன்று சேர்த்துப் பெட்டியைத் திறந்தவனின் கன்னத்தில் ஓங்கி அறை கொடுக்க அவள் முன்வந்திருக்கவேண்டும். காளியாக உருத் தாங்கி நின்றாள். ''பாவி மகனே! எடுத்ததைக் கீழே வை...'' என்று இடிஇடித்தாள் அவள்.

தாயின் கோபம் மூர்த்தியின் குரோதத்தை வளர்த்தது. அவளது கையைப் பிடித்துத் தள்ளினான். ''நகர்ந்து கொள்.'' முகம் சிவக்கப் பல்லைக் கடித்தபடி கையையும் ஓங்கிவிட்டான் அவன்.

கீதா அவனது ஓங்கிய கையைப் பிடித்தாள். பிறகு தானாக வரவழைத்துக்கொண்ட சிரிப்புடன் மூர்த்தியை நோக்கினாள். அந்தக் கண்களில் படிந்திருந்த குளுமை மூர்த்தியின் மனத்தைத் தளரடையச் செய்திருக்க வேண்டும். ''இல்லை....கீ...தா....''

கீதா அவனிடமிருந்து சற்று விலகி நின்றாள். அவன் வாயிலிருந்து வந்த நாற்றம் அவளுக்குப் புதிது. அவளால் சகிக்க முடியவில்லை...''மூர்த்தி, விளக்கம் தேவையில்லை. நிலத்தை விற்ற முழுப் பணத்தை நீங்கள் என்னிடம் நேராகவே கேட்டிருந்திருக்கலாம். நானும் கொடுத்திருப்பேன். ஆனால் உங்கள் குணத்தை எனக்குத் தெளிய வைக்கத்தான் இந்த நிகழ்ச்சி நடந்ததுபோலும். போகட்டும். இந்தப் பணத்தை நீங்கள் பட்டிருக்கும் கடனுக்கு ஈடு கட்டுங்கள். இந்தப் பணத்தைத் திருப்பித் தருவதற்குப் பதில் ஒரே ஒரு உதவி செய்யுங்கள். இனி பெற்ற தாயிடம் நீங்கள் அன்பு வைக்க வேண்டும்...'' என்றாள் கீதா. மெல்ல மெல்லத் தன் கோபத்தை அடக்குவதில் வெற்றி பெற்றுவிட்டதை அவள் அந்தச் சமயம் உணர்ந்தாள்.

மூர்த்தி பணத்தைக் கீழே போட்டான். நேராகத் தன் படுக்கைக்குப் போனான். அவன் உடல் தூக்கித் தூக்கிப் போட்டதிலிருந்து அவன் மனப் போக்கைக் கீதா ஒருவாறு உணர்ந்து கொண்டாள். (தொடரும்)


ராலீஸ்
ஸ்லிம்லைன்
அலுமினியம்—இலேசானது
சிக்கனமானது
புதிய
16"
டீலக்ஸ்
மேஜை
விசிறி
மேலும் கிடைப்பவை: ராலீஸ் 16" பெடஸ்டல் & எக்ஸாஸ்ட் விசிறிகள்

அறிவுக் கனலே, அருட் புனலே!

ரா. கணபதி

68

சந்திரகாந்தி ஓர் உருப்பெற்று வந்தாற் போல் குளிர்ச்சியும், ஒளியும் ஒருங்கே இணைந்த ஸ்வாமி விவேகாநந்தர் சென்னை மாநகரில், எழும்பூர் ரயில் நிலையத்தில் தமது திருப் பாதங்களை வைத்தார்.

வான் முகட்டைக் கிழிப்பது போன்ற வாழ்த்தொலி பல்லாயிரம் கண்டங்களிலிருந்து பெருகியது. மாணவனின் திறனையறிந்து தேர்ந்தெடுத்த ஆசிரியர், அவன் பிற்காலத்தில் பெரும்பதவியும் புகழும் பெற்று விளங்கும்போது எப்படிப் பூரிப்பார்? இங்கோ குருவின் பெருமையை முன்கூட்டிப் புரிந்து கொண்டிருந்தனர் சென்னைச் சீடர்கள். நாலாண்டுகளுக்கு முன்பு பேர் பூணாத விவேகாநந்தரிடம் தானறிந்திருந்த மகிமையை இன்று நானிலம் எல்லாம் அறிந்து விட்டது என்பதால் தனக்கே 'சபாஷ்' போட்டுக்கொண்டு ஸ்வாமிஜியை வரவேற்றது சென்னை.

ரயில் நிலையத்தில் வரவேற்பானதும் பிரம்மாண்டமான ஊர்வலம் தொடங்கிற்று. இரட்டைக் குதிரைகள் பூட்டிய லேண்டில் ஸ்வாமிஜி ஜயசீலராக ஆரோஹணித்தார். ஜனநெரிசல் சொல்லி முடியாது. ரஸ்தாவில் நின்றும், மற்றத் தளங்களுக்கு மேல் கழுத்து வலிக்க எழும்பியும் ஸ்வாமிஜியைத் தரிசனம் செய்து பெரும் களிப்புப் பெற்றனர் மக்கள்.

சிந்தாதிரிப் பேட்டை மார்க்கமாக நேபியர் பார்க், மவுண்ட்ரோட், வாலாஜா சாலை, பைக்ராப்ட்ஸ் சாலையைக் கடந்து தெற்குக் கடற்கரை வீதிக்கு வந்து சேர்ந்தது ஊர்வலம். நாம் ஒரே வரியில் ஊர்வலத்தைச் சொல்லி விட்டாலும், உண்மையில் அது ஊரைவலம் செய்வதால் மட்டும் ஊர்வலமாயிராமல் — ஊர்ந்து ஊர்ந்து சென்றதாலும் ஊர்வலமாக அமைந்தது. வீதிகள் வீடுகள் எங்கும் பண்டிகைக் களை சொட்டிற்று. ஜன்னல்கள், வெளி மாடிகள் யாவற்றிலும் மக்கள் திரளாக நிரம்பியிருந்தனர். வீடுதோறும் ஸ்வாமிஜிக்கு புஷ்பாஞ்சலி, பூர்ண கும்பம், தெய்வத்துக்குச் செய்வதுபோல் தீபாராதனை. மாடிகளிலிருந்தெல்லாம் மலர்கள் சொரியப்பட்டன.

படித்த இளைஞர்களையும் அறிஞர்களையும் மட்டுமின்றிப் பாமர மக்களையும்கூடக் கவரும் சாந்நித்தியம் ஸ்வாமிஜிக்கு இருந்தது. மூதாட்டி ஒருத்தி கூட்டத்தை விலக்க முடியாமல் விலக்கியபடி ஸ்வாமிஜியை நெருங்கினாள். அறிவுக்கனல் வீசும் அந்த அருட்புனலைக் கண்டதும் அவள் கண்கள் உருகிப் பெருகின. ''ஞான சம்பந்தமூர்த்தியிடம் என் பாவங்களையெல்லாம் கழுவிக் கொள்கிறேன்'' என்று விம்மினாள் அவள்.

ஞானசம்பந்தர்தான் விவேகாநந்தர் — ஆம், பேர் அறிவுடன் பொருந்திய அவர் ஞான—சம்பந்தரல்லர் என்று யார்தான் கூற இயலும்?

கடற்கரைச் சாலையில் கோசு திரும்பியவுடன் வாலிபர்களின் ஆவேசம் எல்லை மீறிப் போயிற்று. அவர்கள் வண்டியில் பூட்டியிருந்த குதிரைகளை அவிழ்த்து விட்டுத் தாங்களே அதனை இழுக்கலாயினர். இவர்களில் ஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார் அவர்களும், காலஞ்சென்ற என். கோபாலஸ்வாமி அய்யங்கார் அவர்களும் இருந்தனர்.

''சென்னை நகரம் தோன்றிய நாளாக எவருக்குமே இத்தகைய உற்சாக வரவேற்பு அளித்ததில்லை. அரசாங்க பூர்வமாகச் சென்னையில் இதுவரை நடந்துள்ள வரவேற்புகள்கூட ஸ்வாமி விவேகாநந்தருக்கு அளிக்கப்பட்டதற்குச் சமானமாகாது'' என்று ஒரு பிரபல பத்திரிகை கூறிற்று.

ஒன்பதரை மணிக்கு வழக்கறிஞர் ஸ்ரீமான் பிலிகிரி அய்யங்காரின் 'காஸில் கெர்னன்' என்ற பெருமாளிகையை அடைந்தது ஊர்வலம். அதுதான் ஸ்வாமிஜிக்கு அமர்த்தப்பட்டிருந்த ஜாகை. இதன்பின் நீண்டகாலத்துக்கு 'ஐஸ் ஹவுஸ்' என்று அழைக்கப்பட்ட அந்த மாளிகை இப்போது 'விவேகாநந்தர் இல்லம்' என்றே பெயர் பெற்றிருக்கிறது.



காலில் கொள்ளனில் ஸ்வாமிஜி இறங்கியவுடன் சென்னை வித்வத் மனோரஞ்சனி சபையின் சார்பில் சம்ஸ்கிருதத்தில் ஒரு வரவேற்பு வாசித்தளிக்கப்பட்டது.

ஸ்வாமிஜி பிரயாணத்தினால் மிகவும் களைத்திருந்ததால் அவருக்கு ஓய்வு தேவை என்று கூறி, கூட்டத்தினரைக் கலையச் செய்தார் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யர்.

ஸ்வாமிஜி உடலால் மிகவும் களைத்துத்தான் இருந்தார். எனினும், "இந்தியாவில் ஒருவரை ஆன்மிகப் பணி ஒரு போதும் அலுப்புறச் செய்வதில்லை" என்று கூறிப் பேட்டிகள் வழங்கினார். அன்று மாலை ஸ்வாமிஜி ஜயதேவ அஷ்டபதியிலிருந்து சில பாடல்களைப் பாடித் தமது அடியார்களை மகிழ்வித்தார்.

ஸ்வாமிஜி சென்னை வந்த மூன்றாவது தினம். மாலை சுமார் நாலு மணிக்கு, இப்போது வடார்க்காடு மாவட்டத்தில் இருப்பதும் அப்போது சேலம் மாவட்டத்திலிருந்ததுமான திருப்பத்தூரிலிருந்து ஒரு சைவ கோஷ்டி ஸ்வாமிஜியிடம் வந்தது. அத்வைதியாகிய ஸ்வாமிஜியுடன் வாது புரியவே இந்தக் கோஷ்டியினர் வந்திருந்தார்கள். "பிரம்மம்தான் மாயை காரணமாக உலகாகத் தோன்றுகிறது என்கிறீர்களே. ஏன், எப்போது, எதற்காக, எப்படித் தன்னிலேயே லயித்திருந்த பிரம்மம் இப்படி உலகத் தோற்றத்தை ஏற்படுத்தியது?" என்று வினவினர்.

ஸ்வாமிஜி க்ஷணகாலம் கூடத் தயங்கவில்லை. மின்னல் மின்னுவது போல் உடனே கூறினார்: "ஏன், எப்போது, எதற்காக, எப்படி என்பதெல்லாம் தோற்றமாகிய இந்த உலகு உண்டான பின்தான் எழுகிற விஷயங்கள். இந்த உலகுக்கு மட்டுமே தொடர்புள்ள விஷயங்கள் அதன் தோற்றத்துக்கு முன் உள்ள நிலையில் — காரண காரியமும் மாறுபாடும் அறியாத பிரம்ம நிலையில்—எழும்பவே எழும்பாது. எனவே உங்கள் கேள்விக்கு அர்த்தமே கிடையாது."

வினாப் போட்டவர்கள் ஸ்வாமிஜியின் விடையால் அயர்ந்து விட்டார்கள்.

திடீரென்று ஸ்வாமிஜியிடமிருந்து தேன் அலைகள் தண்ணெனப் பாய்வது போலிருந்தது. அந்தச் சூழலில் நெஞ்சின் இரக்கமும், மன இணக்கமும், உள்ள இளக்கமும் பெருகத் தொடங்கின. ஏதோ மாயமந்திர ஸ்பரிசம் போல் சைவக் குழுவினரைத் தழுவியது ஸ்வாமிஜியின் குரல்:

"இந்த விசாரமெல்லாம் எதற்கு? இவற்றால் என்ன புண்ணியம்? ஆண்டவனைத் தேடுங்கள். அவனுக்குச் சேவை செய்யுங்கள். ஆண்டவனைத் தேடுவதும், சேவை செய்வதும் என்ன? ஏழை எளியவர்களைத் தேடிச் சென்று அவர்களின் துயர் துடைப்பதுதான்."

சேவா உபநிஷதமாகவே ஸ்வாமிஜியின் பேச்சு விரிந்தது.

சேவையே சிவம் என்ற உணர்வு உள்ளத்தில் பெற அந்தச் சைவர்கள் ஸ்வாமிஜியை வணங்கி விடை பெற்றனர்.

வரவேற்பு விழாவை ஏற்பதற்காகத் தமது இருக்கையிலிருந்து கோலாகல பவனியாக விக்டோரியா பொது மன்றத்தை அடைந்தார் ஸ்வாமிஜி. மன்றத்துக்குள் ஒரு பங்கு என்றால் அதைப்போல் பல மடங்கு மக்கள் வெளியே திரண்டிருந்தனர்.

ஸர் வி. பாஷ்யம் அய்யங்கார் அக்ராசனர் ஆசனத்தில் அமர்ந்து விட்டார். ஸ்வாமிஜி அவருக்குப் பக்கத்தில் மேரு பர்வதமாக அமர்ந்தார். பற்பல மொழிகளில் இருபத்து நாலு மடல்கள் வாசித்தளிக்கப்பட்டன.

மண்டபத்துக்குள்ளே இந்த வைபவம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் வெளியே கூடியிருந்தோர் ஸ்வாமிஜியைக் காணவும் அவர் பேச்சைக் கேட்கவும் துடித்துக்கொண்டிருந்தனர். இன்று போல் அன்று ஏது ஒலி பெருக்கி? எனவே அவர்கள், "திறந்த வெளியில் விழாவை நடத்துங்கள்" என்று உரக்கக் கோஷமிடலானார்கள்.

'அன்பெனும் பிடிக்குள் அகப்படும் மலை'யாகிய ஸ்வாமிஜி மண்டபத்திலிருந்து வெளியே வந்தார். அங்கு கூடியிருந்த ஜன சமுத்திரத்தைக் கண்டு உள்ளம் உருகினார். தாம் இங்கே பேசுவதுதான் நியாயம் என்று கருதினார். ஆனால் இங்கு எல்லோரும் காணுமாறு அவர் எந்த மேடையில், அல்லது பீடத்தில் நின்று பேசுவது? தயங்கவில்லை ஸ்வாமிஜி. அருகேயிருந்த கோச் வண்டி ஒன்றின் கூண்டு மீது ஏறிக்கொண்டார்.

"கீதை பாணியில் பேசுகிறேன்" என்று தொடங்கினார்.

கீதாசாரியன் எப்படி ரதத்தின் மீது அமர்ந்து பேசியபடியே ஞான மார்க்கத்தில் அர்ஜுனனைச் செலுத்தினானோ அதே காரியத்தைத்தான் ஸ்வாமிஜியும் செய்ய முற்பட்டார். ஆனால் மக்களின் ஆரவாரத்திடை அதிக நேரம் ஸ்வாமிஜியால் பேச முடியவில்லை. தியாகம், அன்பு, அபயம் இவற்றை இந்தியாவே மக்கட் குலத்துக்கு வழங்கிச் சம்சார சாகரத்திலிருந்து மன்பதையைக் கரையேற்ற உதவியிருக்கிறது; வாழ்க்கை என்ற புதிரை சத்திய அநுபவம் என்ற ஆனந்தமாக்குகிறது என்பதைச் சுருக்கமாகக்கூறினார்.


மறுநாள் மாலை, "என் பிரசாரத் திட்டம்" என்ற புகழ்பெற்ற பிரசங்கத்தை வழங்கினார் ஸ்வாமிஜி.

"என்னுடைய திட்டம் என்பது நமது மகத்தான புராதன ஆசாரிய புருஷர்களைப் பின்பற்றுவதுதான்" என்று கூறிய ஸ்வாமிஜி அவர்கள் எப்படி இந்நாட்டைச் சமய உணர்வில் ஊறச் செய்திருக்கிறார்கள் என்பதைக் கூறினார்.

"நீங்கள் இந்தியாவில் சமயத்தைத் தூரத் தள்ளிவிட்டு அரசியல், சமூக இயல் அல்லது வேறு எதையோ மையமாகக் கொள்ளும் முயற்சியில் வெற்றி பெற்றால் அன்றே ஒன்றுமில்லாமல் போய்விடுவீர்கள்... யாவும், யாவும் உங்களது மதத்தின் சக்தியால் செயல்படுமாறு நீங்கள் செய்ய வேண்டும்... உங்களுடைய எல்லா நரம்புகளும் மதம் என்ற முதுகுத்தண்டினூடே அதிரட்டும். இந்தியாவில் சமூக சீர்திருத்தங்களைக் கூட ஆத்மிக வாழ்வுக்கு அவை என்ன நன்மைக்கும் என்பதை மனத்தில் கொண்டே செய்ய வேண்டும்; இதேபோல் அரசியலும் ஆத்மிகத்


உங்கள் ஷர்ட்டுகள்
டினோபால் தரும்
அதிக வெளுப்பினால்
பொலிவுடன் விளங்குகின்றன
Tinopal

B·I



S. S. ரஜூலா

சென்னையிலிருந்து — 1964 ஜூன் 15

நாகப்பட்டினத்திலிருந்து — 1964 ஜூன் 16

கம்பெனியின் சென்னைக் காரியாலயத்தின் மூலம் விற்பனை செய்யக்கூடிய பர்த் வசதியற்ற மற்றும் பங்க் வசதியுள்ள மேற்கண்ட கப்பல் பிரயாணத்துக்குரிய டிக்கட்டுகள் எல்லாம் விற்பனை ஆகிவிட்டன. இருந்தாலும் இவ்வகுப்பு டிக்கட்டுகள் கீழ்க்கண்ட கம்பெனியின் அங்கீகாரம் பெற்ற பாஸேஜ் புரோக்கர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

C. M. குட்டி	AL. காசி செட்டியார்	கேரளா டிராவல்ஸ்
38, அங்கப்ப நாயக்கன் தெரு சென்னை - 1	கந்தோரிக் சென்டர் பில்டிங்ஸ் 6, அரமனைக்காரத் தெரு சென்னை - 1	மாஸ்கோட் ஹோட்டல் திருவனந்தபுரம்

வெளியூர் பிரயாணிகள் கப்பல் கட்டணத் தொகை முழுவதையும், மணியார்டர் மூலமோ, அல்லது பாங்க் டிராப்டாகவோ கம்பெனியின் புரோக்கர்களுக்கு முன்னதாக அனுப்பி டிக்கட்டுகளை ரிசர்வ் செய்து கொள்ளலாம். கப்பல் புறப்பட குறைந்தது நான்கு நாட்களுக்கு முன்னதாக பிரயாண தஸ்தாவேஜுகளைக் காண்பித்து டிக்கட்டுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

நாகப்பட்டினத்திலிருந்து பினாங்கு, சிங்கப்பூருக்கு டிக்கட்டுகளை வாங்க விரும்பும் பிரயாணிகள் மதுரா கம்பெனி பிரைவேட் லிமிடெட், நாகப்பட்டினம் என்ற விலாசத்துக்கு நேரிடையாக விண்ணப்பிக்கவும்.

பினாங்கு, போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும், சிங்கப்பூரில் கப்பல் மாற்றி ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து துறைமுகங்களுக்கு அனுப்பவும் சரக்குகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றும் விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்:

பின்னி & கோ., லிட்.	மதுரா கம்பெனி பிரைவேட் லிட்,
7. அரமனைக்காரத் தெரு, சென்னை -1	முதல் லேன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

ஏஜெண்டுகள்: பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்

அக்கு எவ்வளவு அபிவிருத்தி அளிக்கும் என் பதைக் கொண்டே பிரசாரமாக வேண்டும்... இந்தியாவை சோஷலிசம் அல்லது வேறு எந்த அரசியல் கொள்கை வெள்ளத்திலும் மூழ்கடிக்கு முன் ஆத்மிகக் கருத்துக்கள் என்ற மகாப் பிரவாகத்தை நாட்டில் பாய்ச் சுங்கள். முதலில் ஆத்மிக அறிவைப் பரப்பி னால் அதனுடனே எல்லா லௌகிக அறிவும் வரும். அறிவு என்பதில் என்ன இருக்கிறது? அது சில அடிகள் சென்றபின் நின்றுவிட வேண்டியதுதான். ஆனால் இதயத்தின் வழி யாகத்தான் பிரம்மானுபவம் வருகிறது. கடத்தற்கரிய கதவங்களை அன்புதான் திறந்து வைக்கிறது. பிரபஞ்சத்தின் ரகசியங்களுக்கும் அன்புதான் நிலைவாசல். எனவே சீர்திருத்த வாதிகள் என்றும், தேசபக்தர்கள் என்றும் சொல்லிக் கொள்பவர்கள் முதலில் உணரக் கற்றுக் கொள்ள வேண்டும்....''

தேசபக்தர்கள் பற்றியும் உணர்ச்சி பற்றி யும் கூறியவுடன் ஸ்வாமிஜியின் தேச பக்தி பீறிட்டுக் கொண்டு வந்தது. சொல்வார்:

''நான் சர்வமத சபையில் கலந்து கொள்வதற்காக அமெரிக்காவுக்குச் செல்ல வில்லை. ஆனால் என் ஆத்மாவில் இருக் கிறதே, உணர்ச்சி என்ற பிசாசு, அதற் காகத்தான் சென்றேன். இந்தியா முழுவ தும் நான் பன்னிரண்டாண்டுகள் சுற்றி அலைந்திருக்கிறேன்; ஆனால் என் நாட்டு மக்களுக்கு எப்படித் தொண்டு புரிவது என்பதற்கு உபாயம் காணவில்லை. அதனால் தான் அமெரிக்காவுக்குச் சென்றேன். சர்வ மத மகா சபையைப் பற்றி யார் லட்சியம் செய்தார்கள்?''

மேல் நாட்டினர் ஹிந்து சமயத்தை ஒப்புக் கொண்டால்தான் நம் நாட்டு 'அறிவாளி' களும் அதனை ஏற்றுக் கொள்வார்கள் என்றும், நம் நாட்டில் சமய — தர்ம ஸ்தாபனம் அமைக்க மேல் நாடுகளிடமே பொருளுதவி பெற முடியும் என்றும் ஸ்வாமிஜி அமெரிக்கா செல்வதற்கு நீண்ட நாட்களுக்கு முன்பே எண்ணமிட்டது. வாசகர்களுக்கு நினைவு இருக்கலாம்.

தேசிய இயக்கம் தோன்றுவதற்கு அடிப் படை தேசிய உணர்வு — அதாவது நம் நாடு சிறந்தது; நாம் உயர்ந்த மக்கள் என்ற உணர்வு. இந்த உணர்வை இந்தியாவுக்கு முதலில் அளித்தவர் எந்த அரசியல் வாதியு மல்ல. அரசியலும் ஆன்மிகத்தின் மூலம்தான் நம் நாட்டில் மேவும் என்று விவேகானந்தர் கூறிய உண்மை இதிலேயே நிரூபணமாகி விட்டது. ஆம்; இந்தியாவின் உயர்வை அதன் மக்களுக்குப் புலப்படுத்தி அவர்களைத் தேசிய உணர்வு கொள்ளச் செய்வதற்கு முதற் காரண புருஷர்கள் பரமஹம்சரும், ஸ்வாமிஜியும்தான். இதனால்தான் நிவேதா நந்தர். ''இந்தியாவின் விடுதலை இயக்கம் தட்சிணேசுவரத்திலிருந்துதான் தொடங் கிற்று'' என்கிறார். 'மெய்ஞ்ஞானத் துணி வினை அரசியலதனிலும் பிணைத்த' மகாத்மா காந்தி அடிகளும் இவ்வாறே பாராட்டியுள் ளார்.

என்றாலும் ஸ்வாமிஜியும், குருமஹராஜும் அரசியலிலிருந்து ஒதுங்கியே வாழ்ந்தவர்கள். அதுதான் அவர்கள் பெருமை.

விக்கிரக வழிபாட்டின் பெருமையைச் சென்னை உரையில் ஸ்வாமிஜி வெகு அழகாக

குட்டிக் கதை

''எங்கள் ஊர் மாதா கோயிலுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அந்த மனிதன் தவறாமல் வருவான். பாதிரி அறிவுரைகள் வழங்கும்போது ஆனந்தமாய்த் தூங்குவான். ஒரு நாள் பாதிரி பொறுமை இழந்தவராக, ''சொர்க்கத்துக்குப் போக விரும்புவோரெல்லாம் எழுந்து நில்லுங்கள்'' என்று மெல்லிய குரலில் சொன்னார். முன் வரிசையில் குறட்டை விட்டுக் கொண்டிருந்த அவனைத் தவிர மற்ற எல்லோரும் எழுந்து நின்றார்கள். அவர்களை அமரச் செய்த பாதிரி, தூங்குபவனை விழித்தெழச் செய்யும் உரத்த குரலில், ''இப்போது நரகத்துக்குப் போக விரும்பும் அனைவரும் எழுந்து நில்லுங்கள்!'' என்றார். திடுக்கிட்டு விழித்தெழுந்து நின்றான் அவன். சுற்று முற்றும் பார்த்தான். எல்லாரும் அமைதியாக மௌனமாக உட்கார்ந்திருப்பதைக் கண்டான். கடைசியில் எதிரே நின்று கொண்டிருந்த பாதிரி யைப் பார்த்துக் கொஞ்சம் படபடப்போடு கூறினான்: 'பாதிரியாரே! நாம் இங்கே எதைக் குறித்து ஓட் டெடுப்பு நடத்துகிறோம் என்று எனக்குத் தெரிய வில்லை. ஆனால் அதற்கு ஆதரவான ஓட்டளிப் பவர்கள் நீங்களும் நானும் மட்டுந்தான் என்று தோன்றுகிறது!'



''என்னுடைய நிர்வாகத்தின் லட்சியங்கள் நிறைவேற நான் உங்களுடைய ஒத்துழைப்பைக் கோரும்போது நீங்கள் மாதா கோயிலில் தூங்கிய அந்த மனிதனைப்போல் பதில் சொல்லக் கூடாது!''

—அமெரிக்க ஜனாதிபதி ஜான்ஸன்

நிரூபித்தார். 'உருவ வழிபாடு தவறானது என்ற கருத்தை அப்படியே ஏற்றுக் கொள்கிறார்கள் இந்நாள் மக்கள். நானும் இப்படி நினைத்தவன்தான். அதற்கு அபராதமாக எல்லா அநுபவங்களையும் விக்கிரகங்கள் மூலமே பெற்ற ஒருவரின் பாதத்தில் பாடம் கேட்டேன் — ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரைத்தான் குறிப்பிடுகிறேன். அப்படிப்பட்ட ஒரே ஒருவரை விக்கிரக ஆராதனை மூலம் பெற முடியும் எனில் இன்னமும் ஆயிரம் விக்கிரகங்களை வைத்துக் கொண்டு பூஜை செய்யலாம்.'

பிப்ரவரி 11ந் தேதி மாலை விக்டோரியா மன்றத்தில் 'இந்தியாவின் முனிவர்கள்' என்ற தலைப்பில் அந்த முனிவர்களின் வாரிசான ஸ்வாமிஜி அரியதோர் உரை நிகழ்த்தினார். ஆத்மிக சத்தியத்தை நேருக்கு நேராகக் கண்டவர்களே ரிஷிகள் என்று கூறி வேதத்தின் பெருமையை இயம்பினார். நம் மதம் எந்தத் தனிப்பட்ட ஸ்தாபகராலும் அமைக்கப்பட வில்லை என்றும் தன்னில் பொதிந்துள்ள சத்தியங்களாலேயே அது நிலைபெற்றுள்ளது என்றும் விண்டு கூறினார்.

ஹிந்து சமய சாஸ்திரங்களை யெல்லாம் விரித்துரைத்துவிட்டு, சங்கருடைய அறிவையும், ராமாநுஜர், சைதன்யர் இவர்களின் இதயத்தையும் ஒருங்கே படைத்த ஒரு மகா முனிவருக்கு நவ பாரதத்தில் தேவை ஏற்பட்டதாகச் சொன்னார். அப்படிப்பட்ட மகாமுனிவராகவே ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அவதரித்ததாக உணர்ச்சிப் பெருக்குடன் கூறினார்.

ஏழைப் பிராமணர் ஒருவரின் பிள்ளையாக ஏதோ எட்டாக்கையில் பிறந்து யாரும் அறியாதவராக வளர்ந்த அவர் இன்று ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஆயிரக்கணக்கான மக்களால் பூஜிக்கப்படுவதைக் கூறினார். "எதிர்காலத்தில் மேலும் ஆயிரமாயிரம் மக்கள் அவரை வணங்குவார்கள்" என்று தீர்க்க தரிசன வாக்கினை மொழிந்தார்.

மறுநாள் பச்சையப்பன் கல்லூரியில் "வேதாந்தமும் நடைமுறை வாழ்வும்" என்பது பற்றி ஓர் இணையற்ற உரையாற்றினார் ஸ்வாமிஜி.

உபநிஷதங்களின் மையக் கருத்து 'பலம்' என்பதே என்றார். "ஒவ்வொரு ஏட்டிலும் உபநிஷதங்கள் பலம் பலம் என்றே பேசுவதாக நான் காண்கிறேன். 'பயமற்ற' (அபீ:) என்ற அடைமொழியை ஆண்டவனுக்கும் மக்களுக்கும் சூட்டிய ஒரே பிரமாண நூல் நமது வேதாந்தம்" என்றார். இந்திய இளைஞர்கள் பலசாலிகளாக வேண்டும் என்று அறைகூவிய ஸ்வாமிஜி "கீதை படிப்பதைவிடக் கால் பந்து விளையாடுவதன் மூலம் நீங்கள் மேலுலகுக்கு அருகே செல்ல முடியும்" என்ற மறக்க முடியாத உபதேசத்தை அளித்தார். தேக பலத்தைக் காத்து, பிறகு பிரம்மச்சரியத்தினால் அதனை ஆத்மபலமாக்குவதை மனத்தில் கொண்டுதான் ஸ்வாமிஜி இந்த உபதேசத்தைப் புரிந்திருக்க வேண்டும். பௌதிக பலத்தை பௌதிகக் கோணத்திலிருந்தே பெரிதாக மதிப்பவரல்லவே அவர்!

'மீன் பிடிக்கும் வலைஞரிலிருந்து தொடங்கி, உபநிஷதக் கருத்துக்களை யார் அறிந்தாலும் அவர்கள் தொழில் எதுவாயினும் தாங்கள் இயல்பில் தெய்விகம் கூடியவர்கள் என்று புரிந்துகொள்வார்கள்; எனவே பிறர் தொழிலுக்கு ஆசையும், அசூயையும் படாமல் தத்தம் தொழிலையே புரிவர்; ஜாதி முறை என்ற நல்ல சமூக அமைப்பு உண்மையான நோக்கத்துடன் பின்பற்றப்படும்' என்று கூறினார்.

ஸ்வாமிஜியைத் தங்களுடன் சேர்த்துக் கொள்ள விரும்பும் 'சீர்திருத்த வாதிகள்' இந்த ஓர் உரையைப் படித்தால் அவருக்கு சநாதன தர்மத்தில் இருந்த ஈடுபாட்டைப் புரிந்து கொள்ள முடியும். ஸ்வாமிஜி அந்தணர்களை அநேக சந்தர்ப்பங்களில் தாக்கிப் பேசியதற்குக் காரணம் அவர்கள் அந்தணர்கள் என்பதல்ல; அவர்கள் உண்மையான அந்தணர்களாக இல்லை என்பதுதான். வேத உபநிஷதங்கள் பொதுமக்களுக்கு அல்ல என்ற கருத்தை ஸ்வாமிஜி என்றும் ஒப்புக் கொண்டதில்லை. வேத உபநிஷதங்களை ரட்சிக்கவே ஒரு பரம்பரைப் பிரிவு அவசியம் என்பதை அவரே ஒப்புக் கொண்டபோதிலும், மற்றவர்களுக்கும் அவற்றின் தாத்பரியங்களைப் பரப்ப வேண்டும் என்று கருதினார்.

"உலகத்தில் ஒளியைக் கொண்டுவாருங்கள்; எல்லா மக்களுக்கும் ஒளி கிடைக்குமாக" என்று உரைமுடிவில் ஆணையிட்டார் ஸ்வாமிஜி.

பிப்ரவரி 14ந் தேதி ஞாயிற்றுக் கிழமை என்று ஹார்மன்டன் சர்க்கஸ் மைதானத்தில் ஸ்வாமிஜி "இந்தியாவின் எதிர்காலம்" என்பது பற்றி உணர்ச்சி மயமாக ஓர் உரை ஆற்றினார். அன்று கூட்டம் சொல்லி முடியாது. ஸ்வாமிஜி சிம்மம்போல் மேடையில் உலவியபடி அமர வாசகங்களைக் கர்ஜித்தார்.

அன்று ஸ்வாமிஜியின் சித்தக் கடலில் உதிர்ந்த நித்திலங்களில் இதோ ஒரு சில:

"நமது வீரியம்—பலம்—ஏன், நமது தேசிய வாழ்வே, நம்முடைய மதத்தில்தான் உள்ளது. இது சரியா அல்லவா என்று நான் இப்போது விவாதிக்கப் போவதில்லை. ஆனாலும் இதுதான் உண்மை. இதிலிருந்து நீங்கள் விடுபட முடியாது. இன்றைக்கும் என்றைக்கும் இது உங்களை விட்டகலாது. எனவே உங்களுக்கு மதத்தில் நம்பிக்கை இல்லாவிடினும் அதை ஆதாரமாகக் கொண்டு தான் நீங்கள் நிற்க வேண்டும். நாம் மதத்தால்தான் கட்டுண்டு இருக்கிறோம்; அதனை நீத்தால் தூள் தூளாகச் சிதறிப் போய்விடுவோம்.

"இந்தியாவின் மத மறுமலர்ச்சிக்கு என்னுடைய முதல் கருத்தாவது: மடங்களிலும் வனங்களிலும் ஒளித்து வைக்கப்பட்டாற்போல் ஒரு சிலரின் உரிமையாக மட்டும் இருக்கும் நமது சாஸ்திரங்களில் திரண்டுள்ள ஆத்மிக மணிகளை வெளிக் கொண்டு வந்து, அவற்றின் ஞானசாரத்தை எல்லோருக்கும் பரப்ப வேண்டும்.

"இதற்குத் தத்துவங்களை மக்கள் பேசுகிற மொழிகளில் போதிக்க வேண்டும். அதே சமயத்தில் சம்ஸ்கிருதக் கல்வியையும் பொது மக்களுக்குப் புகட்ட வேண்டும். ஏனெனில், சம்ஸ்கிருத பதங்களின் ஒலியே நமது இனத்துக்கு ஒரு கௌரவத்தையும் சக்தியையும்


உங்கள் கேசத்தை அழகுபடுத்த நிரூபணமான பாமாலிவ் வழி





பாமாலிவ் பெர்ஃப்யூம்டு கோகோனட் ஹேர் ஆயில்...

உங்கள் கேசத்திற்கு போஷாக்கு அளிக்கிறது. பாமாலிவ் உபயோகிப்பதால் நீண்ட, செழிப்பான கேசம் இயற்கையாக வளருகிறது. ரோஜா, லவண்டர் அல்லது மல்லிகை—இம்மூன்று வாசனைகளில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்து எடுத்துக் கொள்ளுங்கள்.



பாமாலிவ் கோகோனட் ஆயில் ஷாம்பு...

உயர்தரமான தேங்காய் எண்ணெய்யுடன் தனிப்பட்டு தயாரிக்கப்பட்ட பிரசித்தி பெற்ற கலவை. இது அழுக்ககற்றும் ஷாம்பு என்பதுடன், ஒரு கூந்தல் அழகு சாதனமும் ஆகும். பாமாலிவ்வின் செழிப்பான நுரை கூந்தலுக்கு ஊட்டத்தைக் கொடுப்பதுடன் உங்கள் தலையையும் கூந்தலையும் தூய்மையாக்கி பரிமள புத்துயிரூட்டுவதால், புதிய ஆரோக்கியமான கேச வளர்ச்சி ஏற்படுகிறது.

நவநாகரீக இந்தியப் பெண்டிர் கூந்தல் அழகிற்கு விரும்பிப்பெறுவது பாமாலிவ்


ஒவ்வொருவருக்கும்...
பணத்தில் நம்பிக்கை வைக்காது
நம்பிக்கையில் பணம் வைக்கும்
ஒவ்வொருவருக்கும்....உகந்த பாங்க்.
அவசியத்திற்கோ, அநுபவிப்பதற்கோ
அநேக முறைகளில் சேமிக்க முடியும்.
மிகச் சிறந்த, மிகச் சுலபமான
மிகப் பத்திரமான முறை
நம்பிக்கைக்கு மறுபெயரான
ஸ்டேட் பாங்க் ஆப் மைசூருடன்
ஒரு சேமிப்புக் கணக்கை
உடனடியாகத் தொடங்குவது.
ஸ்டேட் பாங்க் ஆப் மைசூர்
தலைமை ஆபீஸ்: அவென்யூ ரோடு, பெங்களூர்-9
கிளைகள்: முக்கிய ஸ்தலங்களில்
ஜெனரல் மானேஜர்: R. P. நந்தா

பலத்தையும் அளிக்கிறது.... புத்தர், ராமானுஜர், சைதன்யர், கபீர் முதலியவர்கள் பொது மக்களை உயர்த்தினார்கள் என்பது உண்மையே...... எனினும், அவர்கள் சம்ஸ்கிருத மொழியை மக்களுக்குப் புகட்டுவதில் தங்கள் சக்தியைச் செலுத்த வில்லை. பொதுமக்களுக்கு ஞானம் வந்தது; ஆனால் கௌரவம் இல்லை; பண்பாடு இல்லை. பண்பாடுதான் அதிர்ச்சிகளைத் தாங்கக் கூடும்; ஞானமல்ல.

"சென்னைக்குத் தனிப்பட்ட முக்கியத்துவம் பொருந்திய ஒரு பிரச்னையை விவாதிக்க விரும்புகிறேன். தட்சிண பாரதத்தில் திராவிடர்கள் எனப்பட்ட ஒரு மனித இனம் இருந்ததாகவும், இது ஆரியர்கள் என்ற வட இந்திய இனத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டது எனவும், தென் இந்தியாவில் தற்போதுள்ள பிராமணர்கள் மட்டுமே வடக்கேயிருந்து வந்த ஆரியர்கள் எனவும், மற்ற எல்லாத் தென்னிந்தியர்களும் முற்றிலும் வேறுபட்ட ஓர் இனத்தைச் சேர்ந்தவர்களெனவும் ஒரு சித்தாந்தம் இருக்கிறது.

"இந்தச் சித்தாந்தங்களின் சத்தியத்தை ஆராயப் புகுவோமாயின், இவற்றைப் பற்றி நமது சாஸ்திரங்களில் ஒரு வார்த்தைகூடக் குறிப்புக் கிடையாது. ஆப்கானிஸ்தானம் உள்ளிட்ட பண்டைய பாரதத்துக்கு வெளியே எங்கிருந்தோ ஆரியர்கள் வந்தார்கள் என்று அநுமானிக்க நமது சாஸ்திரங்களில் ஒரு பதம் கூடக் கிடையாது. இதோடு விஷயம் முடிகிறது.

"எனவே, நண்பர்காள், ஜாதிச் சண்டை போட்டுக்கொண்டிருப்பதில் உபயோகமில்லை. அது நம்மை மேலும் பேதப்படுத்தும், மேலும் பலவீனப்படுத்தும், மேலும் இழிநிலைக்குத் தள்ளும். ஜாதியை வைத்துச் சிலர் தனிப்பட்ட சலுகைகளும், தனிப்பட்ட உரிமைகளும் கோரிய காலமெல்லாம் போய் விட்டது; இந்நாட்டிலிருந்து ஒரு வழியாகப் போயே போய் விட்டது.

"நான் பிராமணர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் தங்களுக்குத் தெரிந்ததையெல்லாம் பரிசிரமப்பட்டு இந்தியப் பொது மக்களுக்குக் கற்பித்து அவர்களை உயர்த்த வேண்டும். பல நூற்றாண்டுகளாகத் தாங்கள் திரட்டியுள்ள பண்பாட்டுச் செல்வத்தைஅவர்களுக்கு வழங்க வேண்டும். முன்பு தாங்கள் செலுத்திய விஷயத்தை இப்போது அவர்களே உறிஞ்சி எடுக்க வேண்டும்."

ஒருபுறம் மூடப் பழக்கவழக்கங்களைக் கட்டி வாழும் தீவிர சநாதனி; மறுபுறம் சீர்திருத்த வெறிபிடித்த நவயுகத்தவர் — இவர்களுக்கு இடையே மாட்டிக் கொண்டு தவித்து மதம் அவதிப்படுவதாகக் கூறிய ஸ்வாமிஜி விவேகத்துடன் மதத்தைப் புரிந்து கொண்டு அதனைப் பரப்ப வேண்டிய அவசியத்தைக் கூறினார்.

இதன்பின் அக்காலக் கல்வி முறையைப் பற்றி—இன்றளவும் அது விசேஷமாக மாறியதாகச் சொல்வதற்கில்லை. — ஸ்வாமிஜி பேசினார்: "இன்று நீங்கள் கற்கும் கல்வி மனிதனை மனிதனாக்குகிற கல்வி அல்ல. இன்று பள்ளிக்குச் செல்லும் குழந்தை முதலில் கற்பது அவனுடைய தந்தை ஒரு முட்டாள் என்பது; இரண்டாவது, அவனுடைய பாட்டனார் ஒரு பைத்தியம் என்பது; மூன்றாவதாக ஆசாரியர்களெல்லாம் வேஷதாரிகள் என்பது; நாலாவதாவது நமது புனித சாஸ்திரங்கள் எல்லாம் புளுகு மூட்டை என்பது. பதினாறு வயதுக்குள் பாலன் எதிர்மறைகளின் குவியலாகி விடுகிறான். நமக்கு வாழ்வை எழுப்பித் தருகிற, மனிதனை மனிதனாக்குகிற, நன்னடத்தையைத் தோற்றுவிக்கிற கருத்துக்களை அளிக்கும் கல்வியே வேண்டும். இது மிகப் பெரிய திட்டம்; மகத்தானதொரு திட்டம். இது காரியசாத்தியமாகுமா என்பதை நான் அறிந்தேன் இல்லை. என்றாலும் நாம் பணியைத் தொடங்கியாக வேண்டும்.

"இதற்கெல்லாம் நிதி எங்கே என நீங்கள் கேட்கக் கூடும். நிதி தேவையில்லை. நிதி என்பது ஒன்றுமேயில்லை. கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக அடுத்த வேளை உணவு

அரசியல் சோதனை

அரசியலில் ஈடுபட்டோருக்குச் சோதனைகள் பல ஏற்படுவது சகஜம். இதோ உங்கள் அயல்நாட்டு அரசியல் அறிவுக்கு ஒரு சிறிய சோதனை.

1. ஏமென் எங்கிருக்கிறது? அதனை நாலாபுறமும் சூழ்ந்துள்ளவை என்னென்ன? அங்கு யாருக்கும் யாருக்குமிடையே சண்டை நடைபெறுகிறது? ஏமென் ஜனாதிபதி யார்?

2. ஸான்ஸிபாரும் டாங்கனிகாவும் ஒரே நாடாக இணைந்துள்ளன. —செய்தி

புதிய நாட்டின் பெயர் என்ன? அதன் ஜனாதிபதி, உப ஜனாதிபதி யாவர்? ஸான்ஸிபார் என்பது எத்தனை தீவுகளை உள்ளடக்கிய தேசம்? அவற்றின் பெயர்களென்ன?

விடைகள்: 1. அராபிய தீபகற்பத்தின் தென்மேற்குக் கோடியில் உள்ளது ஏமென். இதற்கு மேற்கே செங்கடலும் வடக்கே ஸவுதி அரேபியாவும் தெற்கே ஏடனும் (பிரிட்டிஷ்) உள்ளன. கிழக்கே ஸவுதி அரேபியாவும் ஏடனுமுள்ளன. பிரிட்டிஷ் துருப்புக்களுக்கும், பத்தொன்பது மாதங்களுக்கு முன்னால் ஏமென் அரசரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு ஸ்தாபிதமான புரட்சி அரசாங்கத்தின் துருப்புக்களுக்கும் இடையில் ஏடென் – ஏமென் எல்லைப்புறத்தில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. ஏமென் ஜனாதிபதி அப்துல்லா ஸலால்.

2. புதிய நாட்டின் பெயர் "டாங்கனிகா–ஸான்ஸிபார் ஐக்கியக் குடியரசு" ஜனாதிபதி இந் நாள்வரை டாங்கனிகா குடியரசுத் தலைவராயிருந்த நயிரிரி. உப ஜனாதிபதி இந் நாள்வரை ஸான்ஸிபார் ஜனாதிபதியாக இருந்த கரூமி. ஸான்ஸிபார் என்பது ஸான்ஸிபார், பெம்பா என்ற இரண்டு தீவுகளை உள்ளடக்கிய தேசம்.



"அதோ, போகிறாரே, அவர் யார் தெரியுமா? கொஞ்ச நாளைக்கு முன்னால்தான் ரயில்வேயில் போர்ட்டராக இருந்து இப்ப எக்ஸ்போர்ட்டராக ஆகிவிட்டார்!"

"அப்படியா? எப்படி சார், அவரால் அவ்வளவு தூரம் முன்னுக்கு வர முடிந்தது?"

"அட, நீங்க ஒண்ணு! முன்னே ரயில்வேயிலே போர்ட்டராக இருந்தார். வேலை போய் விட்டது. அதனாலே அவரை எக்ஸ்-போர்ட்டர்னு சொல்றேன்!"

எங்கிருந்து வரும் என்று நான் அறிந்திருக்கவில்லை. என்ன கெட்டுப் போயிற்று? நிதியும், வேறு நாம் விரும்புகிற யாவும் வந்தே தீரும்; ஏனெனில், அவை நம் அடிமை. நாம் அவற்றின் அடிமை அல்ல. பணி புரிய வேண்டிய மனிதர்கள் எங்கே? அதுவே பிரச்னை. சென்னையின் இளைஞர்களே, உங்களிடம்தான் நம்பிக்கை வைத்திருக்கிறேன். தேசத்தின் அழைப்புக்கு நீங்கள் செவிசாய்ப்பீர்களா?"

அன்றைய சென்னை ஸ்வாமிஜியின் நம்பிக்கையைப் பொய்ப்பிக்கவில்லை.

1897-ம் ஆண்டு பிப்ரவரி 15ந் தேதி திங்கட்கிழமை. சென்னையில் ஒன்பது நாட்கள் தங்கியிருந்து ஒரு புனித நவராத்திரியை சிருஷ்டித்த ஸ்வாமிஜி அன்றோடு புண்ணிய விழாவைப் பூர்த்தி செய்தார். புறப்படத் தயாரானார்.

லோகமான்ய திலகர் ஸ்வாமிஜியைப் பூனாவுக்கு வருமாறு அழைத்திருந்தார். வேறு பல இடங்களிலிருந்தும் அழைப்புக்கள் வந்திருந்தன. என்றாலும் ஸ்வாமிஜிக்கு ஹிமாலய அமைதி தேவையாக இருந்தது. பிறந்த பொன்னாடாகிய வங்காளத்தைக் கண்டுவிட்டு மன்னும் இமயமலையை நாட எண்ணினார்.

ஸ்வாமிஜி தங்களை விட்டுப் பிரிவார் என்பதைச் சென்னைச் சீடர்களால் தாங்க முடியவில்லை. "வருத்தப்படாதீர்கள்! ஆசாரத்திலும் வித்தையிலும் ஞானத்திலும் பக்தியிலும் சிறந்த ஒருவரை உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன்" என்றார் ஸ்வாமிஜி. ஸ்ரீ ராமகிருஷ்ண தர்மத்தைப் பரப்பத் தமிழகம் வந்த அந்த உத்தமர்தான் ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தர் அவர்கள். 1897ம் ஆண்டு மார்ச் மாதம் அவர் சென்னைக்கு வந்தார். சென்னையில் ஸ்தாபிதமான ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் முதல் தலைவர் ஸ்ரீ ராமகிருஷ்ணானந்தர் அவர்கள்தாம். வரநகர மடத்தில் குருபாயிக்களுக்கெல்லாம் மாதாவாகவிருந்து, மற்றவர்கள் தியான, ஞான விசாரங்களால் பெற்ற ஆத்ம பூரணத்துவத்தைச் சேவையின் மூலமே அடைந்த அந்த மகானின் இன்னருளால்தான் இன்றும் சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் சேவையின் சிறப்புக் கோயிலாகத் திகழ்ந்து வருகிறது.

உடல் நிலை சரியில்லாத ஸ்வாமிஜி தரை மார்க்கமாகக் கல்கத்தா சென்று மக்களின் அன்புத் தொல்லைக்கு ஆளாகாமலிருக்கக் கடற் பயணத்தை மேற்கொண்டார். சென்னைத் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தார்.

ஸ்வாமிஜியை வழியனுப்ப வந்தவர்களில் ஏராளமானவர்கள் தேங்காய்களை அவருக்குச் சமர்ப்பித்தனர்; தேங்காய் வைத்துப் பூரண கும்பத்துடன் வரவேற்பதுண்டு; இங்கோ தேங்காயுடன் விடை கொடுத்தார்கள். அந்தத் தேங்காய்க் குன்றைக் கண்ட ஸ்ரீமதி ஸேவியர், "இதென்ன பிரயாணிகள் கப்பலா சரக்குக் கப்பலா?" என்று சிரித்துக்கொண்டே வினவினாள். ஸ்வாமிஜி சொன்னார்: "என் உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. நீருக்குப் பதில் இளநீர்தான் சாப்பிட வேண்டுமென வைத்தியர்கள் விதித்திருக்கிறார்கள். அதனால்தான் அன்பர்கள் தேங்காய்களைக் கொண்டுவந்து குவித்திருக்கிறார்கள்" என்றார்!


ஸ்வாமிஜியுடன் பலர் தோணிப் படகில் ஏறிக் கொண்டனர். படகு புறப்படும் வரையில் சத்தியத்தின் சாந்நித்தியத்தில் முக்குளிக்க வேண்டும் என்ற ஆர்வம்தான் காரணம். ஒவ்வொருவரிடமும் அன்பு பிழியப் பிழியப் பேசி விடைபெற்றார் ஸ்வாமிஜி. அவர்பால் தம் இதயத்தையே வைத்திருந்த ஸ்ரீ சுந்தரராமய்யர், "ஸ்வாமிஜி, இரண்டே கேள்விகள்: தாங்கள் அமெரிக்காவுக்கும் மேல்நாட்டுக்கும் புரிந்த பணியின் அளவைக் கூற முடியுமா?" என்று கேட்டார். "அதிகமாக ஒன்றும் செய்து விடவில்லை. சிற்சில இடங்களில் சில விதைகளை நட்டிருக்கிறேன். அவை காலத்தில் வளர்ந்து பெருகேனும் பலனளிக்கும் என நம்புகிறேன்" என்றார் அடக்கத்தில் உயர்ந்த ஸ்வாமிஜி.

"இரண்டாவது கேள்வி: உங்களை மீண்டும் காண்போமா? இங்கே தங்கள் பணியை எப்போது செய்யக் காண்போம்?"

"அதைப் பற்றிச் சந்தேகமே வேண்டாம். ஹிமாலயப் பகுதியில் சிறிது ஓய்வு பெறுவேன்; பிறகு நாட்டின்மேல் காட்டாற்றுப் பிரவாகமாகப் பாய்வேன்."

ஆனால் அந்தப் பிரவாகம் தன் மீது மீண்டும் பாயச் சென்னை கொடுத்து வைத்திருக்கவில்லை.

ஸ்வாமிஜியின் சிறப்பு மலர்ச்சி பெற முதற் காரணமாக இருந்த சென்னை அவருக்கு நிரந்தரமாக வழி கூறி விட்டது: அவருடைய உருவுக்குத்தான்; உபதேசத்துக்கு அல்ல. (தொடரும்)




"இந்தக் கதையில் ஏதாவது உட்கருத்தைக் கண்டு பிடிக்க முயற்சி செய்பவர்கள் மீது வழக்குத் தொடரப்படும்; இதில் ஒரு நற்போதனையைக் கண்டுபிடிக்க முயல்பவர்கள் தேசப்பிரஷ்டம் செய்யப்படுவார்கள்; இதில் ஒரு கதையம்சத்தைக் கண்டு பிடிக்க முயற்சி செய்பவர்கள் துப்பாக்கியால் சுடப்படுவார்கள்.''—'ஹக்கில்பரி பின்' என்ற தமது புத்தகத்துக்கு மார்க் ட்வெயின் எழுதியுள்ள முன்னெச்சரிக்கை!

* * *

நான்காவது நீதிக் கமிஷன் தலைவராக, பிரதம நீதிபதிகள் குடும்பத்திலிருந்தவரான,- சென்னை மாஜி பிரதம நீதிபதி டாக்டர் பி.வி. ராஜமன்னார் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவரது சகோதரியின் கணவரான கலம் சுப்பராவ், ஆந்திர ராஜ்ய நீதிமன்றத்தின் பிரதம நீதிபதியாயிருந்தவர். அவரது தந்தை ஸ்ரீ வெங்கடரமண ராவ் பழைய மைசூர் சமஸ்தானத்தில் பிரதம நீதிபதி பதவி வகித்தவர். டாக்டர் ராஜமன்னார் மகன் யாரும் பிரதம நீதிபதியாக வருவதற்கில்லை! ஏனெனில் அவரது ஒரே மகள் டாக்டராகிவிட்டாள். தந்தையைப் போன்று வெறும் சர்வ கலாசாலை கௌரவ டாக்டர் அல்ல; மருத்துவம் செய்யும், சிகிச்சை செய்யும் டாக்டர் அம்மாள்.

சில நடிகர்கள் இருபத்து நான்கு மணி நேரமும் தங்களைக் கதாநாயகர்களாகவே எண்ணி நடந்து கொள்வதுண்டு. பெரிய உத்தியோகஸ்தர்களுள்ளும் அத்தகைய சுபாவம் உள்ளவர்கள் இருக்கிறார்கள். ஆனால் ஸ்ரீ ராஜமன்னார் நீதிஸ்தலத்துக்கு வெளியே மற்ற சர்வ சாதாரண மனிதர் போலவே நடந்து கொள்வார். அவருடன் பேசும்போது நாம் ஒரு பிரதம நீதிபதியுடன் பேசிக் கொண்டிருக்கிறோம் என்று எண்ணித் தயக்கம் கொள்ளவே நமக்குத் தோன்றாது.

சங்கீதத்தைப் பற்றியும், மற்ற நுண் கலைகளைப் பற்றியும் சாஸ்திர ரீதியாக நன்கு அறிந்து கொண்டிருந்தும்கூட அவர் அவற்றை நன்றாக ரசிப்பார்! கலை சம்பந்தமான நிகழ்ச்சிகளை நீதிபதிகள் ஆரம்பித்து வைப்பதென்பது அவர் காலத்தில் ஏற்பட்டது. இப்போது வக்கீல்கள் சங்கீத சபைகளில் முக்கியத் தொடர்பு கொள்வதும், நீதிபதிகள் அவற்றின் விழாக்களிலும் கலந்து கொள்வதும் ஒரு வியாதியாகப் போய்விட்டது!



ஸ்ரீ ராஜமன்னார் ஓர் எழுத்தாளர் என்பதில்தான் எனக்கு அவரிடம் அதிக மதிப்பு. பல வருஷங்களுக்கு முன்னர் அவர் சில முதல் தரமான நாடகங்களைத் தமது தாய் மொழியான தெலுங்கில் எழுதியிருக்கிறார். அவற்றில் ஒன்று மிகவும் புரட்சிகரமானது. ஒரு ஐக்கிய குடும்பத்தில் இரண்டு சகோதரர்கள். ஒரு சகோதரன் மற்றவனது மனைவியோடு தவறான முறையில் நடந்துகொண்டு விடுகிறான். இது விஷயம் தெரிந்த அவளது கணவன் பைத்தியம் பிடித்தவன் போலாகிறான். அவன் தாய்க்கு அவன் செல்லப்பிள்ளை. அவன் மனம் வருந்துவதைக் காண அவளுக்குச் சகிக்கவில்லை. தன் அன்பு காரணமாகத் தன் பிள்ளைக்கே விஷத்தைக் கொடுத்து இறக்கச் செய்கிறாள். 'மாதர் பிரேமா' என்ற தலைப்புள்ள இந்த நாடகம் **'Mercy Killing'** என்ற கொள்கை ரகத்தைச் சேர்ந்தது. இதை அவர் எழுதிய காலத்தில் இந்தக் கொலை அம்சத்தைப் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் பலமாக நடந்து கொண்டிருந்தன.

* * *

புரட்சிகரமான கருத்துள்ள சமூக நாடகங்களை முதன் முதலாகத் துணிந்து எழுதியவர் நார்வே தேசத்து நாடகாசிரியர் ஹென்ரிக் இப்ஸென். அவர் எழுதியவற்றுள் மிகச் சிறந்ததென்று மதிக்கப்படும் 'கோஸ்ட்ஸ்' என்ற நாடகத்தைப் பல வருஷங்களுக்கு முன்னர் படித்தேன். இல்லை. படிக்கக் கேட்டேன். பரந்த இலக்கிய ஞானமுள்ளவரும், கலா ரசிகருமான ஸ்ரீ ஆர். வி. சாஸ்திரி அவர்கள் அந்த நாடகத்தை, பாவத்துடன் படித்துக் கொண்டே போவார். நண்பர்களான அமரர் கல்கியுடனும், ஸ்ரீ டி.கே.சி.யுடனும் உட்கார்ந்து அதைப் 'பாடம்' கேட்டு வந்தேன். அந்த நாடகக் கதை இதுதான்:

காப்டன் அல்விங் என்பவர் பெரிய குடிகாரர்; ஸ்திரீலோலர்; கட்டுக்கடங்காத காம இச்சை உள்ளவர். அவருடைய கெட்ட பழக்க வழக்கங்களைத் தெரிந்துகொள்ளாமலேயே ஹெலன் அவரை மணந்துகொள்கிறாள். பிறகு அவருடன் சேர்ந்து குடித்தனம் செய்ய முடியாதவளாய் வீட்டை விட்டு வெளியேறுகிறாள். ஆனால் மாண்டர்ஸ் என்ற பாதிரி அவளுக்குப் புத்திமதிகள் சொல்லி அவளைத் திரும்பவும் கணவனுடன் சேர்ந்து வாழச் செய்கிறார். சுமார் இருபது வருட காலம் பல கஷ்ட நஷ்டங்களையும் பொறுத்துக் கொண்டிருக்கிறாள். அவள் கணவன் வீட்டிலிருந்த கன்னிகையுடன் கள்ள நட்புக் கொள்கிறான். அவள் பிறகு யாரையோ கல்யாணம் செய்து கொள்கிறாள். அவளுக்கு ரெஜினா என்ற ஒரு

பெண்: அந்தப் பெண்ணை ஹெலனே வளர்த்து வருகிறாள். தன் பிள்ளை ஆஸ்வால்ட் என்பவனைப் பாரிஸுக்கு அனுப்பி அங்கே படிக்கச் செய்கிறாள். தன் கணவனது தீய பழக்கங்களின் வாசனையே அவனுக்கு அடிக்கக் கூடாது என்பதற்காக அவனை ஊருக்கு வரச் சொல்வது கூட இல்லை. கணவன் இறந்துவிடுகிறான். தூர்த்தனான தன் கணவனது சொத்தில் ஒரு தம்பிடி சேரக் கூடாது என்பதற்காகச் சொத்துக்களை எல்லாம் விற்று ஓர் அநாதை விடுதி ஸ்தாபிக்கிறாள். இதிலெல்லாம் அவளுக்கு உதவியாயிருப்பது மாண்டர்ஸ் பாதிரி. அந்த விடுதியின் திறப்பு விழா நடக்கவிருக்கும் சமயம் ஆஸ்வால்டு திரும்பி வருகிறான். அவன் ரெஜினாவைக் காதலிக்கிறான். அவள் அவனுக்குத் தங்கை முறை என்று ஹெலன் தெரிவித்தாக வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகிறது. அந்தப் பையனை பைத்தியம் பிடித்தவன் போலாய்விடுகிறான். கடைசியில் அளவுக்கு மீறிய மோர்பியா மருந்தை உட்கொண்டு விடுகிறான்.

இந்தக் கதையமைப்பில் பல புரட்சிகரமான பிரச்னைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. ஹெலன் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் பாதிரி மாண்டர்ஸ் திண்டாடிப் போகிறார். கணவன் அயோக்கிய சிகாமணியாயிருந்தாலும், மூர்க்கத்தனமாக நடந்து கொண்டாலும் மனைவி பொறுத்துக் கொண்டிருக்க வேண்டியதுதானா என்பது அவள் கேள்வி.

இந்த நாடகம் அகில இந்திய ரேடியோக்காரர்களிடம் சென்ற மாதம் 30ந் தேதியன்று அகப்பட்டுக் கொண்டது. எல்லாப் பிரதேச பாஷைகளிலும் அதை அன்றிரவு ஒலிபரப்பினார்கள். நான் திருச்சியிலிருந்து ஒலிபரப்பட்ட தமிழ் 'ஆக்க' நாடகத்தைக் கேட்டேன். தமிழில் ஆக்கியவர் ஸ்ரீ ரங்காச்சாரி. மூல நாடகம் மூன்று அங்கங்களுள்ளது. அவற்றிலுள்ள விஷயங்களை ஒரு மணி நேரத்தில் நடிக்கும்படி சாமர்த்தியமாகச் சுருக்கியிருந்தார்கள். நாடகத்தின் பெயர் 'ஆவிகள்' என்றிருப்பதால் கதை விவரம் தெரியாதவர்கள் அது ஏதோ பிசாசு சம்பந்தப்பட்டதென்று நினைத்தார்கள். அத்தகைய சந்தேகம் ஏற்படுவதற்கேற்ப நாடக ஆரம்பத்தில் வந்தவர்களும் பேசினார்கள். அந்தச் சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்துவது போன்று ஓரளவு பின்னணிச் சங்கீதமும் அமைந்திருந்தது. இவை பெயரைத் தவிர்த்திருக்கக் கூடியவை. நாடகத்தில் வரும் புரட்சிகரமான பிரச்னைகளைப் பற்றிய சம்பாஷணைகளுக்கு இன்னும் அதிகப் பிராதான்யம் கொடுத்திருக்கலாம். நடு நடுவே ஆங்கில வார்த்தைகளைப் புகுத்திப் பேசச் செய்திருந்தது நாலாந்தர அமெச்சூர் நாடகத்தை ஞாபகப்படுத்தியது. இப்ஸனது உயர்தர நாடகத்தில் இந்த ஆங்கில வார்த்தைகள் காதில் விழுந்தபோது உடலை என்னவோ செய்தது.

முக்கிய கதாபாத்திரமான மிஸஸ் ஹெலன் அல்விங்கின் பாகத்தை ஏற்று நடித்தவர், தெளிவுபட, திறம்பட, பாவத்துடன் பேசி 'நடித்தார். அவரது பெயரை ரேடியோ நிலையத்தார் ஏனோ தெரிவிக்கவில்லை. அந்த அம்மணிக்கு எனது பாராட்டுதல்கள்.

ஃ ஃ ஃ

இந்த மாதம் 7-ந்தேதியன்று வெயிலுக்குத் திடீரென்று உடல் நலம் சரியில்லாமற்போய் விட்டது. அன்று காலையில் அதன் உடலின் சூடு 100 டிகிரிதான் இருந்தது. ஆனால் உஷ்ணம் திடுதிடுவென்று ஏறிக்கொண்டே போய்ப் பகல் இரண்டு மணிக்கு 109.9 ஆகிவிட்டது.

ஜனங்கள் அனல் காற்று வீசுகிறது என்று கூறித் தவித்தார்கள். இதைக் கேட்ட டாக்டர் ஏ. கே. முகர்ஜி அவர்கள் பரிகாசச் சிரிப்புச் சிரித்தார். அவர் மீனம்பாக்கம் காலநிலை காரியாலயத்தின் அதிகாரி. "பூ...பூ! இது அனல் காற்று? அந்தப் பட்டம் பெற வேண்டுமானால் அது குறைந்தது 114.10 டிகிரி சூடுள்ளதாக இருக்க வேண்டும்!" என்றார். இப்படியாக நாம் அனல் காற்று அடிக்கிறது என்று சொல்லிப் பெருமைப்பட முடியாமற் போய் விட்டது.

அந்த வெயிலுக்கு இப்போது என்ன வந்து விட்டது என்று கேட்டபோது "ராயலசீமா பகுதியிலிருந்து வறண்ட காற்றடிக்கிறது. அதே சமயத்தில் இலங்கைக்கு அப்பாலுள்ள வங்காளக்குடாக் கடல் பகுதியிலிருந்து தென்றல் வீசவில்லை" என்று காரணம் சொன்னார். நான் வெயிலைப் பிரத்தியேகமாகப் பேட்டி கண்டு இதைப் பற்றி விசாரித்தபோது அது "விலைவாசி முந்நூறு, நானூறு சதவிகிதம் ஏறியிருக்கிறதே. நான் .5 சதவிகிதம் கூட ஏறவில்லையே!" என்று உஷ்ணமாகப் பதில் அளித்தது.



ஃ ஃ ஃ

'வண்டிப் போக்குவரத்து ஒரு வழியாகத்தான்' என்ற ஏற்பாட்டில் ஒரு நல்ல அம்சம் இருக்கிறது. மோட்டார் வண்டி ஒரு நாளும் மனிதனை நேர் எதிராக வந்து முட்டாது — பின் பக்கமாக வந்து தான் முட்டும்! **என். ஆர்.**

மெலட்டூர் பாகவத மேளா
நாட்டிய வித்யா சங்கம்

நாட்டிய - நாடகத் திருவிழா

நிகழ்ச்சி (தினசரி இரவு 9 மணிக்கு)

24 - 5 - 1964	ஞாயிறு	**பிரஹ்லாதா**
26 - 5 - 1964 27 - 5 - 1964	செவ்வாய் புதன்	**ஹரிச்சந்திரா**
28 - 5 - 1964	வியாழன்	**உஷா பரிணயம்**

மேற்படி திருவிழாவுக்கு வருபவர்களின் செளகரியத்துக்காக எல்லா நாட்களிலும் பஸ் போக்குவரத்து மற்றும் சிற்றுண்டிசாலை வசதிகள் செய்யப்பட்டுள்ளன

தங்குவதற்கான இடவசதிக்கும் இதர விவரங்களுக்கும் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

காரியதரிசி
மெலட்டூர் பாகவத மேளா நாட்டிய வித்யா சங்கம்
மெலட்டூர், தஞ்சாவூர் ஜில்லா

அல்லது

ஸ்ரீ என். ஜெயராமன்
சூபரிண்டெண்ட், "ஹிந்து", தஞ்சாவூர் (போன் : 156)

நன்கொடை அனுப்புவோர் காரியதரிசிக்கு அனுப்பி வைக்கவும்

டி. எல். வெங்கடராமய்யர்
தலைவர்

ஆர். சேதுராமன்
காரியதரிசி

இவ்விளம்பரம் பிரசுரிக்க உதவியவர்கள்
வி. டி. ஸ்வாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்

ஞாயிற்றுக் கிழமை.

நாலரை மணி.

பேபி தூங்குகிற நேரமே அலாதி. பாலைக் குடித்து விட்டு அம்மாவின் மடியிலேயே தூங்கின அவளை நாலு மணிக்குத் தூளியில் போட்டாள் அமிர்தா.

கண்ணன் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தான். வீட்டின் முன்பக்கத்துப் போர்ஷனில் குடியிருக்கும் சுமதியுடன், பெண் சரோஜா பாடம் படித்துக் கொண்டிருந்தாள். முரளி எங்கே என்று தெரியவில்லை. இந்த வீட்டுக்கு வந்து இருபது நாட்கள்கூட ஆகவில்லை. நாலு வயசில் நாற்பது பேர்கள் சிநேகமாகி விட்டார்கள். எல்லோரும் கொஞ்சுகிறார்கள். சிரிக்கச் சிரிக்கப் பேசுகிறானும். 'இதைக் கொடு, அதைக் கொடு' என்று கேட்பதில்லையாம். ரொம்பச் சமர்த்தாம்.

அமிர்தா ஒரு கணம் பெருமையில் திளைத்துப் போனாள். ஆனால் அடுத்த கணமே இருதயம் வலித்தது. அவரை அப்படியே உரித்து வைத்திருக்கிறான் முரளி.

அவர் இதுவரையில் யாரிடமும் கையேந்தி எதையும் பெற்றுக் கொண்டதில்லை. தமக்கு இல்லாததைப் பற்றிப் புழுங்கினதில்லை. எதிரியையும் நண்பனாக்கிக் கொள்ளக் கூடிய சுபாவம். பேச ஆரம்பித்தால் கேட்டுக் கொண்டேயிருக்கலாம். சிரிப்பு, வேதாந்தம், லௌகிகம் எதுவும் தண்ணீர் காட்டுவது போலத்தான்.

அவள் கண்கள் விம்மிச் சிவந்தன. வறண்டு போன கண்கள். இருதயத்தின் கொந்தளிப்பில் ஈரமாகின. அவள் தன்னையே மறந்து நின்ற வேளையில் — ''அம்மா அம்மா!'' என்று கத்திக்கொண்டே ஓடிவந்தான் முரளி.

அடுத்த கணமே அவளுடைய உற்சாகம் அணைந்தது.

''ஏம்மா, மறுபடியும் அழறே? அப்பா செத்துப் போயிட்டான்னு தானே?'' குழந்தை கல்மிஷமில்லாமல் கேட்டது.

அமிர்தா கண்களைத் துடைத்துக் கொண்டாள். 'அழலேடா கண்ணா.'

''ஏம்மா, செத்துப்போனா திரும்பி வரமாட்டானா?''

''மாட்டா.''

''திரும்பி வர முடியாதுன்னா ஏன் செத்துப் போகணும்? அப்பா ஏன் போனா?''



அவள் விழித்தாள்.

திடீரென்று முரளி. ''அம்மா! அதோ பாரு! யாரோ மாமா வந்திருக்கா!'' என்றான். அமிர்தா பார்த்தாள்.

டேவிட் நின்றுகொண்டிருந்தான்.

அந்தக் காலமானால், ''வாருங்கள்'' என்று அழைத்திருப்பாள். இப்போது வாயெழவில்லை. அவருடைய நண்பர்கள் அடிக்கடி வந்து விசாரித்துவிட்டுப் போகிறார்கள். நன்றி சொல்லக் கூடத் தெரியாமற் போய்விட்டது. உயிருக்குயிரான கணவனை இழந்து விட்டால் வெறும் மஞ்சளும் குங்குமமும்தானா போகிறது? மனிதப் பண்புகூட அல்லவா மறந்து விடுகிறது?

''மன்னிக்கணும்!'' என்று சொல்லிக் கொண்டே டேவிட் நின்றான்.

அருகே இருந்த ஒரு முக்காலியை — எடுத்து அவன் பக்கத்தே வைத்தாள்.

டேவிட் உட்கார வில்லை. அவளை ஏறிட்டுப் பார்க்க வில்லை.

''நேற்றுச் சம்பளம் கிடைத்தது...இரண்டு மாசம் முன்னால் நூற்றைம்பது ரூபாய் கடன் வாங்கியிருந்தேன்.....'' டேவிட் பாக்கெட்டிலிருந்து ஒரு கவரை எடுத்தான்.

''உங்களுக்குக் கொடுத்திருக்கிறார் என்ற விஷயமே எனக்குத் தெரியாது!''

''தெரிய நியாய மில்லைதான். அவர் கடன் கொடுத்ததும் அதை மறந்து விடக் கூடியவர். ஆனால் கடன்பட்டவன் நான்...'' டேவிட் குரல் தழுதழுத்தது.

அவன் பணத்தை முக்காலிமீது வைத்தான்.

''நான் வருகிறேன். கால தாமதத்துக்கு மன்னித்துவிடுங்கள்...'' என்று சொல்லிவிட்டு டேவிட் திரும்பி இரண்டடிகூட நடந்தான். அடுத்தகணமே மீண்டும் எதையோ நினைத்துக் கொண்டவனைப் போல,

''இன்னொரு சமாசாரம்! நாளைக்குச் சாயந்திரம் எங்கள் ஆபீஸ் அஸோஸியேஷனிலிருந்து இரண்டு மூன்று பேர் வருவார்கள்'' என்றான்.

''எதற்கு?'' வாய் இயந்திரமாகக் கேட்டது.

''உங்களைப் பார்த்து உங்களிடம்...'' அவன் முகத்தின் மாறுதலையும் விகாரத்தையும் கண்ட டேவிட்டினால் மேலே பேச முடிய வில்லை. அவன் சொல்ல நினைத்ததைச் சொல்லாமலேயே

போய்விட்டான். ஆனால் அமிர்தாவுக்கு இலேசாகப் புரிந்துவிட்டது.

காரியாலயத்திலிருந்து சம்பள பாக்கி பிரயாணப்படி, சேமிப்பு நிதி எல்லாம் வந்தாகி விட்டது. எல்லாமாக இரண்டாயிரம் கூடத் தேறவில்லை. கூட்டுறவு பாங்கியில் வாங்கியிருந்த எழுநூறு ரூபாய் கடனைத் திருப்பிக் கொடுத்தால் என்ன மிச்சம்? இந்தக் காலத்து விலைவாசிகளுக்கு எதைக் கொண்டு ஈடு செய்வாள்? இன்ஷூர் பணம் இரண்டாயிரம் வரும். எந்த மூலைக்கு? எதிர்காலம் அடிவானம் தெரியாத பாலைவனமா, சமுத்திரமா? அதன் எல்லையற்ற தூரத்தில் ஆழத்தில் அவள் எப்படிச் சமாளிப்பாள்? கண்ணன் — முரளி படிப்பு! சரோஜா — பேபியின் கலியாணங்கள் உழைக்கிற கை ஒடிந்து விட்டது. இனிமேல் அமிர்தா என்ன செய்வாள்? ஆதரிக்க அவளுக்கு அப்பா அம்மாவும் இல்லை. அண்ணன் டில்லியிலே ஏதோ சம்பாதிக்கிறான்.

என்ன துக்கம் இருந்தால் என்ன? வாழ்ந்து தான் ஆக வேண்டும். தன் துக்கத்தையும் ஆத்திரத்தையும் அவளும் பயிர்கள் மேல் கொட்டினால் அவை கருகி விடாதா?

இனி அமிர்தா என்ன செய்வாள்?

கணபதி ராமனுக்குச் சாகும் போது நானூற்றி இருபது ரூபாய் சம்பளம். பிடிப்பெல்லாம் போக மூந்நூற்றி அறுபத்திரண்டு ரூபாய் வரும். வீட்டில் குறை என்ற வார்த்தைக்கே இடமில்லை. மாதம் ஒரு சினிமாவும் வாரம் ஓர் இடமும்! வீட்டில் சதா கலகலப்பு. ரேடியோ பாட்டு. சோர்வுடன் கணபதி திரும்பினான் என்று அமிர்தா பார்த்ததில்லை.

பணம். கணபதி தான் போட்டுக் கொள்ளும் செருப்புக்குக் கூட மதிப்புக் கொடுத்திருந்தான். ஆனால் பணத்தைத் துச்சமாகத் தள்ளினான். 'பணத்தை நாம் சம்பாதிக்கிறோம்.... நாம் உபயோகப்படுத்தும் பொருள் அது' என்ற ரீதியில் பேசுவான். அவன் வேண்டியிருந்தால், காரியாலயத்தில் பணம் கொழிக்கக் கூடிய சில பகுதிகளில் புகுந்திருக்கலாம். பதினாறு வருடங்களில் எத்தனையோ தடவை வாய்ப்புக் கிட்டியது. அவன் ஒதுக்கினான். "டேய் லஞ்சம்ங்ற சாமான்னியமாடா..... கொடுக்கிறவன் தனக்குக் காரியம் ஆகணும்னு மனம் எரிஞ்சு தான் கொடுக்கிறான். அது யாரைப் பாதிக்கும் தெரியுமா? உன்னை மட்டுமல்ல.... உன் மனைவி, குழந்தைகள் எல்லாரையும்...டாக்டருக்கும் வக்கீலுக்கும் கடைசியில் ஒன்றுக்கு எட்டாய்ப் போகும்!" அவனுடைய சித்தாந்தத்தை மற்றவர்கள் நம்பினார்களோ இல்லையோ அவன் பூரணமாக நம்பினான்.

ஒரு நாள் மூன்று மணிக்கு ஆபீசிலிருந்து ஆள் வந்தது. அமிர்தா வாசலில் நின்ற டாக்ஸியில் நான்கு குழந்தைகளையும் வாரி அள்ளிக் கொண்டு ஆஸ்பத்திரியை நோக்கிப் பறந்தாள். அவள் முன் உலகம் இருண்டு சுழன்றது.

கணபதி பிரக்ஞையற்றுக் கிடந்தான். அவன் எந்தக் காரியாலயத்தில் உழைத்தானோ அதே காரியாலய வாசலில் அவன் மீது ஒரு லாரி மோதி விட்டதாம்! மண்டையில் —அது இன்னும் மண்டை தானா—பெரிய கட்டு! நாசித் துவாரம் வழியாகப் பிராண வாயு ஏறிக் கொண்டிருந்தது. பிராணன்! பிராணன்!

அமிர்தா மூர்ச்சை போட்டு விழுந்தாள். கண் திறக்கும் போது ஐந்து மணி. அவ்வளவு தான். அதற்குப் பிறகு அவள் மூர்ச்சை போடவில்லை.

இரவு ஏழரை.

பேபி எப்போதோ எழுந்தாகி விட்டது. இப்போது விளையாடிக் கொண்டிருக்கிறாள். அவள் மறுபடியும் தூங்க ஆரம்பிப்பதற்குள் பன்னிரண்டு அடித்து விடும்.

பேபி மடியில் தவழ்ந்தாள். மனம் திடீரென்று டேவிட் கொடுத்திருந்த பணத்தை நினைத்தது. அதை இன்னும் பெட்டியில் வைக்கவில்லை. அலமாரியிலே கிடந்தது.

டேவிட் உண்மையைத்தான் சொன்னாரா? கணபதி தான் தன் நண்பர்களுடன் வைத்துக் கொண்டிருந்த பணத் தொடர்புகளையெல்லாம் சொல்லுவது கிடையாது. ஆனால் அவன் அடிக்கடி மற்றவர்களுக்கெல்லாம் கடன் கொடுத்து விட்டுத் திண்டாடுவது மட்டும் தெரியும். ஒரு தடவை திடீரென்று சரோஜாவை ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டியிருந்தது. டிப்தீரியா. கையில் ஒரு ரூபாயும் எண்பது பைசாவும்தான் பாக்கி.

டாக்ஸிக்கு ஒரு ரூபாய் கொடுத்து விட்டு எண்பது பைசாவை அமிர்தாவிடம் காட்டி வெறுப்பற்ற சிரிப்பை உதிர்த்தான் அவன். நல்ல வேளையாக அவள் பணம் வைத்திருந்தாள். சின்னாளம்பட்டி புடவைக்காரனுக்குக் கொடுக்க வேண்டிய எழுபது ரூபாய்.

டேவிட் அடிக்கடி கடன் வாங்குகிறவன் தான். முன்னொரு தடவை இதே டேவிட்டுக்கு, நூறு ரூபாய் கொடுத்திருந்தார். வீட்டிலே கொடுத்தார். அவளுக்குத் தெரியும். முரளியின் ஆண்டு நிறைவு. பெரிதாகக் கொண்டாட வேண்டுமென்று அமிர்தாவின் இரண்டு வடச் சங்கிலியை அடகு வைத்து இருநூற்றைம்பது ரூபாய் கொண்டு வந்தான். அவனைத் தேடி ஏற்கனவே வந்து காத்திருந்த டேவிட் தன்னுடைய கதையைச் சொல்லி அவர் மனத்தை உருக்கி விட்டான். மனைவி பிரசவிக்கப் போகிறாளாம். குழந்தை வெளியே வரவேணுமானால் நூறு ரூபாயாவது வேண்டுமாம்.

அதைக் கொடுத்து விட்டு மீதியை அமிர்தாவிடம் கொடுத்தான் கணபதி.

"இந்த மாதிரிச் செய்கிறீர்களே......" என்று அமிர்தா முணுமுணுத்தாள்.

"அமிர்தா.... நாமும் டேவிட் நிலையில் தான் இருக்கிறோம். நாம் நகையை அடகு வைக்கிறோம். அவனிடம் அது இல்லை. நண்பன் நண்பனிடம்தான் கேட்க முடியும். பணத்தைக் கேவலமாகக் கருதாதே. ஆனால் அதே சமயத்தில் அதில்தான் எல்லாம் இருக்கிறது என்றும் நினைக்காதே."

வழக்கத்துக்கு மாறாகச் சீக்கிரமே பேபி தூங்கலானாள். மணி பதினொன்று.

அமிர்தா படுத்துக் கொண்டாள். தலை மாட்டில் கண்ணனும் சரோஜாவும் முரளியும்

இடது பக்கத்தில் பேபி. வலப்புறம்.... வலப்புறம்..... இனி என்றுமே அது நிறையாத இடம்தான். இலேசான குறட்டை ஒலி—அவள் தினம் தினம் கேட்டு மகிழ்ந்த நாதம் — இனி நினைவில்தான் எதிரொலிக்கும்.

அமிர்தா கண்ணிதழ்களை அழுத்தினாள். தேங்கிக் கிடந்த நீர் இரு கன்னங்களிலும் வழிந்தது. வெளிச்சம் திடீரென்று இருளாகி விட்டது. தழைத்த மரம் திடீரெனக் கருகி விட்டது. சீ, வாழ்க்கை என்பது இதுதானே!

திடீரென்று அமிர்தாவின் காதுகளில் கணபதியின் வேதாந்தப் பேச்சு ஒலித்தது.

போன வருஷம்தான். ஒரு நாள் மாலை வீட்டுக்கு வந்ததுமே வெளியே போனான். திரும்பி வந்த போது மணி பதினொன்று.

''கங்காதரன் இறந்துவிட்டான் அமிர்தா.. வயசு இருபத்தைந்துகூட ஆகவில்லை.....கலியாணமாகி ஆறுமாசக் குழந்தை இருக்கிறது.''

''பாவம்.''

''என்னிடம் வேலை கற்றுக் கொண்டவன்.. அவனுக்கு 'ஹார்ட் வீக்' — இது தெரிந்தும் முட்டாள்தனமாகக் கலியாணம் செய்து கொண்டு. இப்போது செத்து இரண்டு பேர்களை அநாதைகளாக்கி விட்டான் பார்!''

''விதி......''

''பிறந்தவனுக்கு வர்ற போது அது விதியாகிறது. ஆனால் அவனுக்கு.... ஒரு பிரயாணத்தின் முடிவுதான்..... இல்லை இன்னொன்றின் ஆரம்பம்......''

அமிர்தாவின் மனம் வேதாந்தச் சர்ச்சையில் ஈடுபட வில்லை. ''ஏதாவது பணம் வைத்திருக்கிறானா அவனுக்கு?'' என்றாள்.

''இந்த மாசச் சம்பளம்தான். ஆபீஸிலே ஏதோ கொடுப்பார்கள்.....''

''ஏன் நீங்களெல்லாம் சேர்ந்து ஒரு நிதி திரட்டிக் கொடுக்கக் கூடாது?''

கணபதி ஒரு நிமிடத்துக்குப் பேச வில்லை. பிறகு மெதுவாகச் சொன்னான். ''ஆயிரம் பேர் இருக்கிறோம். ஆளுக்கு ஒரு ரூபாய் போட்டாலும் ஆயிரம் ரூபாய்.... ஆனால் அது இரக்கத்தின், அனுதாபத்தின் அடிப்படையில் எழுந்த பணம். அதற்கு இந்தப் பெண் மட்டுமா இரையாகிறாள்? அவனுடைய ஆத்மா கூட இரையாகிறது. ஒருவன் இறந்த போது சடங்குகளுக்குப் பணம் இல்லை என்றால் அது வேறு விஷயம்.... வாழ்க்கையை வாழ்வதற்கே, இல்லை அதை நடத்துவதற்கே பணத்தைக் கொடுப்பது என்னைப் பொறுத்தவரை இறந்தவனை அவமானப்படுத்துவதாகும்.''

ஐந்து மணிக்கு அவர்கள் வந்தார்கள். உட்கார்த்தி வைக்க இடமில்லை. அவர்கள் பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்று தெரியாமல் தவிக்கையில் அமிர்தாவே பேசினாள்.

''நேற்று டேவிட் சொன்னார், நீங்கள் இன்று வருவீர்கள் என்று.''

''நாங்கள் எங்கள் அஸோஸியேஷனில் கூட்டம் போட்டு எங்கள் துக்கத்தைத் தெரிவித்தோம்..... கணபதிராமன் வெறும் சிப்பந்தி அல்ல.... எங்களுடன் பிறக்காத சகோதரன்......'' என்றார் ஒருவர்.

அமிர்தாவின் கண்கள் வறண்டு கிடந்தன.

''அதன் பிறகு ஒரு தீர்மானம் கொண்டு வந்தோம். அவர் இருக்கும் போது தாராளமாகச் செலவு செய்தார். அதிகம் சேமிக்கவில்லை. கூட்டுறவு பாங்கியில் வேறு கடன்..''

ஒவ்வொரு வார்த்தையும் சாட்டையால் குத்தியது. அமிர்தா துவண்டாள். செத்தவனுடைய வாழ்க்கையை — அவள் யாருடன் அந்த வாழ்க்கையின் ஒரு பாதியை அனுபவித்தாளோ — அந்த வாழ்க்கையைப் போட்டோ பிடித்தா காட்டுகிறார்கள்?

அமிர்தா என்னென்னவோ பேச நினைத்தாள். ஆனால் ஒன்றும் வரவில்லை.

''அவர் தம் நண்பர்களுக்கு எத்தனையோ உதவிகள்......''

இப்போது எண்ணங்கள் உதடுகளில் தவித்தன. நா புரண்டது.

''அதற்குக் கைம்மாறு செய்ய வந்திருக்கிறீர்கள்!'' வார்த்தை வெடித்தது.

''ஆமாம்.... ஒன்பதாயிரம் வசூல் ஆகி விட்டது. முந்தாநாள் சம்பளப் பட்டுவாடா ஆனதுமே......''

''உங்கள் இரக்கத்துக்கு நன்றி...'' அவளுடைய குரலிலும் வார்த்தைகளின் அழுத்தத்திலும் வந்தவர்கள் அசந்து போனார்கள்.

''எங்கள் கடமை..... நாங்கள் காட்ட வேண்டிய நன்றி.....''

''அவர் எதையும் எதிர்பார்த்து உதவி செய்ய வில்லை.....''

பேபி திடீரென அழுவது கேட்கவே அமிர்தா தூளியண்டை போய் எடுத்தாள்.

பேபியுடன் வந்த அமிர்தா சொன்னாள்:

''இப்போது எங்களுக்கு வந்து விட்ட தரித்திரத்தை இந்த நிதி — இந்த ஒன்பதாயிரம் ரூபாய் கொஞ்ச அளவுக்கு அகற்றலாம். ஆனால் வாழ்க்கையை ஓட்ட அதைப் பயன்படுத்தினால் அவருடைய நினைவுக்கே ஆத்மாவுக்கே இழிவு..... மேலும் அவருக்கு இதிலெல்லாம் நம்பிக்கையில்லை.....''

''நீங்கள் எப்படியாவது.....''

அமிர்தா அவர்களைக் கவனிக்கவில்லை.

''கங்காதரன் இறந்து போன போது நிதி திரட்டினீர்கள் இல்லையா?''

''ஆமாம்..... மூவாயிரத்து சொச்சம்...''

''பணம் அளித்த பட்டியலைப் பாருங்கள்... என் கணவர் பெயர் இருக்காது..... ஏன் தெரியுமா? அன்றாடத் தேவைக் கஷ்டங்களுக்குக் கடன் அளிக்கலாம்..... வாழ்க்கையை வாழ யாரும் மூலதனம் கொடுக்கக் கூடாது என்பது அவர் சித்தாந்தம்.....''

''அப்போது.....''

''இந்த நாலு பேரை நான் எப்படியோ உழைத்துச் சம்பாதித்து வளர்த்து விடுவேன். போகக் கூடாத நிதி போன பிறகு இந்த நிதியெல்லாம்......'' பேசும் போது அவன் உடலெங்கும் அவன் வியாபித்திருப்பதை அவள் உணர்ந்தாள்......அவன்தான் அவள் நாவில் அமர்ந்து பேசுகிறான் என்ற உணர்வு மேலிட்டது.

''உங்கள் மனசைப் புண்படுத்தியதற்கு எங்களை மன்னியுங்கள்'' என்றார் மூவரில் ஒருவர். அமிர்தாவின் காதுகளில் அவை விழுந்தனவோ, இல்லையோ! சிலையாகி நின்றாள்.

வழக்கறிஞர் வரிசை

ஜீன் சிம்மன்ஸ் என்ற ஆங்கிலத் திரை ஹாலிவுட் திரைப்பட நடிகையை நேரில் பார்த்து வண்ண ஓவியம் தீட்ட ஒரு பாரிஸ் ஓவியர் வந்து சேர்ந்தார். நடிகை முன் நின்று ஓவியத்தில் ஈடுபட்டார். ஆனால் அந்த நடிகையின் முக பாவத்தை ஒரே சித்திரத்தில் வெளிப்படுத்த இயலாமல் தவித்தார். கடைசியில் அவர் வரைந்தது இரண்டு ஓவியங்கள். ஒன்றில் முதிர்ந்த அநுபவமுள்ள கலைத்திறமை மிகுந்த நடிகையின் முக பாவத்தையும் மற்றொன்றில், குறுகுறுப்பு நிறைந்த பார்வையும் துள்ளலும் நிறைந்த இளம் யுவதியின் முக பாவத்தையும் தீட்டி 'ஒரே ஓவியத்தின் இரு எல்லைகள்' என்று சொல்லி விட்டார்.

அந்த ஓவியர் மாதிரி ஒருவர், காலம் சென்ற வழக்கறிஞ மேதை எஸ். சீனிவாசய்யங்காரைப் பார்த்து ஓவியம் தீட்ட முனைந்திருப்பாரானால், அவரும் இரண்டு ஓவியங்களாகவே தீட்டியிருப்பார். ஒன்றில் ஆழமும் அமைதியும், தீட்சண்யமும் நிறைந்த வழக்கறிஞர் முகத்தையும் மற்றொன்றில் ஆவேசமும், வேகமும் வீரமும் நிறைந்த அரசியல்வாதியின் முகத்தையும் கண்டிருக்கலாம் நாம்!

1898ம் ஆண்டில் தொழிலில் புகுந்த திரு ஐயங்கார் 1916ம் ஆண்டில் அட்வகேட் ஜெனரலாக நியமிக்கப்பட்டபோது அவருக்கு வயது நாற்பத்தி ஒன்று. அத்தனை இளம் வயதில் அந்தப் பதவியை ஏற்றுக் கொண்ட முதல் நபர் அவர்தான்.

அதேபோல் 1920ம் ஆண்டில் அந்தப் பதவியை உதறித் தள்ளிவிட்டுத் தீவிர அரசியல்வாதியாக மாறிக் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்த போது, ஐந்தாறு வருடங்களுக்குள்ளாகவே அதீத செல்வாக்குப் பெற்று 1926ம் ஆண்டில் கௌஹாத்தி காங்கிரஸ் மகாநாட்டுத் தலைவராகவே தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆனால் பத்தே ஆண்டு காலத்தில், போட்டி, பொறாமை, துவேஷ மனப்பான்மை ஆகியவற்றின் வளர்ச்சியைக் கண்டு மனம் குமுறி, அரசியலிலிருந்து துறவறம் பெற்று 'மீண்டும் பூர்வாசிரமமாகிய வழக்கறிஞர் தொழிலுக்கே வந்து சேர்ந்தார்.

ஆரம்பகாலக் கல்லூரிப் படிப்பை மதுரைக் கல்லூரியில் முடித்துக் கொண்ட இவர், பி.ஏ. படிப்புக்காகச் சென்னை மாநிலக் கல்லூரிக்கு வந்து விட்டார். சென்னைக்கு வந்த வேகத்திலேயே, அந்தக் காலத்தில் பிரபல உயர் நீதி மன்ற வழக்கறிஞராக இருந்த சர். வி. பாஷ்யம் ஐயங்காரின் மாப்பிள்ளையாகும் வாய்ப்பும் கிட்டியது.

திரு சீனிவாசய்யங்காருக்கு முதலில் சீமைக்குப் போய்ப் படித்து ஐ. ஸி. எஸ். பட்டம் வாங்க வேண்டுமென்று ஆசை. ஆனால் அதற்கு அவருடைய தகப்பனார் அனுமதி கொடுக்க வில்லையாம். 'கடல் கடந்து' போவது ஆசாரக் குறைவு என்று கருதப்பட்ட காலம்.

பி.எல். படிப்பை முடித்துப் பட்டம் பெற்ற சீனிவாசனுக்குக் கருப்புக் கோட்டு மாட்டிக் கொண்டு வழக்கறிஞராகப் போவதில் ஆர்வம் இல்லை. மைசூர் சிவில் சர்விஸில் சேரலாம் என்று விரும்பினாராம். ஆனால் அவர் தந்தை யாரோ, தம் மகன் அவன் மாமனாரைப்போல் புகழ் வாய்ந்த வக்கீலாக வருவதைத்தான் விரும்பினார். அவர் விருப்பம்தான் நிறைவேறியது. அதன்படியே சர் பாஷ்யம் ஐயங்காரிடம் ஜூனியராகப் பணியாற்றத் தொடங்கினார். அப்போது பாஷ்யம் ஐயங்காரிடம் வேறு சில அறிவுக் கூர்மையுள்ள இளம் வழக்கறிஞர்களும் தொழில் கற்றுக் கொள்ள வந்திருந்தனர். அந்தச் சூழ்நிலை திரு சீனிவாசய்யங்காரின் திறமையை வளர்க்க பெருவாக உதவியது. சில ஆண்டுகளில் தனியாகவே தொழில் நடத்தத் தொடங்கினார். சில சமயம் காலம் சென்ற திரு வி. கிருஷ்ணசாமி ஐயருடன் சேர்ந்தும் தொழில் நடத்தினார்.

அந்தக் காலத்தில் அவருக்கு மிகவும் பிடித்தமான பொழுதுபோக்கு ஆப்த நண்பர்களுடன் சீட்டாடுவது, மைலாப்பூர் கிளப்பில் மாலை நேரங்களில் பிலியர்ட்ஸ் என்ற ஒருவித தன்னுபந்து விளையாடுவது. இளமையில் இவருக்குச் சைக்கிள் ஓட்டுவதிலும் குதிரை சவாரி செய்வதிலும் உற்சாகம் அதிகமாம். ஆனால் சைக்கிளும் குதிரையும், பேசி வைத்துக் கொண்டு சதி செய்தது போல் அவரைத்



திரு எஸ். சீனிவாசய்யங்கார்

தனித் தனியாகக் கீழே தள்ளிக் காயப்படுத்தி யதிலிருந்து அவர் அந்தச் சவாரி ஆசையைத் தியாகம் பண்ணி விட்டாராம்.

ஹோம்ரூல் கிளர்ச்சியை ஆரம்பித்துப் புகழ்பெற்ற அன்னிபெசன்ட் அம்மையாருக்கு எதிராகச் சர்க்கார் வழக்குத் தொடர்ந்த காலத்தில் சர்க்கார் சார்பில் வழக்காட வேண்டிய பொறுப்பு சீனிவாசய்யங்காரிடம் வந்து சேர்ந்தது. அட்வகேட் ஜெனரலாகப் பதவி வகித்த காலம் அது. ஒருநாள் இரவு பகலாகச் சாப்பாடு காப்பிகூட இல்லாமல் வெறும் சீவலை மென்று கொண்டு கோர்ட்டில் வாதாடுவதற்கான சட்ட பாயிண்டுகளைச் சேர்த்தாராம். ஆனால் கடைசியில் சர்க்காருக்கு அறிவித்துவிட்டு, அன்னிபெசன்ட் அம்மையாரின் இயக்கத்தில் சட்ட பூர்வமான தவறு ஒன்றும் இல்லை என்பதையும் சொல்லி விட்டாராம்.

'வக்கீல்கள் மகாநாடு' என்ற யோசனைக்கு முதல் வித்து இட்டவர் இவர்தான். 1920ம் ஆண்டில் சென்னை குஷால்தாஸ் தோட்டத்தில் நடந்த முதல் வக்கீல்கள் மகாநாட்டில் மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்து வந்து குழுமியிருந்த வழக்கறிஞர்கள் முன்னிலையில் நின்று தலைமை உரை நிகழ்த்தும் வாய்ப்பும் இவருக்கே கிட்டியது.

சீனிவாசய்யங்காருக்குத் தமிழிலும் சம்ஸ்கிருதத்திலும் நல்ல பரிச்சயம் இருந்தது. வடமொழியில் அவருக்கு நல்ல கவனம் இருந்ததால், விசேஷ நாட்களில் புரோகிதர்கள் அவர் காது கேட்க மந்திரங்களை உச்சரிக்க அஞ்சுவார்கள். ஏனென்றால் அவர்கள் தப்பிதமாக உச்சரித்தால் ஐயங்கார் பாய்ந்து எழுந்து சண்டைக்குப் போய் விடுவார்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப கால நாகரிகத்தை ஒட்டி அவருக்கும் ஃபிரெஞ்சுப் பாஷை ஆர்வம் தோன்றியது. ஓர் ஆசானைப் பிடித்து அந்தப் பாஷையைக் கற்றுக்கொள்ள முயற்சி செய்தார். பாஷை வந்ததோ என்னவோ? ஒரு பீரோ நிறைய பிரெஞ்சுப் புத்தகங்கள் வீட்டில் சேர்ந்து விட்டன:

இவரிடம் ஜூனியர்களாகத் தொழில் பயில வந்தவர்களில் திரு கே. ராஜா ஐயர், கே. பாஷ்யம், எஸ். துரைசாமி ஐயர் முதலியவர்களைக் குறிப்பிடலாம். திரு ராஜா ஐயர் தம் குருநாதர் போல் சில காலம் அட்வகேட் ஜெனரல் பதவி வகித்து விட்டு, இன்றும் சென்னை உயர்நீதி மன்றத்தின் சீனியர் அட்வொகேட்டுகளில் ஒருவராகத் தொழில் நடத்திக் கொண்டிருக்கிறார்.

திரு கே. பாஷ்யத்தின் மீது அவர் குருநாதரின் அரசியல் காற்று அடித்தது. தொழிலில் பிரபலமடைந்திருந்த காலத்திலேயே பொது வாழ்வில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டார். அவர் சென்னை அரசாங்க மந்திரியாக இருந்த போதுதான், நிர்வாகத் துறையிலிருந்து நீதித் துறையைப் பிரிக்கும் பணியை மேற்கொண்டார்.

திரு எஸ். துரைசாமி ஐயரோ தொழிலின் உச்ச நிலையில் இருக்கும்போது அதை விட்டு விட்டு அரவிந்தாசிரமவாசியாகி விட்டார்.

போதிய வலு இல்லாத கேஸ்களை சீனிவாசய்யங்கார் எடுத்து நடத்தத் திட்டவட்டமாக மறுத்து விடுவார். தோல்வியை முன்எச்சரிக்கையாகத் தவிர்ப்பதில் அக்கறை காட்டுவார். ஒரு சமயம் மாத்திரம் அவர் பிடிவாதத்தை ஒரு கட்சிக்காரர் தகர்த்து விட்டார். அவர் வெளியூர்க்காரர். வக்கீலோ அவர் கொண்டு வந்த வழக்கில் சாட்சியம் போதாதென்று எடுத்து நடத்த மறுத்தார். கட்சிக்காரர், வழக்கை அவர் எடுத்து நடத்தாவிட்டால் தம் வாழ்க்கையை முடித்துக் கொள்ளக் கடலில் போய் இறங்கி விடுவதாகப் பயமுறுத்தினார். கடைசியில் வக்கீல் வேறு வழியில்லை என்று கேசை எடுத்து நடத்தினார். எதிர்பார்த்தது போல் கேஸ் தோல்வியடைந்தது என்றாலும் ஓர் உயிர் பிழைத்ததே!

ஆங்கில நவீனங்கள் படிப்பதில் அவருக்கு அலாதி ஆர்வம். கண் பார்வையில் பழுது ஏற்பட்ட பிறகுகூடக் கண்களுக்கு மூன்றங்குல தூரத்தில் புத்தகங்களை வைத்துக் கொண்டு விடாப்பிடியாகப் படிப்பார். அதிகமாக நடமாட முடியாத நிலைமையிலிருந்த போதுகூடத் தம்மிடம் அபிப்பிராயம் கேட்டு வரும் வழக்கறிஞ நண்பர்களுக்கு உற்சாகத்துடன் யோசனைகள் சொல்லுவார்.

பீஸ் வாங்கும் விஷயத்தில் மிகவும் கண்டிப்பாகவே இருப்பார். ஆனால் பண வசதி இல்லாதவர்களிடம் பீசை வற்புறுத்தியே கேட்க மாட்டாராம்.

இவர் வெளியூர் முகாம் புறப்பட்டால் அவர் கூடவே சமையற்காரன், அடுப்பு, அரிசி, பருப்பு எல்லாம் கிளம்பியாக வேண்டும். ஹோட்டலிலிருந்து வரவழைக்கப் பட்ட காப்பி, டிபன், சாப்பாடு முதலியவை இவருக்குப் பிடிக்காது.

இவர் கணிசமான நன்கொடைகளை வாரி வழங்கியிருக்கிறார். சென்னை சர்வகலா சாலைக்கு ஒரு பத்தாயிரம், கதர்ப் பிரசாரத்துக்காகப் பத்தாயிரம் என்று வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியாத வகையில் கொடுத்திருக்கிறார்.

அரசியலிலும், தொழிலிலும் காண்பித்த தீவிரத்தை அவர் சமூகப் புனருத்தாரணத் திசையிலும் காண்பித்தார். 'சகோத்திர விவாக'த்தை ஆதரித்துச் சட்டங்கள் இயற்றப் பட வேண்டுமென்றும், பல ஜாதிகளிடையே கலப்பு விவாகமும் இதே மாதிரி சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், பொது மேடையில் அந்த நாளிலேயே துணிந்து கர்ஜிக்கத் தொடங்கினார்.


கோடை நாட்களில் கோடைக்கானல் மலையிலுள்ள தம் வாசஸ்தலத்தில் போய்த் தங்குவது இவருக்கு மிகவும் பிடித்தமான விஷயங்களில் ஒன்று. 1941ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கோடைக்கானலுக்குப் போனவர் ஜுரத்தால் படுத்து விட்டார். தகவல்கிடைத்தவுடன் அவர் குமாரி அம்புஜம்மாள் போய்த் தந்தையாரைச் சென்னைக்கு அழைத்து வந்தார். ஆனால் சென்னைக்கு வந்த சில நாட்களுக்குள்ளேயே காலன் அவரை அழைத்துக் கொண்டு போய் விட்டான்.

சீனிவாசய்யங்கார் மறைவினால் வழக்கறிஞர் துறையில் ஏற்பட்ட சூன்யம் இன்றுவரை இட்டு நிரப்பப்படாமலே இருந்து வருகிறது:

— கோமதி சுவாமிநாதன்



சூடாக ஒரு கப் தேயிலை
அருந்தியபின் ஏற்படும்
புது மலர்ச்சியே அலாதிதான்!



நீங்களே ஒப்புக்கொள்வீர்கள்

டாடா-ஃபின்லே

தேயிலை

ஈடில்லாத தேயிலை!

புத்தம் புது தேயிலை

•

சுவையுள்ள தேயிலை

•


சிறந்த தேயிலை

பின்வரும் ஐந்து ரகங்களில் கிடைக்கிறது:
பிரெஸ்டிஜ் டார்ஜிலிங்-டின்னில்
லயித் பொன்னிற அட்டைப் பெட்டியில்
மிலாப் வெள்ளிநிற அட்டைப் பெட்டியில்
பஹாதுர் ஆரஞ்சு நிற அட்டைப் பெட்டியில்
ஷான் சிவந்த அட்டைப்பெட்டியில்




டாடா-ஃபின்லே தேயிலை பருகுவீர்;
உள்ளத் தேயிலை இன்பம் எய்துவீர்!

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் பயண உண்டியல்களுடன் பத்திரமாயும், கவலையின்றியும் பிரயாணம் செய்யுங்கள்



ரூ. 100 மற்றும்
ரூ. 50 இனங்களில் கிடைக்கும்.



அவர் வியாபாரமும், உல்லாசமும கலந்த பிரயாணம் ஒன்றுக்குக் கிளம்பத் தயாராயிருக்கிறார். எச்சமயத்திலும், எவ்விடத்திலும் ரொக்கப் பணமாக மாற்றிக்கொள்ளக்கூடிய ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் பயண உண்டியல்களை அவர் தன்னுடன் எடுத்துச் செல்லுகிறபடியால் கவலையின்றி இருக்கிறார்.

நீங்கள் வியாபாரத்திற்காகவோ அல்லது உல்லாசத்திற்காகவோ அடுத்த தடவை பிரயாணம் செய்யும்பொழுது, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் பயண உண்டியல்களை உங்களுடன் எடுத்துச் செல்ல நினைவு வைத்துக்கொள்ளுங்கள்.

அவற்றை பாங்கின் 1076 க்கு மேற்பட்ட அலுவலகங்கள் எந்த ஒன்றிலோ, அதன் துணை பாங்குகளின் 563 க்கு மேற்பட்ட அலுவலகங்கள் எந்த ஒன்றிலோ, மற்றும் உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும், தேசமெங்கிலுமுள்ள தலைசிறந்த ஹோட்டல்களிலும் இருக்கும் பாங்கினுடைய பிரதிநிதிகள் மூலமாகவோ ரொக்கப் பணமாக மாற்றிக்கொள்ளலாம்.



ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா

இந்தியாவின் தலைசிறந்த பாங்க்.



குண்டு மல்லிகை

அரு. ராமநாதன்

வசந்தியின் முகம் குபீரெனச் சிவந்தது. ஆத்திரத்தால் உதடுகள் படபடக்க அவள் ஜகந்நாதனை எரித்துவிடுவது போல் உற்றுப் பார்த்தாள்.

''வசந்தி! உன் மனத்தில் உள்ள தந்திரத்தை நான் புரிந்து கொண்டுவிட்டேனென்று கோபப்படுகிறாயா? அல்லது பெண்களின் சார்பாக எதிர்முழக்கமிடப் போகிறாயா?''

''பெண்களை யெல்லாம் சூர்ப்பனகை என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா ஸார்?'' என்று வசந்தி சீறினாள்.

''சூர்ப்பனகையாவது ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியிடம் தன் காதலை நேரிடையாகவே சொல்லி அதற்காக வியாபார ரீதியில் பேரம் பேசித் தர்க்கமும் செய்தாள்! அது குற்றமென்றால் அந்தக் குற்றத்தின் பொறுப்பை யெல்லாம் தானே ஏற்றுக்கொள்ளவும் முன்நின்றாள். ஆனால் இந்தக் காலத்துப் பெண்களோ தங்கள் நடையுடை பாவனைகளாலேயே மறைமுகமாக மோகனாஸ்திரங்களை எய்து ஆண் தன் விஷயத்தில் தவறு இழைக்கும்படி தூண்டி விட்டு விட்டு அதன் பிறகு அக்குற்றத்தின் பொறுப்பையெல்லாம் அந்த ஆண் மீதே சுமத்திவிட முயல்கிறார்கள்!'' என்று ஜகந்நாதன் சிரித்துக் கொண்டே சொன்னார்.

வசந்தி கோபத்தால் என்னவெல்லாமோ சொல்ல வேண்டுமெனக் குமுறினாள். ஆனால் அவள் உதடுகள் துடித்தனவே தவிர வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வரவில்லை.

''வசந்தி! நீ என்னோடு மகாபலிபுரம் புறப்பட்டு வரும் போது உன் மனத்தில் என்ன திட்டத்தோடு வந்

திருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும்!'' என்று ஜகந்நாதன் கண்ணைச் சிமிட்டிக் கொண்டே சொன்னார்.

''என்ன திட்டத்தோடு வந்திருக்கிறேன் ஸார் ?'' என்று வசந்தி வெடுக்கெனக் கேட்டாள்.

''உன்னை நான் காதலிக்கும்படி செய்துவிட வேண்டும் என்பதுதான் உன் திட்டம்!''

வசந்தி தன் கருவிழிகளில் தீப்பொறி பறக்க ஜகந்நாதனைப் பொசுக்கி விடுவது போல உர்ரென்று பார்த்தாள்.

ஜகந்நாதனோ வெகு அமைதியாக அதே குரலில், ''என் கண்களைக் கவர்ந்திழுக்க வேண்டும் என்பதற்காகவே உன் ஆடையலங்காரங்களில் விசேஷ கவனம் செலுத்தியிருக்கிறாய்! உன் கூந்தல் மீது நான் பொறாமைப் படவேண்டும் என்றே உன் கூந்தல் கற்றைகளில் ஒன்றை உன் கன்னத்தை நோக்கி விளையாட விட்டிருக்கிறாய்! என் காதுகளில் கந்தர்வ கானம் மீட்ட வேண்டும் என்பதற்காகவே உன் கைவளையல்களை அடிக்கடி குலுக்குகிறாய்! என் மனத்தைக் குழப்ப வேண்டும் என்பதற்காகவே என் அருகில் நீ உட்கார்ந்திருக்கவே கூச்சப்பட்டவள் போல் இன்னும் அதிகமாக நெருங்கி நெருங்கி உட்காருகிறாய்! நான் ஏங்கிப் பெருமூச்சு விட வேண்டுமென்பதற்காகவே நீ குலுங்கிக் குலுங்கி ஆடுகிறாய்! உன் இரட்டைப் பின்னல்களுள் ஒன்றை நான் பிடித்திழுக்க வேண்டுமென்பதற்காகவே ஒரு சமயம் ஒரு பின்னல் என் மீது படும்படி சட்டென்று திரும்பினாய்! அப்போது அந்தப் பின்னலை நான் பிடித்திழுத்திருந்தாலோ நீ பெரிதாகச் சண்டைக்குவந்து அழகான ஒரு நாடகமே ஆடியிருப்பாய்! அந்தப் பின்னலே எனக்குக் கட்டுத்தளையாகவும் மாறியிருக்கும்!'' என்று அடுக்கிக் கொண்டே போனார்.

வசந்தியால் பொறுக்கமுடியவில்லை. ''காரை நிறுத்துங்கள் ஸார்!'' என்று வீறிட்டுக் கத்தினாள்.

டாக்டர் ஜகந்நாதன் தம் காரை இன்னும் வேகமாக ஓட்டிச் சென்றாரே தவிர அதை நிறுத்த வில்லை.

''ஸார்! காரை நிறுத்தப் போகிறீர்களா, இல்லை நான் கீழே குதித்து விடட்டுமா?'' என்று வசந்தி மீண்டும் கூவியபடி துள்ளியெழ முயன்றாள்.

''ஏன் காரை நிறுத்தச்சொல்கிறாய்?''

''காரைச் சென்னைக்கே திருப்பி ஓட்டுங்கள். நாம் நாவலும் எழுத வேண்டாம், கிவலும் எழுத வேண்டாம் !'' என்று வசந்தி கத்தினாள்.

''ஏன் இந்தத் திடீர் மாற்றம்?''

''பின்னே என்ன ஸார்! உங்களை ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியாகவும் நான் உங்களை மயக்க வந்த சூர்ப்பனகையாகவும் நினைத்துக் கொண்டு ஏதேதோ வர்ணித்துக் கொண்டே போகிறீர்களே! இதையெல்லாம் எந்தப் பெண்தான் சகிப்பாள் ?''

ஜகந்நாதன் கலகல வென்று வாய் விட்டுச் சிரித்தார்.

''வசந்தி! அறிவாளியை மயக்கி உன்னைக் காதலிக்கும்படி செய்து கடைசியில் அந்த அறிவாளியை அழ வைத்து வேடிக்கை பார்க்க வேண்டுமென்று நீ ஒரு சித்தாந்தம் வைத்திருக்கிறாயே, அதற்கு என்னை உரைகல்லாக்கப் பார்க்கிறாயோ என்று நினைத்துத்தான் அப்படியெல்லாம் பேசினேன்!'' என்று ஜகந்நாதன் வெகு அமைதியாகச் சொல்லி விட்டுக் காரை ஒரு கையால் ஓட்டியபடியே இன்னொரு கையை நீட்டி வசந்தியின் தோளைப் பற்றி அழுத்தி அவளைச் சீட்டிலேயே அமர வைத்தார்.

அந்த ஸ்பரிசத்திலுள்ள ஏதோ ஒரு காந்த சக்தி அவளுடைய உடலெங்கும் வியாபித்து அவளுடைய உள்ளத்து உணர்ச்சிகளையெல்லாம் வேரோடு கவர்ந்திழுப்பது போல் இருந்தது.

அவள் ஜகந்நாதனை ஏறிட்டுப் பார்த்தாள். அவளையறியாமல் அவளுடைய கண்களில் நீர் துளிக்க முயன்றது.

''ஸார்! உங்களுடைய இந்தக் கேள்விக்கு முன்பே நான் பதில் சொல்லி விட்டேன். எந்தப் பெண்ணையுமே காதலிப்பதில்லை என்ற வைராக்கியம் கொண்டிருக்கும் அறிவாளியைக் கூட என் மீது காதல் கொள்ளும்படி செய்து கடைசியில் அவரை அழ வைத்து வேடிக்கை பார்க்க என்னால் முடியும் என்று நான் நினைத்தது உண்மைதான்! ஆனால் முன்பு ஏதோ அப்படி விளையாட்டாக நினைத்தேனே தவிர அதை நான் ஸீரியஸாக எடுத்துக் கொள்ள வில்லை!'' என்றாள் வசந்தி. அவளுடைய உள்ளம் உண்மையிலேயே ஜகந்நாதனைக் காதலிக்கிறது என்பதைச் சொல்லிவிட வேண்டும் என்று அவளுடைய இளம் உதடுகள் துடித்தன. ஆனால் அதற்காக இன்னொரு புறம் தன் மீதே அவளுக்குக் கோபம் கோபமாகவும் வந்தது.

''என்னோடு பழக ஆரம்பித்ததும் உன்னுடைய கொள்கைகளை யெல்லாம் மாற்றிக் கொண்டு விட்டாயா? காதலை வெறும் கண் பொத்தி விளையாட்டாகக் கருதாமல் இப்போது ஸீரியஸாகக்கருது

நீண்ட கால அனுபவத்தினல் தயாரிக்கப்பட்டது...

TRAYONS

ட்ரேயான்ஸ் ரேயான் நூல்கள்

இந்தியாவில் முதல் முதலாக சிறந்த ரசாயன முறையில் தயாரிக்கப்பட்ட உன்னத நூல் "ட்ரேயான்ஸ்" ரேயான் நூல்கள் விலை மலிவு, நீண்ட கால உழைப்பு, பகட்டான உடைகளுக்கு ஏற்றது.

"ட்ரேயான்ஸ்" ரேயான் நூல்கள்
100, 120, 150, 300 டினையர்களில்
தயாரிக்கப்படுகின்றன.

ஸ்டாக்கிஸ்டுகள்

ரேயான் டிரேடர்ஸ் பிரைவேட் லிமிடெட்

61 செம்புதாஸ் தெரு சென்னை 1
போன் 21641 தந்தி CELYARN

கிளைகள்

68/416 மெயின் ரோடு செவ்வாய்பேட்டை சேலம்
போன் 3253 தந்தி CELYARN

114/A தெற்கு மாசி வீதி மதுரை
போன் 2598 தந்தி CELYARN

இந்தியா லைப் பில்டிங் திருச்சிரோடு கோயமுத்தூர்
போன் 4425 தந்தி RAYONS

கிறாயா?'' என்று ஜகந்நாதன் விஷமப் புன்முறுவலுடன் கேட்டார்.

ஆமாம் என்பது போல் வசந்தி மௌனம் சாதித்தாள்.

''ஆனால் வசந்தி, வாழ்க்கையில் எதையும் ஸீரியஸாக எடுத்துக் கொள்ளக் கூடாது! எதையுமே லேசாகத்தான் பாவிக்க வேண்டும்! அப்போது தான் வாழ்க்கை பாரமற்றதாக இருக்கும்! எந்தச் சமயத்திலும் எதற்கும் கவலையென்பதே ஏற்படாமல் மனிதன் எப்போதும் நிதானமாக இருக்க முடியும்! எனக்குத் தெரிந்த அரசியல் கிழவர் ஒருவர் இருக்கிறார். அவர் சிறந்த ஆத்ம ஞானியுங்கூட! அவரோடு ஐம்பது வருஷங்கள் வாழ்ந்து வாழ்க்கையின் கஷ்ட நஷ்டங்களையெல்லாம் பகிர்ந்து கொண்டு அவருடைய உள்ளத்தின் நிழல் போலவே விளங்கிய அருமை மனைவி ஒரு நாள் இறந்து போனாள். அப்போது கூட அவர் ஒரு சொட்டுக் கண்ணீர் விடவில்லை. நானும் அப்படித்தான்! என்னை அருமையாக வளர்த்து ஆளாக்கிய என் அம்மா இறந்த போதுகூட நான் அழவில்லை. ஒப்புக்காகவேனும் ஒரு சொட்டுக் கண்ணீர்கூட என்னால் விட முடியவில்லை. அத்தகைய மனோ பக்குவம் அடைந்து விட்டால் அப்புறம் மனிதனுக்குத் துக்கமென்பதே இவ்வுலகத்தில் இல்லை. ஆனால் பந்தபாசங்களின் கட்டுத்தளைகள் இல்லாத இடத்தில்தான் அத்தகைய துக்கமற்ற நிலை சித்திக்கும். தாமரையிலைத் தண்ணீர்போல் ஒட்டாமல் வாழ வேண்டும் என்றும் மகான்கள் உபதேசிக்கும் ஆத்ம ஞானத்தின் ரகசியம் இதுதான்!'' என்றார் ஜகந்நாதன்.

மகா அறிவாளியான அவர் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தால் இன்னொரு விஷயத்துக்குத் தாவி விடுவார் என்பது வசந்திக்குத் தெரியும். ஆனால் இப்போது அவளுக்கு ஆத்ம ஞான உபதேசம் தேவையில்லை! காதலைப் பற்றி அவர் ஏதாவது பேசினால் மிகவும் குதூகலப்படுவாள்!

''வசந்தி! நீ காதலையும் ஸீரியஸாக எடுத்துக் கொள்ளக் கூடாது! எதன் மீதாவது, யார் மீதாவது நாம் தீவிரமாக உணர்ச்சி கொண்டு விட்டால் அப்புறம் அந்த உணர்ச்சியிலிருந்து நாம் விடுதலை பெற முடியாமல், அதுவே நம்மை அழுத்தும் பாறாங்கல்லாக மாறி, அளவிலாத வேதனைகளையும், சங்கடங்களையும், கவலைகளையும் உண்டாக்கி விடும்! உதாரணமாக ஒரு பெண் மீது நான் தீவிரமான உணர்ச்சி கொண்டு அவளை உயிருக்குயிராய்க் காதலிக்கிறேன் என்று வைத்துக் கொள்ளுவோம்! அந்த உணர்ச்சியே எனக்கு ஒரு பித்தாக மாறி அதிலேயே என்னை இழந்து விடுவேன்! அப்புறம் என்னைப்போலவே அவளும் என்னைக் காதலிக்க வேண்டுமென்று தவிதவித்து நான் அளவிலாத அவஸ்தைகளுக்கு ஆளாகி அவளுக்கும் அவஸ்தைகளை உண்டாக்குவேன்! அவளுடைய மனம் வேறொரு ஆடவனையும் நாடுமோ என்று குழம்பிப் பொறாமையும் சந்தேகங்களும் கொண்டு பைத்தியக்காரத்தனமான செயல்களிலெல்லாம் ஈடுபடுவேன். ஆகவே அந்தப் பெண் மீது நான் கொள்ளும் காதலில் அத்தகைய தீவிர உணர்ச்சிக்கு இடமளிக்காமல் 'தாமரையிலைத் தண்ணீர்' தத்துவத்தை உபயோகப்படுத்தினால் இத்தகைய சங்கடங்கள் நேரிடாது. அதுவே எனக்கும் நல்லது, அவளுக்கும் நல்லது!''

இந்தத் தத்துவத்தை ஏற்றுக் கொள்ள வசந்தி தயாராக இல்லை. ஆதலால், அவள் தீவிரமாகவே ஜகந்நாதனை உற்றுப் பார்த்தாள்.

ஏட்டிக்குப் போட்டி

சென்னை சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கார் வாங்க அரசாங்கம் கடன் தரும். —ஓர் அறிவிப்பு

பெட்ரோலாவது இலவசமாகக் கொடுக்கக் கூடாதா என்று கேட்கிறார் பெரிய குடும்பஸ்தரான ஓர் உத்தியோகஸ்தர்.

க் க் க்

பிச்சை எடுப்பதை ஒழிக்கச் சட்டம் கொண்டு வரப் போகிறார்கள். —செய்தி



ஆனால் காங்கிரஸ் தலைவர்கள் ஓடு ஏந்தி அயல்நாடுகளுக்குச் செல்லத் தடையில்லை!

க் க் க்

மத்திய அரசின் மந்திரிகள் காரியாலயத்திலிருந்தபடி செய்கிற 'டிரங்கால்' டெலிபோன்களைக் காட்டிலும் அவர்கள் வீட்டிலிருந்தபடி செய்கிற டிரங்கால்களே அதிகம். —ஓர் உண்மைக் கணக்கு

காங்கிரஸ் கட்சி வேறு, சர்க்கார் வேறு என்று அவர்கள் வேற்றுமை பாராட்டுவதில்லையல்லவா? அது போல் ஆபீஸ் வேறு, வீடு வேறு என்றும் நினைப்பதில்லை போலும்!

"வசந்தி! என் மனத்தைக் கவருவதற்காக நீ செய்து வந்திருக்கும் அலங்காரங்களையும், நீ கையாளும் தந்திரங்களையும் நான் புரிந்து கொண்டு விட்டேன் என்றுதானே நீ கோபப்பட்டாய்? ஆனால் அதற்குக் காரணம் 'பெண் புரியாத புதிராக இருக்கும் வரைதான் ஆடவனுக்குக் கவர்ச்சியுள்ளவளாக இருக்கிறாள்' என்ற ஒரு மேல்நாட்டுப் பழமொழியை நீ நம்பியிருக்கிறாய்! அரசியலுக்கு ராஜ தந்திரங்களையும், சூதாட்டத்துக்கு மூடு மறைப்புத் தந்திரங்களையும், புகுத்தியவர்கள்தான் காதலுக்கு இந்தப் புரியாத கவர்ச்சி' என்ற கருத்தைப் புகுத்தியிருக்கிறார்கள். ஆனால் உண்மையான காதலுக்கு அத்தகைய மாயக் கவர்ச்சி எதுவும் தேவையில்லை. தன் காதலி என்னென்ன நினைப்பாள், என்னென்ன செய்வாள், என்பன போன்ற சிறு சிறுவிஷயங்களையெல்லாம் கூடக் காதலன் புரிந்துகொள்ளும்படியான நிலையில் இருக்கும் போதுதான். காதலனின் உள்ளத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகக் காதலி விளங்கும் போதுதான் அந்தக் காதல் வலுவானதாகவும், அதிக வலிப்புள்ளதாகவும் இருக்கும்."

வசந்தி குறுகுறுவென்று ஜகந்நாதனின் முகத்தையே ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

"வசந்தி! உன் மனத்தில் உள்ளதைச் சொல்லி விடு!" என்றார் ஜகந்நாதன்.

"எதைச் சொல்ல வேண்டும், ஸார்?" என்ற வசந்தியின் முகம் குப்பென்று வியர்த்தது.

"என்னோடு நீ தனியாக வருவதைப் பற்றிப் பயப்படுவதாக நீ நடித்தாய், இல்லையா?"

வசந்தி சட்டென்று தன் முகத்தை இரு கைகளாலும் மூடிக்கொண்டு ஆம் என்பது போல் தலையாட்டினாள்.

"டில்லிக்குக்கூட என்னோடு தனியாக வந்து ஒரு மாதம் தங்கியிருப்பதென்றாலும் நீ பயப்பட மாட்டாய், இல்லையா?"

அந்தக் கேள்விக்கும் ஆமாம் என்பது போல் வசந்தி புன்சிரிப்போடு தலையாட்டினாள்.

"அவ்வளவு தூரத்துக்கு என்னை ஜடம் என்று நினைக்கிறாயா? அல்லது கோழை என்று நினைக்கிறாயா?" என்று சற்றுக் கடுப்புடன் கேட்ட ஜகந்நாதன் ஒரு சிரிப்புடன், "வசந்தி! அழகான ஒரு பெண்ணோடு தனித்திருக்கும்போது எப்பேர்ப்பட்ட ஜடமும் மிருகமாக மாறி விடுவான்; எப்பேர்ப்பட்ட கோழையும் மகா பலசாலியாகி விடுவான்! மேலும் பெண் என்பவளே அறிந்தோ அறியாமலோ ஆடவன் உள்ளத்தில் புதைந்து கிடக்கும் மிருகஉணர்வைத் தூண்டி விடவே முயல்வாள்! இது இயற்கை விதி!" என்றார்.

அதைக் கேட்டதும் வசந்திக்கு மறுபடியும் கோபம் வந்து விட்டது. உர்ரென்று ஒரு முறை அவரைப் பார்த்து விட்டு உம்மென்று தன் முகத்தை வைத்துக் கொண்டாள்.

கார் மகாபலிபுரத்தின் எல்லையை அடைந்ததும் ஜகந்நாதன் மெல்லக் கனைத்துக் கொண்டு, "வசந்தி! இங்கே கடற்கரைப் பக்கம் ஒரு ஹோட்டல் இருக்கிறது. அங்கே நமக்காக ஒரு ரூம் டெலிபோன் மூலம் ரிசர்வ் செய்திருக்கிறேன்!" என்றார்.

"ரூம் எதுக்கு ஸார்? பீச்சில் உட்கார்ந்தே நாம் பிரமாதமாக நாவல் எழுதி விடலாமே?" என்றாள் வசந்தி.

"ஆனால் பீச்சுக் காற்றில் நாம் பிரமாதமாக எழுத உட்கார்ந்தால் நம்முடைய எழுத்தோவியங்களையெல்லாம் வாயு பகவான் அள்ளிக் கொண்டு போய்க் கடலில் வீசி விடுவார்! நம்முடைய குப்பைக் கூடைக்கு எதுவும் மிஞ்சாது! மேலும் வெயிலிலும் காற்றிலும் உன் அழகான உடம்பு வாடி வதங்கி விடும்! அப்புறம் கற்பனைக்கே பஞ்சம் வந்து விடும்!" என்று ஜகந்நாதன் விஷமமாகச் சிரித்தார்.

"ம்!.... சாயந்திரம் வரை உட்கார்ந்து நாம் கதை எழுதி விட்டு, இருட்டுவதற்கு முன்னாலேயே சென்னைக்குத் திரும்பிவிட வேண்டும்!"

"ஆமாம். அதற்கு மேலும் அந்த ரூமில் நாம் தங்கியிருந்தால் நன்றாக இராது!" என்றார் ஜகந்நாதன் கண்ணைச் சிமிட்டிக் கொண்டே.

வசந்தி நறுக்கென்று தன் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

ஓட்டலின் காம்பவுண்டுக்குள் கார் நுழையும் போது வசந்தி ஏதோ யோசித்து விட்டு, "ஸார்!.... ஸார்... ஓட்டலில் உள்ளவர்கள் நம்மைப் பற்றி நம்மைப் பற்றி..... என்னவென்று நினைத்துக் கொள்வார்கள்?" என்று மெல்லக் கலவரத்துடன் கேட்டாள். இதுவரை அவள் உணர்ந்தே இராத கலவரம் அது!

"மற்றவர்கள் நினைப்பதைப் பற்றி நீ ஏன் அலட்டிக் கொள்கிறாய்? அவரவர் கற்பனா சக்திகளுக்குத் தகுந்தபடி எப்படி வேண்டுமானாலும் நம்மைப்

பற்றி நினைத்துக் கொண்டு கதையளக் கட்டும்! அடுத்தவன் என்ன நினைப்பானென்று நாம் யோசித்துத் தயங்குவதே சுத்த முட்டாள்தனம். அதுவே ஒரு பலவீனமுங்கூட!'' என்று ஜகந்நாதன் சொல்லி விட்டு ஓட்டலின் ஒருபுறத்தில் காரைக் கொண்டு போய் நிறுத்தினார். பிறகு அவர் குப்பைக் கூடையை ஒரு கைக் குழந்தை போல் தூக்கிக் கொண்டு காரிலிருந்து இறங்கி ஜம்மென்று நடந்தார். அவருக்குப் பின்னால் வசந்தி காகிதம், பைல்கள் முதலானவற்றுடன் தலை குனிந்தபடி நடந்தாள்.

ஓட்டலில் இருந்தவர்களெல்லாம் அவ்விருவரையும் விசித்திரமாகப்பார்த்தார்கள். அது வசந்திக்கு என்னவோ போல் கஷ்டமாக இருந்தது. அதே சமயம் இனம் புரியாத ஏதோ ஒரு குறுகுறுப்பும் அவளுக்கு உண்டாயிற்று.

ஓட்டலின் மேன் மாடியில், ஏகாந்தமான ஒரு ரூமியில் கடற்கரையை நோக்கியுள்ள அழகான ஓர் அறை அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

ஜகந்நாதன் புன்முறுவலுடன் வசந்தியை நோக்கி, ''பேபி, வா!'' என்று செல்லமாகக் கூப்பிட்டு அவளுடைய கையைப் பற்றாத குறையாக அழைத்துக் கொண்டு மாடியை நோக்கி நடக்கலானார்.

அவளை 'பேபி' என்று ஜகந்நாதன் கூப்பிட்டதுமே ஓட்டல் ஆட்கள், சக பிரயாணிகள் முதலானவர்களின் விழிகளெல்லாம் வியப்பால் பிதுங்கின. அதனால் வசந்தியின் மனம் துணுக்குற்றுச் சிறிது கோபம் வந்தது என்றாலும் தன்னை 'பேபி' என்று ஜகந்நாதன் குழைவான குரலில் கூப்பிடுவதிலே அவளுக்குஏதோ ஒரு தனி உற்சாகமும் நாணமுங்கூடப் பொங்கி உடலெங்கும் படர்ந்தன.

ஓட்டலின் தலைமைச் சிப்பந்தி மிரள மிரள விழித்தபடி அவ்விருவரையும் பார்த்துக் கொண்டே திகைப்புடன் அசைவற்று நின்றார்.

ஜகந்நாதன் வெகு அலட்சியமாக உரத்த குரலில் மானேஜரைக் கூப்பிட்டு ''எங்களுக்கு மீல்ஸ் (சாப்பாடு) சரியாகப் பன்னிரண்டு மணிக்கு வரவேண்டும்! பிறகு சரியாக நான்கு மணிக்கு டிபன் வர வேண்டும்! ஒரு பிளாஸ்க் நிறைய காப்பி, ஒரு டஜன் சோடா கலர், பிஸ்கட்டுகள், பழங்கள் இவைகளையும் இப்போதே கொண்டு வந்து வைத்து விட்டுப் போங்கள்!'' என்று சரமாரியாக உத்தரவு போட்டு விட்டுத் தம் அறையை நோக்கி நடக்கலானார்.

ஓட்டல் மானேஜர் விருட்டென்று அவர்களுடைய கண் பார்வையிலிருந்து மறைந்ததும் வசந்தி மெல்ல ஜகந்நாதனின் காதுக்குள், ''என்னைப் பேபி என்று ஏன் கூப்பிட்டீர்கள்? நான் என்ன குழந்தையா?'' என்று முகம் சிணுங்கியபடி கேட்டாள்.

''பேபி என்றால் குழந்தையை மட்டும் குறிக்காது! பிரியமாகக் கூப்பிடும் செல்லப் பெயர்களில் பேபியும் ஒன்று!''

''நாய்க்குத்தானே பேபி என்று செல்லமாகப் பெயரிட்டுக் கூப்பிடுவார்கள்?''

''நாயை மட்டுமல்ல, புது நாயகியையும் கல்யாணமான புதுசில் ஆசையாகப் பேபி என்று கூப்பிடுவதும்உண்டு! வயதானவர்களும் தங்களுக்குப் பிரியமான இளம் பெண்களை 'பேபி, பேபி' என்று வாய் நிறையக் கூப்பிட்டு அப்பேபிகளின் கைகளில் தாங்களே குழந்தைகளாகி விடுவதும் உண்டு!'' என்றார் ஜகந்நாதன். (தொடரும்)



மே 22உ
முதல்
சென்னை
பிளாசா
கிரௌன்
புவனேஸ்வரி
மற்றும்
தென்னாடெங்கும்
தண்டாயுதபாணி பிலிம்ஸ் அளிக்கும்
தேவரின்
தெய்வத் திருமகள்
M.M.A.சின்னப்பா தேவர்
ELEGANT
NEGATIVE RIGHTS CONTROLLED BY - SEMBI TRADERS MADRAS.6

உயிர் ஒரு துரும்பு

ர. சு. நல்லபெருமாள்



வெள்ளிக்கிழமை! முக்கியமான நாள். மற்றவர்களுக்கு எப்படியோ? அப்புசாமிக்கு அது ஒரு முக்கியமான நாள்தான். எவ்வளவோ சிக்கல்களுக்குப் பிறகு, முடிவான நாள்!

அன்று அதிகாலையிலேயே எழுந்திருந்தான். தாமிரபரணியில் மூழ்கிக் குளித்தான். குளிக்கும்போது சற்றுத் தூரத்தில் தெரிந்த குறுக்குத்துறைக் கோயிலை முறைத்துப் பார்த்தான். அலட்சியமாகச் சிரித்தான்.

நீ நினைத்தால்கூட இன்று என்னைத் தடுக்க முடியாது. உயிர் எனக்கு ஒரு துரும்பு— இது அந்தக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் முருகனுக்கு அவன் விட்ட சவால்!

காலைச் சாப்பாட்டுக்குத் தன் அறையைப் பூட்டிக்கொண்டு வெளியே வந்தபோது திரும்பி ஒரு முறை அறையின் வாசலைப் பார்த்தான். இனி அந்த அறைக்குத் திரும்பப்போவது இல்லை என்ற முடிவுக்கு வந்த பிறகு திரும்பிப் பார்ப்பானேன்? இனி அவனுக்கும் அந்த அறைக்கும் என்ன சம்பந்தம்? ஏன், இந்த மண்ணுக்கும் அவனுக்குமுள்ள சம்பந்தமே அன்றோடு முடியப்போகிறதே! அப்புசாமி தனக்குள் சிரித்துக்கொண்டான். மணலில் உட்கார்ந்து எழுந்தவன் தன் உடையில் ஒட்டியிருக்கும் மணலை உதறித் தள்ளுவதுபோல்; அப்புசாமி, இந்த உலகத்தோடு உள்ள தன் உறவுகளையெல்லாம் தன் அறை வாசலில் அந்த நேரத்தில் உதறிவிட்டு வெளியே நடந்தான்.

தெருவில் அவனுக்கு எதிர்ப்பட்ட ஒவ்வொருவரும் அவனுடைய நினைப்பில் சாகப்போகிறவர்களாகவே தோற்றமளித்தார்கள். வாழ்க்கையும், அதில் மனிதனுக்குள்ள ஆசாபாசமும் அர்த்தமற்றவைகளாகத் தோன்றின. சாலைக் குமாரசாமி கோயிலுக்கு எதிரே வந்தபோது கோயில் மணி ஒலித்தது. கோயில் தெருவும் அவன் பக்தியுடன் ஆராதிக்கும் கோயில் அது. ஆனால் இன்று மரியாதைக்காகக் கூட அந்தக் கோயிலின் வாசலில் நிற்காமல் அவசரமாக அப்பால் நகர்ந்து விட்டான்! வாரந்தோறும் அக்கோயிலுக்கு அவன் வந்தானே; அவன் கண்ட பலன் தான் என்ன? அவனுடைய பக்திக்கு அந்தத் தெய்வம் நன்றி செலுத்தியிருந்தால் இன்று அப்புசாமியின் மனம் இவ்வளவு காய்ந்திருக்காது.

அந்தச் சந்நிதியின் முன் தானே கமலாவை அவன் சந்தித்தான். அந்தச் சந்திப்புக்கு அந்தக் கடவுள் கூடச் சாட்சியாக இருந்தாரே! பிறகு ஒவ்வொரு வெள்ளியும் அவள் வந்தாள்; அவனும் வந்தான். இதெல்லாம் அந்தச் சாலைக் குமாரனுக்குத் தெரியுமே. பின் எதற்காக இந்தச் சோதனை? அவர் என்ன இவனைச் சோதிப்பது? இவனே கடவுளைச் சோதிக்க முடிவு செய்துவிட்டானே!

''என்னடா, அப்பு! எங்கே கிளம்பிட்டே?'' என்ற குரலைக் கேட்டு நிமிர்ந்தான் அப்புசாமி. எதிரே அவனுடைய கல்லூரித் தோழன் நின்றுகொண்டிருந்தான்.

''என்னடா, பரக்கப் பரக்க விழிக்கிறே? எங்கே இப்படி? காலேஜுக்கு வரலையா?'' என்று கேட்டான் தோழன்.

''இல்லை. எனக்கு வேலை இருக்கிறது'' என்று கூறிவிட்டு மேலே நடந்தான், அப்புசாமி. தோழன் அப்படியே திகைத்து நின்றான்.

வழக்கமாகக் கண்டவுடனே அரட்டை அடிக்கும் அப்புசாமிக்கு இன்று என்ன வந்து விட்டது? ஆளைக் கண்டவுடனேயே விலகி ஓடுகிறானே!

அப்புசாமி கைக்கடிகாரத்தைப் பார்த்தான். மணி பத்து. அடேயப்பா, இன்னும் பத்து மணி நேரமிருக்கிறதே. இரவு எட்டு மணி வரை காத்திருக்க வேண்டுமே. அப்புசாமிக்கு அவசரம். ஆனால் பொழுது ஏன் இப்படி நகருகிறதோ?

அப்போது அவன் அந்த வளையல் கடை எதிரே நின்றுகொண்டிருந்தான்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை இரவும் அந்த வளையல் கடை அருகே அவனுக்காகக் கமலா எவ்வளவு நேரம் காத்திருக்கிறாள், சாலைக் குமாரசாமி

கோவில் பிராகாரத்தில்? அப்புசாமி வாங்கி வரும் அந்த அல்வாவைக் காலி செய்யாமல் அவள் வீட்டுக்குத் திரும்பியது இல்லையே! நன்றி கெட்டவள்! கிட்டத்தட்ட அல்வாவுக்கு மட்டும் ஐம்பது ரூபாய் காலியாகியிருக்குமே...

அட சீ. இன்னும் இந்தச் சின்ன புத்தி பணத்தையேதானே எண்ணுகிறது? இப்போ நான் எவ்வளவு உயர்ந்து விட்டேன். உயிரையே ஒரு துரும்பாக மதித்துவிட்டேனே! இந்தப் பணமெல்லாம் எவ்வளவு அற்பம்...

''என்ன சார், இப்படி நடு ரோட்டில் நின்று கொண்டு சிந்தனை?'' என்றார், லாலாக் கடையில் உட்கார்ந்திருந்த லாலா. அப்புசாமி ஓர் அசட்டுச் சிரிப்பை உதிர்த்துவிட்டு அவரை நெருங்கினான்.

''ராத்திரி இரண்டு பலம் அல்வா எடுத்து வைக்கிறேன்'' என்றார், லாலா.

''அது ஒன்றுதான் குறைச்சல்! இனி அல்வாவே வேண்டாம்'' என்றான் அப்புசாமி விரக்தியுடன்.

''இன்று வெள்ளிக்கிழமையாயிற்றே?'' என்றார் லாலா.

''இன்றும் வேண்டாம், இனி எந்த வெள்ளிக் கிழமையும் வேண்டாம். உங்க அல்வாவை வாங்க இனி நான் இருக்க மாட்டேன்'' என்றான் அப்புசாமி. அவன் கண்கள் கலங்கின.

''ஏன் சார்? எங்கே போறேன்?''

''எங்கேயோ'' என்றான் விரக்தியுடன். லாலா ஒன்றும் புரியாமல் விழித்தார்.

''சாருக்கு ஏதோ கோபம். சூடா அல்வா வந்திருக்கிறது. இன்று ஒரு நாளாவது வாங்கிச் சாப்பிடுங்களேன்'' என்றார் லாலா. அப்புசாமி அல்வாத் தட்டை முறைத்துப் பார்த்தான்.

என்ன அல்வா வேண்டியிருக்கிறது இனி? நாளை சாப்பிடவா போகிறோம்? லாலாவின் ஆசையைத்தான் தடுப்பானேன்?

லாலாவிடமிருந்து ஒரு பலம் அல்வாவை வாங்கிச் சாப்பிட்டுவிட்டு, ஐந்து ரூபாய் நோட்டைக் கொடுத்துவிட்டு அப்பால் நகர்ந்து விட்டான்.

''சார்! சில்லறை வேண்டாமா?'' என்று கேட்டார் லாலா.

''வேண்டாம். நீரே வைத்துக் கொள்ளும். இனி எனக்குச் சில்லறை எதற்கு?'' என்று கூறிப் போய் விட்டான் அப்புசாமி.

''சரியான அசடு. இப்படியும் ஒரு ஆசாமி உண்டா? பெரிய பணக்கார வீட்டுப் பையன். அப்பா அம்மா இல்லை. அண்ணன் ஒருவர் தாம் ஊரில் இருக்கிறார். இவர் இங்கு கல்லூரியில் படித்துக் கொண்டு ஜாலியாக இருக்கிறார். கொஞ்சம் அசடு மாதிரி நடந்து கொள்வார். பேச்சுக்கூட சமயத்தில் இப்படித்தான் இருக்கும்'' என்றார் லாலா பக்கத்திலிருந்த ஒரு நபரிடம்.

அப்புசாமி ரயில்வே ஸ்டேஷன் வெயிட்டிங் ரூமில் போய் உட்கார்ந்தான். மணி பதினொன்றுதான் ஆகியிருந்தது. அவனுடைய கவனமெல்லாம் இரவு எட்டு மணி எப்போது வரும் என்ற நினைவிலேயே இருந்தது. ரயில்வே ஸ்டேஷனின் பரபரப்புக்கூட அவனைக் கவரவில்லை. அந்தக் கூட்டமும், பரபரப்பும் அவனுக்குக் கேலிக்கூத்தாகப் பட்டன. அவனுடைய எண்ணத்தில் மனிதக் கூட்டமே அற்பமாகப் பட்டது. அவனுடைய மனம் தான் ஒரு பக்குவத்தை அடைந்து விட்டதே. இனி இந்த உலகமும், மனிதர்களும் அவனுக்கு அற்பமாகத்தானே தோற்றமளிக்கும்? சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு எண்ணச் சுழலில் மிதந்து கொண்டிருந்தான்.

நாளைக் காலையில் ஊரே பரபரப்படையும். அண்ணா தவித்துப் போவான்.... என்ன தவிப்பு? உள்ளூற சந்தோஷப்படுவான். என் பங்குச் சொத்தும் அவனுக்குப் போய்விடுமல்லவா? எல்லாருமே நன்றி கெட்டவர்கள் தாம்...... கமலா, இந்தச் செய்தியை அறிந்தும் என்ன செய்வாள்? இப்படி நடந்து விட்டதே என்று துடித்துப் போவாளா? யாரிடமும் மனம் விட்டுக் கூறி அழ முடியாமல் குமுறுவாளா? அல்லது போய்ச் சேர்ந்தான் என்று மகிழ்வாளா? அப்படி அவள் மகிழ்ந்தால், என் ஆவி அவளைச் சும்மா விடுமா?.... எவ்வளவு திமிர் இருந்தால் என்னைப் பித்துக்குளி என்று கூறியிருப்பாள். பித்துக்குளியா நான். அசடு, பைத்தியம் என்றாளாமே. நன்றி கெட்டவள். உயிரையே துரும்பாக மதித்து விட்ட வீரனடி நான், வீரன்! பித்துக்குளியாமே? இன்று இரவு எட்டு மணிக்குக் காட்டுகிறேனடி, நான் பித்துக்குளியா அல்லது தீரனா என்று. அப்போது புரியும் உனக்கு.......

அப்புசாமி திடீரென்று தன் பையைத் தொட்டுப் பார்த்தான். அவன், நான்கு நாட்களுக்கு முன் கமலாவுக்கு எழுதிய கடிதம் இருந்தது.

கடந்த புதன்கிழமையன்றுதானே கமலாவுக்குத் திருமணம். என்ன நெஞ்சழுத்தம்! வெள்ளிக்கிழமையையும், சாலைக் குமாரசாமி கோவிலையுமா மறந்துவிட்டாள்? கள்ளி! கலியாணப் பேச்சை எடுத்த போதெல்லாம் சிரித்து மழுப்பினாளே. இதற்குத்தானா?...... என்னைவிட அவன் எதில் உயர்ந்தவன்? ஐ. ஏ. எஸ். பாஸ் செய்து விட்டால் உயர்ந்தவன் என்று அர்த்தமா? இந்த மாதிரி இரண்டு ஐ. ஏ. எஸ்.காரனை நான் வேலைக்கு அமர்த்த முடியுமே... நன்றி கெட்டவள். அசடு என்றல்லவா கூறி விட்டாள். நான் அசடுதான். இல்லையென்றால் அவளுக்காக அல்வாவுக்கு மட்டும் ஐம்பது ரூபாய் செலவழித்திருப்பேனா?....

தன் பையில் இருந்த அந்தக் கடிதத்தை எடுத்தான். அதைக் கடந்த செவ்வாய்க் கிழமையன்று, பக்கத்து வீட்டுச் சிறுவன் மூலம் கமலாவுக்கு அனுப்பி வைத்தான். அந்த வேலைக்காக அரைப்பவுண்டு சாக்லேட்டைப் பெற்றுக்கொண்டு ஓடிய சிறுவன், சிறிது நேரத்தில் அந்தக் கடிதத்தோடு திரும்பி வந்தான். கமலா சொன்னதையும் ஒரு வார்த்தைகூட விடாமல் இவனிடம் சொல்லி விட்டான். கடிதம் கொண்டு சென்ற சிறுவனிடம், அப்புசாமியை அசடு, பித்துக்குளி, பைத்தியம் என்று கூறிக் கடிதத்தை வாங்கிக் கூடப் பார்க்காமல் திருப்பி அனுப்பி விட்டாள் கமலா!

சே, எவ்வளவு கேவலம். இனி இந்த உயிரை வைத்திருந்துதான் என்ன பயன்?....

அப்புசாமி இரண்டு நாட்களாகக் கல்லூரிக்குக் கூடப் போகாமல் சிந்தித்தான்;

கால்கேட்டின்மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டெண்டல் கிரீம் துர் நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.

கால்கேட் உடனடியாக வாய் துர் நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை ஒழிக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான பரிசோதனைகள் நிரூபித்துள்ளன: இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது—சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டெண்டல் கிரீமினால் உங்கள் பற்களை நன்றாகத் துலக்குங்கள். இதன் வீரியமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர் நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் நீடித்திருக்கும் நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.



வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:

- ✔ துர் நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது

நீங்கள் பற்பொடியை விரும்பினால், இதே பலன்கள் அனைத்தையும் கால்கேட் தூத் பவுடர் மூலம் அடையலாம்-ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.

பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெறவும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

கடைசியாக ஒரு முடிவுக்கும் வந்து விட்டான். வெள்ளிக் கிழமை அன்று இரவு எட்டு மணிக்குத் திருச்செந்தூர் செல்லும் ரயில் வண்டி தாமிரபரணி பாலத்தைக் கடக்கும் போது குறுக்கே பாய்ந்துவிட வேண்டும்!

முதலில் மின்சாரக் கம்பியைத் தொட்டு விடுவதாகத்தான் முடிவு செய்தான். ஆனால் கடந்த மாதம் மின்சாரக் கம்பியைத் தொட்டு மயங்கி விழுந்த ஒருவன் பிழைத்துக் கொண்ட செய்தி ஞாபகத்தில் வரவே, அந்த எண்ணத்தை விட்டு விட்டான்.

பத்திரிகையில் இந்தக் கோரத்தைக் கண்டு கவிதா கதற வேண்டும். அந்த நினைவு, அவள் தூக்கத்தை வாழ்நாள் முழுதும் சூறையாடிவிட வேண்டும்....

அருமையான திட்டந்தான். எட்டு மணி ஆக இன்னும் நேரம் அதிகமிருந்தது. அப்புசாமிக்குப் பொறுமை இல்லை. திடீரென்று இரவு எட்டு மணி வந்துவிடாதா என்று ஏங்கினான்.

மத்தியானம் ஒரு மணி வரை வெயிட்டிங் ரூமிலேயே இருந்தான். பசியெடுத்தது. திடீரென்று தயிர் வடை சாப்பிட வேண்டுமென்ற ஆசை தோன்றியது. அவனுடைய பெயரே தயிர்வடை அப்புசாமிதான். இந்தத் தயிர்வடைக்காகத் திருநெல்வேலி ஜங்ஷனிலிருந்து டவுன் வரை போய்ச் சாப்பிட்டவனாயிற்றே! இன்னும் ஏழு மணி நேரத்தில் மறைந்து மண்ணாகி விடப் போகும் இந்த உடல், தயிர் வடை கேட்கிறதே என்று எண்ணியபோது; அவனுக்குச் சிரிப்பு வந்தது. சிறையில் தூக்கிலிடப்படும் நபருக்கு, கடைசி நேரத்தில் அவன் விரும்பும் ஆகாரத்தைக் கொடுப்பார்களாம். அந்த நினைவு வந்ததும் தன்னுடைய நாக்கு விரும்பும் ஆகாரத்தைக் கொடுத்து விடுவோமே என்று முடிவு செய்தான், அப்புசாமி. இல்லையென்றால் அந்தத் தயிர் வடை நினைவிலேயே பிரியும் உயிர், பேயாகித் தயிர் வடைக்காக எல்லா ஹோட்டல்களிலும் அலைய ஆரம்பித்தால் என்ன செய்வது? சாகும்போது கவிதாவின் நினைவு மாத்திரம்தான் இருக்க வேண்டும். அப்போதுதானே பேயாகி அவளைத் துரத்த முடியும்.

ரயில்வே காண்டீனை நோக்கி நடந்தான். பாவம், அங்கு தயிர் வடை இல்லை. "கட்டாயம் தயிர் வடை வேண்டுமே" என்று கெஞ்சிக் கேட்டான். அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்திருக்க வேண்டும், காண்டீன் சர்வருக்கு.

"கஸ்தூரி ஐயர் கடையில் நிச்சயம் தயிர் வடை இருக்கும். சீக்கிரம் போங்கள்" என்றான் சர்வர். கஸ்தூரி ஐயரின் கடையை நோக்கி விரைந்தான் அப்புசாமி.

"இந்த மனிதனுக்குத் தயிர் வடை மீது ஏன் இந்தத் தவிப்போ?" என்று முனகிக் கொண்டான் சர்வர்.

கஸ்தூரி ஐயர் கடையில் அரை டஜன் தயிர் வடைகளைச் சாப்பிட்டு உடலைத் திருப்திப்படுத்தி விட்டு, நிம்மதியாக மீண்டும் வெயிட்டிங் ரூமுக்குள் புகுந்து கொண்டான், அப்புசாமி. வரும் வழியில் வாங்கி வந்த தபால் கவரை மேஜை மீது எடுத்து வைத்தான். தன் முடிவின் காரணத்தைக் கடிதம் மூலம்கவிதாவுக்கு உணர்த்திவிட வேண்டாமா?



"நானும் ரொம்ப நாழியா பார்த்துண்டிருக்கேன். வாயிலே ஈ புகுந்தது தெரியாமல் பேசிண்டிருக்கிறீர்கள்!"

"நீங்க பார்த்துக் கொண்டிருந்த லட்சணம் அவ்வளவுதான். ஈ வாயிலே புகுந்து காது வழியாய்ப் போய் விட்டது. அதை நீங்கள் கவனிக்கவே இல்லை!"

கடிதத்தை எப்படி ஆரம்பிப்பது....?

அன்பே....! சீ, என்ன அன்பு வேண்டியிருக்கிறது, அந்த நன்றி கெட்டவளுக்கு....

கண்ணே....; கண்ணாவது மண்ணாவது, அதற்கெல்லாம் அருகதை உள்ளவளா அவள்?

கள்ளி...! இப்படித்தான் ஆரம்பிக்க வேண்டும் — கடிதத்தை ஒரு பக்கத்துக்குள் எழுதி முடித்துக் கவருக்குள் போட்டான். கவரில் கவிதாவின் விலாசம் எழுதினான்.

தபாலில் சேர்த்தால் என்ன? வேண்டாம், என் உடலை எடுக்கும் போலீஸ்காரர் இந்தக் கடிதத்தை எடுத்துப் பார்க்க வேண்டும். இது பத்திரிகையில் பிரசுரமாகும். அதைப் படித்து விட்டுக் கவிதா துடித்துக் கதற வேண்டும்......

சேச்சே! அது கூடாது. போலீஸ்காரர்கள் அவளைத் தொந்தரவு செய்வார்கள். தபாலில் அனுப்பினாலும் அவள் கணவனுக்குத் தெரிந்துவிடும். இதனால் அவளுக்கு என் மீது வெறுப்பும், கோபமும்தான் தோன்றும். அது கூடவே கூடாது. அவளுக்கு என் மீது பரிதாபம் ஏற்பட வேண்டும். அவளால்தான் நான் இந்த முடிவை அடைந்தேன் என்ற நினைவில், வாழ்நாள் முழுதும் அவள் இரகசியமாகவே அழுது நைந்து உருக வேண்டும். என்னுடைய முடிவின் செய்தியைப் பத்திரிகை மூலம் அறிந்ததும் உண்மையைப் புரிந்து கொள்வாள். அது போதும்....

அவளுக்கு எழுதிய கடிதத்தைக் கிழித்தெறிந்தான். பிறகு, போலீசுக்குக் கடிதம் எழுத நினைத்தான். ரயில் பாலத்தில் கிடக்கும் உடலை அநாதை என்று நினைத்து விடக் கூடாதல்லவா?

எழுத ஆரம்பித்தான்: 'என்னுடைய சாவுக்கு நானே பொறுப்பாளி' — என்று மட்டும் எழுதி, கீழே தன் ஊர் விலாசத்தையும், தன் சகோதரன் பெயரையும் எழுதி

னான். கடிதத்தை மடித்துப் பையில் பத்திரமாக வைத்துக் கொண்டான்.

மாலை ஐந்து மணிக்கு வானம் கறுத்தது. சிறிது நேரத்தில் மழை பெய்ய ஆரம்பித்து விட்டது. அப்புசாமி நிலைகொள்ளாமல் தவித்தான். எட்டு மணிக்குள் மழை விட்டு விட வேண்டுமே. இல்லை என்றால் மழையில் நனைந்து கொண்டல்லவா தாமிரபரணிப் பாலத்துக்குப் போக வேண்டியிருக்கும். வானத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இரவு ஏழேகால் மணிக்குத் திருச்செந்தூர் போக வேண்டிய வண்டி, முதல் பிளாட்பாரத்தில் வந்து நின்றது. ஏழேமுக்கால் மணிக்கு ஸ்டேஷனை விட்டுப் புறப்பட்டு விடும். பாலத்துக்கு எட்டு மணிக்கெல்லாம் வந்து விடும். இப்போதே நடந்தால் சரியான நேரத்துக்குப் பாலத்தை அடைந்து விடலாம்.

அப்புசாமி, வெயிட்டிங் ரூமை விட்டு வெளியே வந்தான். மழை இன்னும் பெய்து கொண்டிருந்தது.

யாரிடமாவது குடை இருக்குமா......? சுற்று முற்றும் பார்த்தான். தெரிந்தவன் ஒருவனையும் காணோம்.

இந்த ரயிலிலேயே போய், பாலம் வரும் போது குதித்து விட்டால் என்ன?..... அது பயன்படாது. ஆற்றில் விழும் சத்தம் கேட்டு யாராவது காப்பாற்றி விட்டால் என்ன செய்வது.... ரயில் வருமுன் பாலத்தில் போய்க் காத்திருக்க வேண்டியதுதான்.

மழை சற்றுக் குறைந்திருந்தது. தலையில் கைக்குட்டையைப் போட்டுக் கொண்டு தெருவில் இறங்கி ஓடினான், அப்புசாமி. ஜங்ஷன் லெவல் கிராஸிங் பக்கமாக வந்ததும் நின்றான். ரயில் பாதை வழியாகச் சென்றால் சீக்கிரம் பாலத்துக்குப் போய் விடலாம். தெரு வழியாக நடந்தால் போய்ச் சேருவதற்குள் நேரமாகி விடும். ஆனால் மழை பெய்ததினால் ரயில் பாதை வழுக்குமே. சிறிது நேரம் அங்கேயே நின்று யோசித்தான். பிறகு தண்டவாளங்களுக்கிடையே நடக்கத் தொடங்கி விட்டான். மழை நின்று விட்டது. மேகமும் கலைந்து விட்டது. நிலவொளியில் தண்டவாளங்கள் பளபளத்தன. தாமிரபரணியின் பாலத்தை நோக்கி விரைவாக நடந்தான்.

மீனாட்சிபுரம் லெவல்கிராஸிங் பக்கம் வந்ததும் திகைத்து நின்றான். லெவல்கிராஸிங் கம்பத்துக்குப் பின்னால் ஓர் உருவம் மறைந்திருந்தது நிலவொளியில் நன்கு தெரிந்தது.

யாரது இந்த நேரத்தில் பதுங்கி உட்கார்ந்திருப்பது....? வழிப்பறியாக இருக்குமோ?

சுற்றுமுற்றும் பார்த்தான் அப்புசாமி. ஆள் அரவமே இல்லை. தன் சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். இருபது ரூபாய் இருந்தது. அதை எடுத்து மடியில் கட்டிப் பத்திரமாக வைத்துக் கொண்டான். அவன் கால்கள் நகர மறுத்தன. பதுங்கியிருந்த உருவம் இலேசாக அசைந்தது. அப்புசாமி அசையாமல் கூர்ந்து பார்த்துக் கொண்டு நின்றான். தூரத்தில் ரயில் ஊதும் சத்தம் கேட்டது. ஸ்டேஷனை விட்டு ரயில் புறப்பட்டு விட்டது. அப்புசாமி பரபரப்படைந்தான். ரயில் வருவதற்குள் பாலத்துக்குப் போய்விட வேண்டுமே. திரும்பிப் பார்த்தான். ரயில் தூரத்தில் வந்து கொண்டிருந்தது. லெவல் கிராஸிங் கம்பத்தைப் பார்த்தான். அந்த உருவம் அங்கேயே தான் இருந்தது. மெதுவாகப் பதுங்கிப் பதுங்கி நடந்தான் அப்புசாமி. அந்த உருவம் அசைந்து கொடுத்தது. அந்தக் கம்பத்தின் பக்கம் வந்ததும் திடீரென்று பாய்ந்துமுன்னே ஓடினான் அப்புசாமி. அதே சமயம் கம்பத்தின் மறைவிலிருந்த உருவமும் அப்புசாமியை நோக்கிப் பாய்ந்தது.

''ஐயோ செத்தேன்!'' என்று அலறினான் அப்புசாமி. கம்பத்தின் மறைவிலிருந்து மிரண்டு ஓடி வந்த ஒரு நாட்டுப் பன்றி, அவன் காலை மிதித்து விட்டு மறுபக்கம் ஓடி மறைந்தது. அப்புசாமி கால் தடுக்கித் தண்டவாளத்தின் பக்கவாட்டிலிருந்த பள்ளத்தில் விழுந்து உருண்டான். கால் பெருவிரல் நகம் பெயர்ந்து இரத்தம் ஒழுகியது. உடலெல்லாம் சகதி ஒட்டிக் கொண்டது.

''ஐயோ, கால் போச்சே!'' என்று முனகினான். ரயில் நெருங்கிக் கொண்டிருந்தது. கைக் குட்டையால் பெரு விரலில் கட்டுப் போட்டான்.

''சே, வேஷ்டி சட்டையெல்லாம் சகதியாகி விட்டதே'' என்று முனகிக் கொண்டே எழுந்தான். ரயிலின் விளக்கொளி நன்கு தெரிந்தது. அப்போதுதான் தாமிரபரணிப் பாலத்தின் ஞாபகம் வந்தது. பரபரப்புடன் மேட்டுக்கு ஏற முயன்றான். காலில் வலி விண் விண் என்று தெறித்தது. பாலம் இன்னும் ஒரு பர்லாங் தூரத்தில் இருக்கிறதே. ஐயோ, ரயில் நெருங்கி விட்டதே....

கஷ்டப்பட்டு மேட்டுக்கு ஏறி வந்தான். ரயில் இன்னும் நெருங்கி வந்து விட்டது. தண்டவாளத்தை ஒட்டியிருந்த ஒற்றையடிப் பாதையில் ஓட நினைத்தான். ஆனால் விரல் வலி இடங்கொடுக்கவில்லை. பாவம், அப்புசாமி தவியாகத் தவித்தான். வலியைப் பொறுத்துக் கொண்டு நொண்டிக் கொண்டே பாலத்தை நோக்கி ஓடினான். நொண்டிக் கொண்டே எவ்வளவு தூரந்தான் ஓட முடியும்? விரல் கட்டு அவிழ்ந்து விட்டது. மீண்டும் கைக் குட்டையால் விரலைக் கட்டி விட்டுத் தலை நிமிர்ந்த போது, ரயில் வண்டி அவன் பக்கத்திலேயே வந்து விட்டது. சற்று விலகி நின்றான். ரயில் வண்டி இரைச்சலுடன் அவனைக் கடந்து பாலத்தை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது.

பாவம், அப்புசாமி ஏமாற்றத்துடன் பரிதாபமாக ரயிலையே பார்த்துக் கொண்டு நின்றான். குறுக்கே வந்து விழுந்து தன்னுடைய திட்டத்தையெல்லாம் குலைத்து விட்ட பன்றியைச் சபித்தான்.

எங்கே போய்விடும் தாமிரபரணிப் பாலம். இப்போதே போய் டாக்டரிடம் மருந்து போட்டு விட்டால் நாளைக்குள் கால் வலியே போய் விடும். நாளை இரவு எட்டு மணிக்கு இங்கே வந்துவிட மாட்டேனா......?

தூரத்தில் தாமிரபரணிப் பாலத்தை ரயில் வண்டி கடக்கும் சத்தம் தெளிவாகக் கேட்டது. அப்புசாமி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுக் கொண்டான். பிறகு, நொண்டிக் கொண்டே டாக்டரின் வீடு நோக்கி வேகமாக நடந்தான்.

மில்க் ஆப் மக்னீஷியா என்பது என்ன?

இது மெக்னீஷியம் ஹைட்ராக்ஸைடின் எமல்ஷன். அமில நாசினியும் மலமிளக்கியுமான இது இரைப்பை சம்பந்த மான (அஜீரணக்) கோளாறுகளின் சிகிச்சையில் ஏராள மாக உபயோகப்படுத்தப்படுகிறது.

மில்க் ஆப் மக்னீஷியாவிற்கு, மெக்னீஷியம் ஹைட்ராக்ஸைட் மிக்ஸ்சர் B.P., மெக்னீஷியா மாக்மா யு. எஸ். பி., க்ரீம் ஆப் மக்னீஷியா B. P. போன்ற பெயர்களும் உண்டு. எப்பெயரால் அழைக்கப்பட்டாலும் இதன் அடிப்படையான பொருள் ஒன்றே. மேலும் ஒரு அங்கீகாரமான ஔஷதகரண விதியின் கண்டிதமான நியதிக்கும், பிரமாணத்திற்கும் தக்கபடி இது உற்பத்தி செய்யப்படுகிறது. இது எந்த வர்த்தகப் பெயரில் விற்பனை செய்யப்பட்டாலும் சரி அப்பெயர் தயாரிப்பாளரை சுட்டிக் காட்ட அனுகூலமாகுமே தவிர இதன் தரத்தை உயர்த்தவோ, தாழ்த்தவோ செய்யாது.

இருந்த போதிலும், விற்பனைப் பெயர், வாடிக்கையாளரை பொறுத்த மட்டில் மிகவும் முக்கியம். ஏனென்றால் நன்கு தெரிந்த ஒரு பெயர் அவருக்கு தயாரிப்பாளரின் நம்பகத்தன்மையைப் பற்றி உறுதியளிக்கிறது. இக்காரணத்தினால் தான் கணக்கற்ற வாடிக்கையாளர்கள் அன்றாடம் 'மந்த்' (MandH) மில்க் ஆப் மக்னீஷியாவை வாங்குகிறார்கள். இது யுனைடெட் ஸ்டேட்ஸ் ஔஷதகரண விதிகளின்படி தயாரிக்கப்பட்டு குணத்திற்கும் தரத்திற்கும் நன்கு பரிசீலனை செய்யப்படுகிறது. ஆகையால் இதன் தரமும், தூய்மையும் கேள்விக்கு இடமற்றதாக விளங்குகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, மற்ற எல்லா 'மந்த்' (MandH) தயாரிப்புகளைப் போலவே, மருந்துகள் தயாரிப்பதில் 50 வருடங்களுக்கு மேலாக உள்ள அனுபவத்தின் சிறப்பையும் பெற்றுள்ளது.

மார்ட்டின் & ஹாரிஸ் (பிரை.) லிமிடெட், ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மெர்க்கன்டைல் பில்டிங்ஸ், லால் பஜார், கல்கத்தா-1
பம்பாய் - புது தில்லி - சென்னை

துக்கடா



கங்கையில் வயது முதிர்ந்த கிழவர் ஒருவர் முழுக இறங்கினார். தற்செயலாகக் கால் வழுக்கி விடவே, கங்கையில் விழுந்து முழுகித் தத்தளிக்கலானார். கரையில் நின்று கொண்டிருந்த பலர் செய்வதறியாது திகைத்து நின்றனர். ஆனால் வாலிபன் ஒருவன் மட்டும் தொப்பென்று தண்ணீரில் குதித்து, அவரைக் கரை சேர்த்துக் காப்பாற்றினான்.

அவனுக்கு நன்றி தெரிவித்த அந்தக் கிழவர், "உன் இந்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?" என்று கேட்டார்.

"கடமையைச் செய்தேன் நான். இதற்குத் தாங்கள் எனக்கு என்ன கைம்மாறு செய்ய இருக்கிறது?" என்று வாலிபன் அவரிடம் உதவிபெற மறுத்து விட்டான்.

ஆனால் கிழவருக்கு மனம் கேட்க வில்லை. "நீ ஏதாவது என்னிடம் பெறத்தான் வேண்டும். உனக்கு இப்பொழுது ஒன்றும் தேவை யில்லை யென்றால், இந்தா என் முகவரி. கல்கத்தாவுக்கு நீ எப்பொழுதாவது வர நேர்ந்தால், அங்கு வந்து என்னைப் பார். உனக்குத் தேவையான உதவியை நான் செய்யச் சித்தமாயிருக்கிறேன்!" என்றார்.


இந்தச் சம்பவம் நிகழ்ந்து ஆறு ஏழு மாதங்களுக்குப் பின்னர் அந்த வாலிபன் கல்கத்தாவுக்குச் சென்றான். அந்தக் கிழவர் கூறிய விலாசத்தை அடைந்து அவரைச் சந்தித்தான்.

முதலில் அந்தக் கிழவர் சட்டென்று அந்த வாலிபனை அடையாளம் கண்டு கொள்ள வில்லை. பழைய சம்பவத்தை அவன் நினைவு படுத்தியதும், "நினைவு வந்து விட்டது. நான் உனக்கு என்ன செய்ய வேண்டும், சொல்லு!" என்றார்.

இளைஞன் சட்டைப் பையிலிருந்து சில காகிதங்களை எடுத்துக் கொடுத்து, "நான் சில கவிதைகள் இயற்றியுள்ளேன். தங்கள் பத்திரிகையில் இதை வெளியிட்டு உதவ வேண்டும்!" என்றான்.

கவிதைகளைப் படித்துப் பார்த்த கிழவரின் முகம் கன்றிக் கறுத்து விட்டது. சிறிது யோசித்தார். பிறகு, "நீ தவறாக நினைக் காமல் இருந்தால் நான் ஒன்று சொல்லு வேன்!" என்றார்.

இளைஞனுக்குச் சங்கடமாக இருந்தது. இருந்தாலும், "சொல்லுங்கள்!" என்றான்.



"நான் இந்தக் கவிதைகளை என் பத்திரிகையில் வெளியிடுவதற்கில்லை. இவற்றை வெளியிட்டு ஏராளமான வாசகர்களின் உயிர்களைக் கொலை செய்ய விரும்பவில்லை. நீ அன்று செய்த உதவிக்குப் பதிலாக இன்று ஓர் உதவி செய். அதாவது என்னை மீண்டும் கங்கையில் பிடித்துத் தள்ளி விடு!" என்றார்.

இப்படிச் சொன்ன அந்தக் கிழவர் யார், தெரியுமா? 'பிரவாசி' என்னும் வங்கப் பத்திரிகையின் புகழ் வாய்ந்த ஆசிரியரான காலஞ்சென்ற ராமானந்த சட்டோபாத்தியாயர் தான்.

க க க

சுறுசுறுப்பான எண்ணத்தைக் கொலை செய்ய விரும்பினால், ஒன்று செய்யுங்கள்! அதைச் செயலாக்க ஒரு கமிட்டி நியமித்து விடுங்கள், போதும்!

—வி. எஸ். நாட்சிங்க்

க க க

உயர்ந்த மனிதர்களின் கீர்த்தி பூக்கொத்தைப் போன்றது. ஒன்று அவர்கள் மக்களின் மகுடமாக விளங்குவார்கள். அல்லது காட்டில் வாடி விழும் மலராகி விடுவார்கள்.

க க க

கடவுள் சித்திர சமயம் தம் ஆராதனைகளின் கஷ்டங்களைக் கண்ணீரால் துடைக்கிறார். காரணம், அவர்கள் அவர் படைத்துள்ள இயற்கையையும் கட்டளைகளையும் சரியாகப் படித்துணர வேண்டும் என்பதுவேயாகும்.

—பெளவர்

க க க

பம்பாய் லோகல் ரயிலில் இரண்டு பேர் அரசியலைப் பற்றிக் காரசாரமாக விவாதித்துக் கொண்டிருந்தார்கள். ஒருவருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "உனக்குத் தெரியுமா? நான் தினம் இரண்டு பத்திரிகைகள் படித்து விட்டு அரசியலை நன்றாகப் புரிந்து கொண்ட பின்தான் பேசுகிறேன்" என்றார்.

"ஏன்? இரண்டாக மட்டும் போவானேன்? நீ ரயிலில் எத்தனைக் கெத்தனை தடவை இடம் மாறி உட்கார்ந்திருப்போ, அத்தனைக்கத்தனை அதிகப் பத்திரிகைகளைப் படிக்கலாமே! அதற்காக அரசியலைப் புரிந்து கொண்டதாகி விடுமா?" என்றார் மற்றவர்.

க க க

தந்தை (தமது நண்பரிடம்): கடந்த பத்தாண்டுகளாக என் மகன் சில விசேஷத் தேர்ச்சிகள் பெற்று வருவதற்காக அயல்நாடு சென்றிருக்கிறான்.

நண்பர்: இது வரை ஏதாவது தேர்ச்சிகள் பெற்றிருக்கிறானா?

தந்தை: எனக்கு விவரமாக ஒன்றும் தெரியாது. ஆனால் போலீஸார் அவனைக் கண்டு பிடிப்பவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வெகுமதி தருவதாக விளம்பரம் செய்துள்ளார்கள்!

க க க

குரைக்கிற நாய் கடிக்காது: குரைத்துக் கொண்டு இருக்கும் வரையில்.

ஐ ஐ ஐ

தற்காலிகமாக ஒருவன் உணவு பிடிக்காமல் கஷ்டப்பட்டால் அவன் ஏதோ காதலில் இருப்பது விளங்கும். அதுவே நீடித்து வெகு காலம் இருந்தால் அவனுக்குக் கலியாணம் ஆகிவிட்டது என்பது விளங்கும்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam

ASP/GM/K 2 K TAM

ஆஹா... கோலினுஸ்



புதியது - தூயது...

கோலினுஸின் சுவை:
காலை புத்துணர்ச்சியூட்டும் இனிய சுவை.
கோலினுஸின் நுரை:
துலக்குவதை எளிதாக்கும், பூரணமாகத் தூய்மைப்படுத்தும்.
கோலினுஸ் கொடுக்கும் அந்த
இனிய சுவாசத்தை நீங்கள் விரும்புவீர்கள்.
மற்றவர்களும் விரும்புவார்கள்.

அந்த ஐந்தாவது நண்பருக்கு ஒரு அருமையான யோசனை. கோலினுஸ் உபயோகித்து மற்றவர்களைப்போல் புன்னகை புரியுங்கள். கோலினுஸ் கொண்டு காலையிலும் இரவிலும் பல்துலக்கி புத்துணர்ச்சியும் தூய்மையும் பெறுங்கள். மற்றவர்கள் மத்தியில் மகிழ்வோடும் நம்பிக்கையோடும் உலவ உதவுவது கோலினுஸ்



களிப்பில் மலரும் புன்னகை...அது கோலினுஸ் தரும் புன்னகை

ஜெப்ரி மானர்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்

REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon